# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 32

சுடர் 33 | கதிர் 136 | பங்குனி 28ஆம் நாள் | புதன்கிழமை | 11 ஏப்ரல் 2018 | வள்ளுவர் ஆண்டு 2049


## முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆர்ப்பாட்டத்தில் இல்லை!

முல்லைத்தீவு, ஏப்.11
முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்கக் கோரி வடக்கு மாகாண சபையால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் >> 06

## மாகாணத் தேர்தல்: நாளை விக்கி விளக்கமாம்

யாழ்ப்பாணம், ஏப். 11
அடுத்த வடக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் நாளை 12ஆம் திகதி விளக்கம் வழங்கப்படும் என்று . முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சூரியன் செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண முதலமைச்சராக நான் >> 06

# 10 நிமிட ஆர்ப்பாட்டம்

## முல்லைத்தீவில் சிங்களக் குடியேற்றங்களை எதிர்த்து வடக்கு மாகாண சபையினர் நேற்று நடத்தினர்



முல்லைத்தீவு, ஏப்.11
முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் >> 25

## ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நேரில் சென்று அவதானிப்பு

முல்லைத்தீவு, ஏப்.11
முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்டு தமிழர் நிலங்களை அபகரிக்கும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்டுவரும் சிங்களக் குடியேற்றங்கள், அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைகள், அத்துமீறிய கடற்றொழில் நடவடிக்கைகள் என்பவற்றை வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையிலான குழு நேற்று நேரில் >> 25

# மக்களும் கடவுளும் விரும்பினால் முதலமைச்சராக மீண்டும் போட்டி

## சுமந்திரனுக்குப் பதிலடியாக விக்னேஸ்வரன் தடாலடி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 11
நான் அடுத்த தேர்தலில் போட்டியிடவேண்டும் என்று பெருவாரியான மக்கள் விரும்புவதை நான் அறிவேன். நான் செல்லும் இடங்களில் எல்லாம் மக்களிடம் இருந்து இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது. எனது பயணம் தொடரவேண்டும் என்பது அவன் சித்தமும் மக்கள் விருப்பமும் போலும். இந்தப் >> 06

## மாகாண சபையின் அனுமதியுடன் திட்டத்தை நடத்துவதே சரியானது

சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு >> 25

## திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு முடிவு கட்டுவது மிக அவசியம்

வட மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு >> 25

## கேக் நிலைய போர்வையில் மாவாப் பாக்கு விற்பனை!

யாழ். ஐந்து சந்திப் பகுதியில் வளைத்துப் பிடித்தது பொலிஸ் >> 27



## வடக்கு புதிய அமைச்சர்களை விசாரிக்கக் குரே நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஏப். 11
வடக்கு மாகாண சபையின் புதிய அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்த, வடக்கு >> 27



## ராணுவத்தின் ஏற்பாட்டில் அழகு ராணிப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.11
இராணுவத்தினரின் அழகு ராணிப் போட்டி நேற்றுமுன்தினம் இசை நிகழ்ச்சிகளுடன் காங்கேசன்துறையில் நடத்தப்பட்டது.
யாழ். பாதுகாப்பு படை கட்டளை தளபதி >> 27

## கேப்பாபிலவுப் பிரச்சினைக்கு தீர்வு காண வலியுறுத்துவோம்

மாவை எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப்.11
கேப்பாபிலவு மக்களின் காணிப் பிரச்சினைக்கு ஏற்கனவே அரசு உடன்பட்டவாறு தீர்வு காண வேண்டும் என்று அரச தலைவரிடமும், தலைமை அமைச்சரிடமும் நாம் வலியுறுத்துவோம் என்று தெரிவித்தார் >> 25

## தாக்குதல் அச்சத்தால் தீ மூட்டி உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஏப்.11
தனக்குத் தானே தீ மூட்டிய குடும்பத் தலைவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். உயிரிழப்புக்குக் காரணம் மனைவியின் >> 06

## புத்தாண்டுக்கு முன்னர் அமைச்சரவை மாற்றம்

தயாராக இருக்க அமைச்சர்களுக்கு மைத்திரி நேற்றுப் பணிப்புரை >> 06

## மன்னார் நகர சபையில் வீடு பிரதேச சபையில் யானை

மன்னார், ஏப்.11
மன்னார் நகர சபையின் ஆட்சியைத்தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக் கைப்பற்றியது. மன்னார் பிரதேச சபையின் ஆட்சியை ஐக் >> 25

## தெல்லிப்பழை கிணற்றில் 40 கைக்குண்டுகள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப்.11
தெல்லிப்பழை வீமன்காமத்தில் பாவனையற்ற கிணறு ஒன்றிலிருந்து ஒரு தொகைக் கைக் >> 25

## வாள்வெட்டுக்களில் இருவருக்குக் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.11
கொடிகாமம், மற்றும் தெல்லிப்பழைப் பகுதிகளில் நேற்று இரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களில் இளைஞர்கள் இருவர் படுகாயமடைந் >> 25




# கல்லடிப் பாலத்திலிருந்து மீனவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஏப்.11
மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தின் கீழ் உள்ள ஆற்றிலிருந்து மீனவரின் சடலம் ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டது என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.
மட்டக்களப்பு மாரியம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த 58 வயதான கணவதிப்பிள்ளை நாதன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மீனவர் வழமை போல மீன்பிடிப்பதற்கு நேற்றுமுன்தினம் சென்று வீடு திரும்பாததையடுத்து உறவினர் தேடிய நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
உயிரிழந்தவருக்கு வலிப்பு நோய் உள்ளது எனவும் பொலிஸாரின் ஆரம்பவிசாரணையில் தெரியவந்துள்ளது.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)

# ஆசிரியரை மோதித்தள்ளியது இராணுவ வாகனம்

## கிளிநொச்சியில் சம்பவம்



கிளிநொச்சி, ஏப். 11
கிளிநொச்சி இரணைமடு அம்பாள்நகர்ப் பகுதியில் நேற்று இராணுவவாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்தார். இவர் விபத்தில் 65 வயதுடைய ஓய்வு நிலைய ஆசிரியரே படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
மற்றொரு வாகனத்தை முந்தி செல்ல முற்பட்ட இராணுவத்தினரின் வாகனம் இரணைமடுவிலிருந்து பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 62 வயதான ஓய்வு நிலை ஆசிரியரான மயில்வாகனம் படுகாயமடைந்தார். இவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# கோறளைப்பற்று வடக்கை கைப்பற்றியது த.தே.கூ

மட்டக்களப்பு.ஏப்.11
மட்டக்களப்பு கோறளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேசசபையின் அதிகாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.
மட்டக்களப்பு கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உதவித் தவிசாளரை தெரிவு செய்யும் அமர்வு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் வை.எம். சலீம் தலைமையில் நேற்று நடைபெற்றது.
வட்டார அடிப்படையில் 11 பேரும் விகிதாசார அடிப்படையில் 07 பேருமாக 18 பேர் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். பகிரங்க வாக்கெடுப்பின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கதிரவெளி வட்டாரத்தைச் சேர்ந்த சிவஞானம் கோணலிங்கம் 10 வாக்குகளைப் பெற்றுத் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். எதிர்த்துப் போட்டியிட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பில் கண்ணப்பன் கணேஷன் 8 வாக்குகளைப் பெற்றார். பிரதித் தவிசாளராக, சிறிலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்த, தி.மு.சந்திரபாலன் 10 வாக்குகளைப் பெற்றுத் தெரிவுசெய்யப்பட்டார். (ற.ரி2)



### நம்பிக்கையில்லாப் பிரேரணையில்

# சு.க இரண்டாக பிரிந்ததால் கூட்டமைப்பு பலமடைந்தது

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்

கொழும்பு, ஏப்.11
தலைமைஅமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் இரு வேறாகப் பிரிந்து நின்றதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமடைந்துள்ளது. இவ்வாறு பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
"தலைமைஅமைச்சருக்கெதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த 16 பேரும் தற்போது அரசில்நீடிக்க விரும்பவில்லை. அவர்கள் அரசிலிருந்துநீக்கப்பட வேண்டுமென ஐ.தே.க.வினர் கூற, அரசிலிருந்து வெளியேறுவதற்கு சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் மறுப்புத் தெரிவித்து வருகின்றனர். அரசுடன் தொடர்ந்து தொங்கிக்கொண்டு இருக்கவே விரும்புகின்றனர். மிக முக்கியமானகட்டங்களில்ஐக்கியதேசியக்கட்சியைத்தோற்கடிக்க முயற்சித்த அனைத்து சந்தர்ப்பங்களிலும், சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவமே அதற்கு முட்டுக்கட்டையாக இருந்து வந்தது. இந்தப் பிரச்சினையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னை நன்றாக பலப்படுத்திக்கொண்டது. தலைமைஅமைச்சருக்கு பல நிபந்தனைகளைவிதித்துள்ளது. அந்தநிபந்தனைகளின்பிரகாரம் செயலாற்றுவதற்கு அழுத்தம் கொடுப்பதற்கான பலம், அவர்களுக்குக் கிடைத்துள்ளது என்றார். (ற-ரி5)

# சல்லிக் கற்களுக்குள் மறைத்து கடத்திய மரக்குற்றிகள் பறிமுதல்



கிளிநொச்சி ஏப் 11
அனுமதிப்பத்திரம் இன்றி கடத்திய எட்டுஇலட்சம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகள் நேற்று கிளிநொச்சிப் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து இரணைமடுப் பகுதியில் வைத்து வாகன சாரதி உட்பட தடயப் பொருள்களும் கைப்பற்றப்பட்டன. சல்லி கற்களுக்குள் மறைத்து வைக்கப்பட்ட 198 தேக்குகள் மற்றும் பாலை மரக்குற்றிகள் மீட்கப்பட்டன. கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிக் கொண்டு செல்லும் போதே இரணைமடுப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளுக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ற.ரி5,6)

### கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில்

# கைது செய்யப்பட்டவர் பிணையில் விடுதலை

சாவகச்சேரி ஏப். 11
6.25 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மட்டுவிலைச் சேர்ந்த ஒருவரை சாவகச்சேரி நீதிமன்று பிணையில் செல்ல அனுமதி வழங்கியது.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மனநோயாளியான இந்த நபர் கஞ்சா பாவனை தொடர்பாக பலதடவைகள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டதுடன் மறியல் மற்றும் போதைப் பொருள்கள் பாவனைத் தடுப்பு சிகிச்சை பெற்றவர் எனவும் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து சொந்தப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற.ரி5,9)



# பரிசில் வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி ஏப்ரில் 11
தென்மராட்சிப் பிரதேச சிறுவர் கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய சிறுவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.
அத்துடன் சிறுவர் கழகங்களின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்புகளை வழங்கிய பிரதேசத்தைச் சேர்ந்த 52 தொண்டர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
பிரதேச செயலர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் ந.சிவபாலன், சிறுவர்கள், பெற்றோர்கள், கழகத் தொண்டர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ற.ரி5,9)

# யாழில் நடமாடும் விற்பனைச் சந்தை

யாழ்ப்பாணம், ஏப்.11
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வடமாகாண உள்ளூர் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் நடமாடும் விற்பனைச் சந்தை நேற்று முன்தினம் யாழ்.நகரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் இந்த உள்ளூர் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான விற்பனைக்கூடம் வீரசிங்கம் மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டது. கூட்டுறவு உற்பத்தியாளர் விற்பனைச் சங்கங்களின் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நடமாடும் விற்பனைச் சந்தை எதிர்வரும் 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற.ரி5.17)

# எதிர்க்கட்சியை எமது பிரதேசசபையூடாக இல்லாதொழிப்போம்

## நோர்வூட் பிரதேச சபையின் உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு. ஏப்.11
எதிர்கட்சி என்றால் எதிர்க்கும் கட்சி என எல்லோராலும் கூறப்படுகின்றது அந்த சிந்தனையை நோர்வூட் பிரதேச சபையினூடாக இல்லாதொழிப்போம் என்பதோடு மக்களின் நலன் சராத விடயங்களுக்கும் சூழலுக்கு தீங்கிழைக்கும் திட்டங்களுக்கும் முழுமையான எதிர்ப்பைத் தெரிவிப்போம். இவ்வாறு நோர்வூட் பிரதேச சபையின் உறுப்பினர் மு.இராமச்சந்திரன் தெரிவித்தார்
நோர்வூட் பிரதேச சபையின் 2018ஆம் ஆண்டுக்கான முதலாதுஅமர்வு புளியாவத்தை கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.
இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
" அரசியல் என்பது சாக்கடை' என்றுதான் தவறான அர்த்தம் கற்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறல்ல. அது 'பூக்கடை' என்பதை நாமெல்லாம் ஒன்றிணைந்து புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நோர்வூட் பிரதேச சபையின் ஊடாக நிரூபிக்கவேண்டும்.
அதற்காக முதல் அமர்விலேயே சகல பேதங்களையும் மறந்து உறுதிபூண்டுகொள்வோம்.
நமது நாட்டை பொறுத்தவரையில், பல சபைகளின் செயற்பாடுகள் கறைபடிந்தவையாகவே இருக்கின்றன.
இன்னும் சில சபைகள் முதல் அமர்வுக்கு முன்னதாகவே கறைபடிந்துவிட்டன. இதுவெல்லாம் எமக்கு ஒரு சாபக்கேடாகும் என்பதை நினைவுப்படுத்த விரும்புகின்றேன்.
இங்கிருக்கின்ற உறுப்பினர்களாகிய நாம் ஒவ்வொருவரும் தூய்மையான ஆடைகளையே இன்று உடுத்தியிருக்கின்றோம். அந்தத் தூய்மை எங்களுடைய மனங்களிலும் எந்நாளும் இருக்கவேண்டும்.
இங்கிருக்கின்ற 21 பேரில், 6 உறுப்பினர்களாக சகோதரிகளும் இருக்கின்றனர். அது, இந்தச் சபையின் எதிர்கால நடவடிக்கைகளை இன்னுமின்னும் பலப்படுத்தும் என நினைக்கின்றேன். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து திடசங்கற்பம் பூணுவோம் என்றார். (ற-ரி5)

# கேரள கஞ்சாவுடன் இளைஞர் கைது


வவுனியா.ஏப்.11
வவுனியாவில் கஞ்சா வைத்திருந்த ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். மல்லாவிப் பகுதியைச் சேர்ந்த 33 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பேருந்து ஒன்றை வவுனியா புதிய பலர் நிலையத்துக்கு அருகில் வைத்து சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே, வவுனியா போதைத் தடுப்புப் பொலிஸாரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். எனத் தெரிவிக்கப்பட்டது.

இவரிடமிருந்து, 4 கிலோகிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

சம்பவம் தொடர்பில், மேலதிக விசாரணைகளை வவுனியா .போதைத் தடுப்புப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2,110)

# வவுனியாவில் புதுவருடக் கொண்டாட்டம்



வவுனியா.ஏப்.11
வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் முப்படையினரின் ஏற்பாட்டில் புதுவருட விளையாட்டு விழா வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுக் காலை ஆரம்பமாகி மாலைவரை கோலாகலமாக இடம்பெற்றது.

மரதன் ஓட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டம், கிறிஸ் மரம் ஏறுதல், தலையணிச் சண்டை, கரப்பந்தாட்டம், முட்டி உடைத்தல், போன்ற போட்டிகள் இடம்பெற்றன. மாலையில் இசை நிகழ்வு, பரிசளிப்பு என்பனவும் இடம்பெற்றன.

நிகழ்வில் வன்னிப் பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், வன்னி இராணுவக் கடடளைத் தளபதி ஜெனரல் குமுதுபெரேரா மற்றும் தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர். ம.ராதாகிருஷ்ணன், வவுனியா பிரதேச செயலாளர் க.உதயராயா.வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன், ஆகியோர் கலந்து கொண்டதுடன் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள்,பொதுமக்கள் விளையாட்டு வீரர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.வீதியில் நாம் கிடக்க இவர்கள் களியாட்ட நிகழ்வு நடத்துகிறார்கள் என்று கூறி, இந்த களியாட்ட நிகழ்வுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றுமுன்தினம் வவுனியாவில் போராட்டம் நடத்திய மையும் குறிப்பிடத்தக்கது. (ற.ரி2,110)

# ஐ.தே.க. உயர் பதவிகளுக்கு கட்சிக்குள் பலத்த போட்டி

கொழும்பு, ஏப்.11
**ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவிக்கு அமைச்சர்களான நவீன் திஸாநாயக்க, அகிலவிராஜ் காரியவசம், இராஜாங்க அமைச்சர் அஜித் பி.பெரேரா ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. பொதுச்செயலாளர் பதவியை வகிப்பவர் அமைச்சுப் பதவியை வகிக்கக்கூடாது எனவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.**

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய நிர்வாக சபை எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் தெரிவு செய்யப்படவுள்ளது. கட்சி மறுசீரமைப்புக்கான நியமிக்கப்பட்ட குழுக்களின் அறிக்கைகளின் பிரகாரம் ஆரம்பகட்ட மாற்றங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

கட்சியின் தவிசாளர், பொதுச்செயலாளர், பொருளாளர் பதவிகளை வகித்தவர்கள் அவற்றிலிருந்து விலகியுள்ளனர். இந்த வெற்றிடங்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்குரிய அதிகாரம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 12 பேரடங்கிய அரசியல் சபைக்கே இருக்கின்றது.

இந்தப் பதவிகளுக்கு யாரை நியமிக்க வேண்டுமென கட்சி உறுப்பினர்கள் எழுத்துமூல கருத்துகளை முன்வைத்து வருகின்றனர். இதில் பொதுச்செயலாளர் பதவிக்கே பெரும் போட்டி நிலவுகின்றது.

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இதன்போது இது சம்பந்தமாக இறுதி முடிவு எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி மறுசீரமைக்கப்பட்டாலும் அந்தக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரான திஸ்ஸ அத்தநாயக்கவை கட்சியில் இணைக்கக்கூடாது என ஐ.தே.கவின் மூத்த அமைச்சர்கள் சிலர் வலியுறுத்தியுள்ளனர் என்று தெரியவருகின்றது. (ற)

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் பொறுப்பதிகாரி கைது

கொழும்பு.ஏப்.11
இலஞ்சம்பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

10 ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாகப் பெற்றுக் கொள்ளும் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச மற்றும் ஊழல் குற்ற விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொலன்னறுவை பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்தபோது. சட்டத்துக்கு மாறான செயல் ஒன்றை புரிவதற்காக வந்திருப்பதாக குற்றம் சுமத்தி சட்ட நடவடிக்கை எடுக்காதிருக்க குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் அந்த நபரிடம் 20 ஆயிரம் ரூபா இலஞ்சமாக கேட்டுள்ளார். அத் தொகையை 10 ஆயிரம் ரூபாவாக குறைத்துள்ளதுடன், பணத்தை வழங்கும் வரையில் பாதிக்கப்பட்ட நபரின் அடையாள அட்டை மற்றும் தொலைபேசியை பொலிஸ் உத்தியோகத்தர் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இலஞ்சப் பணத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் அடையாள அட்டை மற்றும் தொலைபேசியை திரும்ப வழங்கும் போது கோட்டை புகையிரத நிலையத்தில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2)

# துப்பாக்கியுடன் இருவர் கைது

மட்டக்களப்பு.ஏப்.11
மட்டக்களப்பு, கரடியனாறுப் பகுதியில் உள்ளூர்த் துப்பாகியுடன் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அப் பகுதியில் பொலிஸார் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதையடுத்தே சட்டவிரோதமாக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடனே இருவரும் கைது செய்யப்பட்டதாகக் கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2)

# வெலிக்கடைச் சம்பவ சந்தேகநபர்களுக்கு மறியல்

கொழும்பு, ஏப்.11
வெலிக்கடைச் சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவா, பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவின் விசாரணை அதிகாரி நியோமால் ரங்கஜீவ ஆகியோர் இந்த மாதம் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை நேற்று கொழும்பு நீதிவான் ராங்கதிஸாநாயக்க முன்னிலையில் முற்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் 27 கைதிகள் உயிரிழந்தனர். (ற-ரி5)

# தீயில் கருகி நாசமானது ஆடைத் தொழிற்சாலை

காலி.ஏப்.11
காலி, தங்பொதர பகுதியில் நேற்று அதிகாலை ஆடை தொழிற்சாலை ஒன்று தீப்பற்றியுள்ளது.

புது வருடத்தை முன்னிட்டு விற்பனைக்காக ஆடைகள் வைக்கப்பட்டிருந்தது நிலையிலேயே இத் தீ ஏற்றப்பட்டது.

தீக்கிரையான தொழிற்சாலை சுமார் 5 கோடி பெறுமதியானது என்று காலி பொலிஸார் தெரிவிக்கின்றனர். காலி நகர சபை மற்றும் இராணுவத்தின் தீயணைப்புப் படையினர் இணைந்து தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

எனினும் தொழிற்சாலை முற்றாக தீக்கிரையாகி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2)



# 40 வருடங்களின் பின்னர் வகுப்பறைக்கு அடிக்கல்

ஹொரவ்பொத்தான திம்பிரியெத்தாவெள முஸ்லிம் வித்தியாலயத்தில் சுமார் 40 வருடங்களுக்கு பின்னர் வகுப்பறைக்கட்டடம் ஒன்றுக்கான அடிக்கல் நேற்று முன்தினம் நடப்பட்டது.

கட்டடத்துக்கான சுமார் 1 கோடி ரூபா நிதியினை அனுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானினால் குவைத் நாட்டு தனவந்தரிடமிருந்து பெற்றுக்கொடுக்கப்பட்டது.

நிகழ்வில், ஐக்கிய தேசியக் கட்சியின் ஹொரவ்பொத்தான தேர்தல் தொகுதி அமைப்பாளர் பி.சஹிது, ஹொரவ்பொத்தானை பிரதேச சபைத் தவிசாளர் சாருக உதயங்க விஜயரத்ன, பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கெபித்திகொல்லேவ கல்வி வலயப் பணிமனையின் முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற.ரி2)

# வீரசிங்க உள்ளிட்டவர்களுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

கொழும்பு.ஏப்.11
கண்டி கலவரத்தின் பிரதான சந்தேகநபராகக் கருதப்படும் மகாசொஹொன் பலகாயவின் தலைவர் அமித் வீரசிங்க உள்ளிட்டவர்களின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. அமித் வீரசிங்க உள்ளிட்ட 18 நபர்களையும் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. (ற.ரி2)

# விபத்தில் இளைஞன் காயம்

வவுனியா.ஏப்.11
வவுனியாவில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

ஹைஏஸ் மற்றும் மோட்டார் சைக்கிள் மோதியே இந்த விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காமினி மகாவித்தியாலயம் பகுதியிலிருந்து பூங்கா பகுதியை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஸ்ரேசன் வீதியிலிருந்து பூங்கா நோக்கி பயணித்த ஹைஏஸ் வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் காயமடைந்துள்ளார் காயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற.ரி2,110)





# நீண்டகாலத்தின் பின்னர் வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்.ஏப் 11
அராலி மத்தி குமுக்கன் வீதி நீண்டகாலத்தின் பின்னர் புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றதாக தெரிவிக்கப்படுகிறது.
இந்த வீதியினுடாக மழை காலங்களில் பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் பயணிக்கமுடியாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் வடக்கு மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டு நிதியில் குறித்த வீதியின் 175 மீற்றர் பகுதி புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.
மேலும் குறித்தவீதியானது 2018 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதிமூலம் மீள்புனரமைப்பு செய்வதற்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வீதி புனரமைப்பு செய்வதையடுத்து அந்த மக்களின் போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ளதுடன் இவ்வீதியை திருத்த உரிய நடவடிக்கை எடுத்த வட மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் முதலமைச்சருக்கு அப்பகுதி மக்கள் தமது நன்றிகளையும் தெரிவித்துள்ளனர். மேலும் 2 ஆம் கட்டமாக 2018 ஆம் ஆண்டின் பாதீட்டில் சபை நிதியின் தொகைக்கு கொங்கிறீட்டிலான வீதி குமுக்கன் குளத்திற்கு சமாந்தரமாக அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## உற்பத்திப் பொருள்களின் விற்பனைக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப் 11
மாகாண தொழிற்றுறை திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக பிரிவில் நடத்தப்படும் தொழில் முயற்சியாளர்களின் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விற்பனைக் கண்காட்சி றியோ கிறீம் கவுஸ் முன்னால்( நல்லூர் கோவில் பின்வீதி )இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஏப். 11
யாழ் திருநெல்வேலி ஸ்ரீ காளி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய பரிபாலனசபைத் தெரிவும் ஆலய மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை மதியம் 2.30 மணிக்கு
நல்லூர் பிரதேச செயலக இந்துகலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் நகுலா இரவீந்திரராசா, மற்றும் ஜே/114 கிராம சேவகர் எஸ்.சாயிஸ்வரி ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சந்தையும், பாரம்பரிய விளையாட்டு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஏப் 11
யாழ். பிரதேச கலாசார அதிகார சபையின் கலை கலாசார ஊக்குவிப்பு வேலைத்திட்டத்துக்கு அமைவாக " சுதேசிய மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையும், பாரம்பரிய விளையாட்டு நிகழ்வும் " குருநகர் புனித யாகப்பர் ஆலய வளாகத்தில் நாளை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பாரம்பரிய உணவுகள், பொதியிடப்பட்ட சிற்றூண்டிகள் பனை, தென்னை உற்பத்திப் பொருள்கள், சிறுதொழில் உற்பத்தி பொருள்கள், பலகாரம், கலாசார மரபுரிமை, கைப்பணி, வாத்தியக்கருவிகள், புராதன பாரம்பரிய ஆடைகள், பாரம்பரிய விளையாட்டு கருவிகள், கலைப்பொருள்கள் முதலான உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. அத்தோடு பாரம்பரிய விளை யாட்டுக்கள் இடம்பெறவுள்ளதால் . ஆர்வம் உள்ளவர்கள் 0772018325 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நிகழ்வில் பங்குபற்றமுடியும் என ஒருங்கிணைப்பாளர் ப. தமிழ்மாறன் அறிவித்துள்ளார்.

# பன்னாட்டு விவகாரங்கள் தமிழில் வெளிவரவேண்டும்

*யாழ்.பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தெரிவிப்பு*



**யாழ்ப்பாணம், ஏப் 11**
**பன்னாட்டு விவகாரங்கள் தமிழில் வெளிவந்தால் அவை தொடர்பில் தமிழர் ஆகிய நாம் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பாக அமைந்து விடும் என யாழ் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.**

ஐயம்பிள்ளை தர்மகுலசிங்கத்தின் 'சமகாலத்தில் சர்வதேசம்' நூல் வெளியீட்டு நிகழ்வு நாவலர் கலாச்சார மண்டபத்தில் அண்மையில் இளைப்பாறிய சிறுவர் நிதிய பதில் பணிப்பாளர், யாழ் மாநகர சபை முன்னாள் பிரதம சுகாதார பரிசோதகர் பொ.ஜெகநாதன் தலைமையில் இடம்பெற்றது. நூலினைவெளியிட்டுவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"சமகாலத்தில் சர்வதேசம்\ என்ற நூல்கள் 30 கட்டுரைகளை தாங்கிய வண்ணம் காணப்படுகிறது. இன்று எந்தளவிற்கு அரசியல் முக்கியத்துவம் பெற்றது என்று அனைவரும் அறிந்ததே. வெளிநாடுகளில் நடக்கின்ற அனைத்து நிகழ்வுகளும் எமது தமிழ் சமூகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனாலே அனைவரினதும் எதிர்பாப்பும் அவை பற்றிய வெளியீடு வரவேண்டும் என்பதே.
இன்றைக்கு உலகில் நடக்கும் மாற்றங்கள் சர்வதேச விவகாரங்கள் தமிழில் வெளிவர வேண்டும். அவை அனைத்தும் பற்றி தமிழர் தெரிந்திருக்க வேண்டும், இவ்வளவு நாள்களாக வரவில்லை என்ற ஆதங்கம் இருந்தது. இன்றைய நிலை பின்புலத் தின் அடிப்படையில் நூல்கள் வெளிவந்தது நல்ல விடயம். அவ்வாறு இந்த நூல் வெளியிட்டதை எண்ணி மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்." என்றார். (112)

## மகா கும்பாபிஷேக நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஏப் 11
அராலி வடக்கு இலந்தைத்தாழ்வு அருள்மிகு ஸ்ரீ முருக மூர்த்தி தேவஸ்தான மகா கும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் கிரிகைகள் ஆரம்பமாகி 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை எண்ணெய்காப்பு சாத்தும் வைபவமும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சேவை நலன் பாராட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப் 11
மூத்த கூட்டுறவாளர் செல்லையா இரகுநாதனின் சேவை நலன் பாராட்டு நிகழ்வு இணுவில் மத்திய கல்லூரியில் இன்று புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் விழா நாயகனுக்கு மதிப்பளிக்கப்படுவதுடன் புண்ணியசீலம் என்ற மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது. (17)

# சுன்னாகம் வாழைக்குலைச் சந்தை வெளிமாவட்ட வர்த்தகர்களுக்குத் தாரைவார்க்கப்பட்டுள்ளதா?

*மத்திய சந்தை உட்புற வியாபாரிகள் சங்கம் அறிக்கை*

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வர்த்தக நகரான சுன்னாகத்தின் சந்தைப்பகுதியில் ஒருபகுதியை வெளிமாவட்ட வர்த்தகர்களுக்கு தாரைவார்க்கும் செயல்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது என்று பிரதேச வர்த்தகர்களினால் கவலை வெளியிடப்படப்பட்டுள்ளது. இதே வேளை இந்த நடவடிக்கையை முற்றாகக் கைவிடேவண்டுமென சுன்னாகம் மத்திய சந்தை உட்புற வியாபாரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பில் ஊடக அறிக்கையொன்றை குறித்த வியாபாரிகள் சங்கம் வெளியிடப்பட்டுள்ளது.
அதில்; சுன்னாகம் மத்திய சந்தையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் நாம் வெளிமாவட்ட வர்த்தகர்களின் எமது பிரதேசம் நோக்கிய படையெடுப்பினால் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றோம். கடந்த ஒரு தசாப்த காலமாக வெளிமாவட்ட வர்த்தகர்களின் யாழ்ப்பாணம் நோக்கிய படையெடுப்பு அதிகரித்துள்ளது. அதிலும் யாழ்ப்பாணத்தின் வர்த்தக நகரமாக விளங்கும் சுன்னாகம் நோக்கி அதிகமான வெளிமாவட்ட வர்த்தகர்கள் வருகைதந்து பாரியளவில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். இதனால் எமது பிரதேச மக்கள்தொகைக்கு தேவையான அளவுக்கு அதிகமான வர்தக நிலையங்கள் உருவாக்கப்பட்டு பிரதேச வர்த்தகர்களின் வியாபார நடவடிக்கைகள் பாரிய வீழ்ச்சியை அடையும் துர்ப்பாக்கிய நிலயை தோற்றுவித்துள்ளது. இதன்காரணமாக பலவர்த்தகர்கள் தமது பாரம்பரிய தொழில்களையே கைவிட்டு எந்தவொரு மாற்றுவழியையும் ஏற்படுத்த முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இன்னும் பல வர்த்தகர்கள் தொழில் நட்டத்தால் கடனாளிகள் ஆக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கடன் நிறுவனங்களிடமிருந்து கடன்பெற்று முதலீட்டை மேற்கொள்ளும் பிரதேச வர்த்தகர்கள் மேற்படி நிலமையால் தொழில் இடம்பெறாது கடனை அடைக்கமுடியாத நிலையில் அல்லாடி வருகின்றனர். பலர் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். இதுதவிர மேற்படி வெளிமாவட்ட வர்த்தகர்களினால் பல்வேறு சமூகப்பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி வருவதோடு சந்தேகத்துக்கிடமான நடவடிக்கைகளையும் கண்காணித்துள்ளோம். எனவே இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்கும்பொருட்டு வெளிமாவட்ட வர்த்தகர்களை எமது பிரதேசசபை அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதிகளில் தடை செய்யுமாறு ஏற்கனவே பலதடவை கோரியிருந்தோம். முன்னைய பிரதேச சபை தவிசாளரிடமும் இது பற்றி முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எமது கோரிக்கையை அலட்சியப்படுத்திவிட்டனர். தற்போதைய புதிய தவிசாளரிடமும் இதுபற்றி கோரிக்கை முன்வைத்தோம் ஆனால் அதை எவ்விதத்திலும் கருத்திலெடுக்காது விட்டுள்ளனர். தற்போது சுன்னாகம் சந்தையில் வாழைக்குலைச் சந்தைப்பகுதிக்குள் வெளிமாவட்ட வர்ர்த்தகர்களுக்கென பிரத்தியேகமாக கடைகள் அமைக்க பிரதேசசபையால் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். இது எவ்விதத்திலும் நியாயமற்ற செயலாகும். எமது கோரிக்கைக்கு முற்றிலும் எதிரான நடவடிகாகை ஆகும். நெல்லியடி உள்ளிட்ட பல இடங்களில் வெளிமாவட்ட வர்த்தகர்களை தடை செய்துள்ள நிலையில் ஏன் எமது பிரதேசத்தில் இதை நடைமுறைப்படுத்த பின்நிற்கின்றனர் எனத் தெரியவில்லை. அதற்கும் மேலாக வெளி மாவட்ட வர்த்தகர்களுக்கு சந்தையை தாரைவார்த்துக் கொடுக்க விளைகின்றனர். தொடர்ந்தும் இந்த நிலை நீடிப்பின் பிரதேசசபையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளோம் என்பதையும் தெரிவித்து நிற்கின்றோம் என்றுள்ளது. (21)

# மகளிரின் பங்கு குடும்பத்துக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் தேவை

## வடமாகாண சபை உறுப்பினர் ஜெயசேகரம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.11

மகளிரின் பங்கு குடும்பத்துக்கு மட்டுமில்லை. இந்த நாட்டுக்கும் தேவை என வடமாகாண சபை உறுப்பினர் இரத்தினலிங்கம் ஜெயசேகரம் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தின நிகழ்வு யாழ் வண்ணை நாவலர் மகா வித்தியாலய மாநாட்டு மண்டபத்தில் சங்கத் தலைவி உதயகுமார் மகேஸ்வரி தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது.

பெண்கள், எமது முன்னைய காலகட்டங்களிலே தமிழ் பண்பாடுகளை அனுசரித்து நடக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்கள். ஆனால் காலப்போக்கில் மாற்றமடைந்து, இன்றைய நவீனத்துவத்திலே பெண்கள் தம்மை நிலை நிறுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.



அரசு மற்றும் தனியார் துறைகளில் கூட சிலவற்றையே தேர்ந்தெடுத்து அதிலே தங்களை இணைத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது சகல துறைகளிலும் தங்களை இணைத்துக் கொண்டு இந்த சமூகத்துடன் சமநிகராக வாழக்கூடிய நிலையிலே வளர்ச்சியடைந்துள்ளனர்.

தமிழர் போராட்ட வரலாற்றில் கூட பெண்கள் ஆயுதமேந்தி போராடிய வரலாறு உண்டு. இன்று ஆண்களை விட சகல துறைகளிலும் கூடிய எண்ணிக்கையில் பெண்கள் உள்ளனர். அது இன்றைய பெண்களின் வளர்ச்சியையே காட்டுகின்றது.

பல துறைகளிலும் பெண்கள் தம்மை அர்ப்பணித்திருந்தாலும், அரசியலில் அவர் களின் பங்களிப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. அண்மையில் நடந்த தேர்தலிலும் பெண்களை பங்குபற்ற அழைத்தபோது குறைந்த எண்ணிக்கையானவர்களே பங்குபற்றியிருந்தார்கள்.

இலங்கை அரசு, அரசியலில், 25 வீதத்தில் பெண்கள் இணைக்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடு விதித்திருந்தும் அங்கு 25 வீதத்தை அடைவதற்கு கூட இன்று இலங்கையில் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியிருக்கிறோம். பெண்களை அரசியலில் பிரதி நிதித்துவப்படுத்துவது சிக்கலானதாக இருக்கின்றது. இன்று பல துறைகளில் அர்ப்பணிக்கும் பெண்கள் எதிர்காலத்தில் அரசியலிலும் தம் பங்கை செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் அரசிலும் நீதியான, நேர்மையான, கட்டுப்பாடான இடங்களை அவர்கள் எடுக்க முடியும்-என்றார். (எ-112)

## குடிதண்ணீருக்கு அல்லல்படும் மக்களுக்கு தண்ணீர் தாங்கி வாகனம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.11

வலி. மேற்கில் குடிநீருக்கு அல்லல்படும் மக்களின் குடிதண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய பாரவூர்தி பவுசர் ஒன்றை வழங்க முன்வரவேண்டும் என வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக உள்ளூராட்சி அமைச்சர் க.வி. விக்னேஸ்வரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

பாரவூர்தி பவுசர் பெறுவதற்கான விண்ணப்பம் எனும் தலைப்பில் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வலிகாமம் மேற்கு பிரதேசசபைக்கு உட்பட்ட பிரதேசம் 47.3 சதுர கிலோ மீற்றர் கொண்ட பரந்துவிரிந்த பாரிய பிரதேசம். இதில் 25 கிராம அலுவலர் பிரிவினுள் அண்ணளவாக 48000 ஆயிரம் பேர் உள்ளடங்கியுள்ளனர்.

பெரும்பாலான பிரதேசத்தில் குடிநீர் பெறும் நீர்நிலைகள் உப்புநீர் செறிவுடையவை.

மேலும் பொன்னாலை, அராலி கிழக்கு, சுழிபுரம் மேற்கு, அராலி தெற்கு, வட்டு மேற்கு, சங்கானை ஓடக்கரை உட்பட்ட பிரதேச மக்கள் தினமும் குடிதண்ணீர் தேவைக்காக கஷ்டப்படுகின்றனர்.

இவ்வாறான மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க அவசர - அவசிய தேவைப்பாடுகளின் கீழ் குடிதண்ணீர் வழங்க பாரவூர்தி பவுசர் வழங்கவேண்டும்.

இத்தேவைப்பாட்டினை வடமாகாண உள்ளூராட்சி அமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் வழங்க முன்வரவேண்டும் எனத் தெரிவித்தே கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (50)




பொன்னாலை பாபுஜி முன்பள்ளிப் பாடசாலைச் சிறுவர்களுக்கு, சங்கானை லயன்ஸ் கழகத்தால் விளையாட்டு உபகரணங்கள், புத்தகப் பைகள் என்பன அண்மையில் வழங்கப்பட்டன. இவற்றை சங்கானை லயன்ஸ் கழகத்தின் லயன் அரியரத்தினம் வழங்கி வைத்தார்.

## சிறுதானிய பயிர்ச்செய்கை தொடர்பான கலந்துரையாடல்

தென்மராட்சி, ஏப். 11

தென்மராட்சி தெற்கு மறவன்புலவு கமக்கார அமைப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சிறுதானியப் பயிர்ச் செய்கை தொடர்பான கலந்துரையாடல் மறவன்புலவு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை10 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் பெரும்போக அலுவலர் மற்றும் கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொள்ளவிருப்பதால் பிரதேசத்தில் சிறுதானியப் பயிர்களைப் பயிரிடுவோர் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கமக்கார அமைப்பின் தலைவர் சி. திருஞானசம்பந்தர் அறிவித்துள்ளார்.

## டெங்கு குடம்பிகள் காணப்பட்ட 19 குடியிருப்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தில் முதல் நான்கு நாள்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நீர்நிலைகளில் டெங்கு குடம்பிகள் காணப்பட்ட 19 குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க சுகாதாரத் திணைக்களத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. நடுவண் சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினரின் ஏற்பாட்டில் கடந்த மூன்றாம் திகதி தொடக்கம் ஒன்பதாம் திகதி வரை நாடளாவிய ரீதியில் டெங்கு கட்டுப்பாட்டு பரிசோதனைகள் இடம்பெற்றன.

டெங்கு வாரத்தின் ஏழு நாள்களில் முதல் நான்கு நாள்கள் நுணாவில் மேற்கு நுணாவில் மத்தி மட்டுவில் தெற்கு மட்டுவில் வடக்கு கொடிகாமம் தெற்கு தென்மட்டுவில் மட்டுவில் மத்தி ஆகிய பிரிவுகளில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது 2 ஆயிரத்து 688 இடங்கள் தரிசிப்பு மேற்கொள்ளப்பட்டதெனவும் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுநிலையில் காணப்பட்ட 206 குடியிருப்பாளர்களுக்கு துப்பரவு செய்ய கால அவகாசம் வழங்கி சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பரிசோதனையின் போது நுணாவில் பகுதியில் 5 பேரும் கொடிகாமம் தெற்குப் பகுதியில் 6 பேரும் மட்டுவில் பகுதியில் 8 பேரும் இனங்காணப்பட்டு அங்கு காணப்பட்ட நீர்நிலைகளில் டெங்கு குடம்பிகள் காணப்பட்டதால் இந்த குடியி ருப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதெனவும் தெரிவிக்கப்பட்டது. 9

## ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் 2017

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

ச. கஜனாத் 9ஏ, அ. டிலோதமன் 9ஏ, யெ. நிதுசரன் 9ஏ, ரா. சுவீஸ்கரன் 9ஏ, லேகா. யோ 9ஏ, துளசிகா 9ஏ, குளநாதன் 9ஏ, மதனிகா. க 9ஏ, பானுயா. ஜெ 9ஏ, யோ. அ. சானுயன் 8ஏ.பி, ஆ. லவகீசன் 8ஏ.பி, கேசினி. ஸ்ரீ 8ஏ.பி, சங்கவி. பே 8ஏ.பி, ம. உதயதாசன் -7ஏ.2பி, ச. தனுயன் 7ஏ.பி.சி, ஆரணி. பு 7ஏ.பி.சி, நா. கரீசன் 7ஏ.பி.சி, யுதி. சோ -7ஏ.பி.எஸ், பா. துஷாகரன் -7ஏ.2சி

**யா / வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம் புத்தூர்**

வி. நிறோசன் - 5ஏ 2பீ சீ எஸ், பி. பிரதாபன் - 2ஏ 2பீ 4சீ எஸ், க. பவீசன் - 4ஏ 2பீ 2சீ, கு. ஜீவசர்மா - ஏ 2பீ 4சீ எஸ், இ. றேகன் - 5சீ 2எஸ், ஸ்ரீ. சுதன் - பீ 3சீ 3எஸ், சு. சாருஜா - 3பீ 3சீ 3எஸ், ஜெ. ஜெசித்தா - ஏ 4சீ 3எஸ், தி. றெஜிந்தா - ஏ 3சீ 3எஸ், க. திவ்யா - ஏ 3சீ 3எஸ், யோ. நிதுசாயினி - பீ 4சீ எஸ், வி. வினோஜா - ஏ பீ 4சீ எஸ், ச. கஜனி - 2சீ 4எஸ், கு. தர்மினி - பீ 2சீ 4எஸ்.

## கட்டுரைத் தொகுப்பு வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப்.11

நூலாசிரியர் ந. மயூரரூபனின் 'புனைவின் நிழல்' கட்டுரைத் தொகுப்பின் வெளியீட்டு நிகழ்வு கரவெட்டி பிரதேச செயலகத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு பிரதேச செயலர் ஈ. தயாரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலர் ச. சிவஸ்ரீ கலந்துகொள்ளவுள்ளார். நூலின் கருத்துரைகளை யாழ் பல்கலைக்கழக சமூகவியல் துறை மூத்த விரிவுரையாளர் சு. ஜீவசுதன், எழுத்தாளர் ச. சத்தியதேவன் ஆகியோர் வழங்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (112)

## உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம் ஏப்.11

புதுவருடத்தை முன்னிட்டு வடமாகாண தொழிற்துறை திணைக்களத்தின் அனுசரணையுடன் காரைநகர் பிரதேச செயலகத்தால் உள்ளூர் தொழில்முயற்சியாளர்களின் உற்பத்திப்பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் காரைநகர் மத்தியில் அமைந்துள்ள ஆலடிச் சந்தையில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பன்னவேலை உற்பத்திகள், இனிப்புப் பண்டங்கள் போன்ற உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் மலிவான விலையில் விற்பனைசெய்யப்படவுள்ளமையால் பிரதேச மக்கள் அனைவரையும் இந்தச் சந்தையில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 11

நீர்வேலி கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாள்களுக்கு திருவிழா இடம்பெறும். எதிர்வரும் 28ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 29ஆம் திகதி காலை 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் 30ஆம் திகதி திருக்கல்யான உற்சவம் இரவு 8 மணிக்கும் முதலாம் திகதி சண்டேசுவரர் உற்சவமும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (17)

## மக்களும்...

பின் னணியில் நான் என்ன செய்ய? மக்கள் கருத்தும் மகேஸ்வர னின் கருத்துமே முக்கியம். கட்சிகளின் அனுமதி பெறாத, கரவான கருத்துக்களைக் கொண்டோரின் கருத்துக்களைக் கேட்டுக் கலவரம் கொள் ளத் தேவையில்லை.

இவ்வாறு தெரிவித்தி ருக்கிறார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். இது தொடர்பாக அவர் தானே எழுதியனுப்பும் கேள்வி, பதிலில் தெரிவித்திருந்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சராக அடுத்த தடவை போட்டியிடுவதா இல்லையா என்பது தொடர்பான அவரது இந்தக் கேள்வி பதிலில் போட்டியிடுவது குறித்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெளிவான நிலைப்பாட்டில் இல்லை என்பது தெரிவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரன் களமிறக்கப்படமாட்டார் என்று, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்த நிலையில், அவரது கருத்தை நேரடியாக நிராகரிக்காத வகையிலும் அதேசமயம் ஏற்றுக்கொள்ளாத வகையிலும் காய் நகர்த்தியிருக்கிறார் முதலமைச்சர் என்று அவர்கள் கூறுகின்றனர்.

களநிலைகளைக் கணித்து, தான் வெற்றி பெறுவார் என்பது உறுதியானால் மாத்திரமே, முதலமைச்சர் வேட்பாளராக அவர் போட்டியிடுவார் என்றும், இல்லாவிடின் உள்ளூராட்சித் தேர்தலில் பின்வாங்கியதுபோல் பின்வாங்கி விடுவார் என்றும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

முதலமைச்சரின் கேள்வி பதில் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

### நடந்தது என்ன ?

கேள்வி எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் உங்களை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த விருப்பம் இல்லாதது பற்றி சுமந்திரன் கூறியுள்ளார். அது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: என்மேல் இருக்கும் உருக்கத்தினால், பாசத்தினால், பரிவினால் என்னைக் துன்பப்படுத்தக் கூடாது என்ற மனோநிலையில் என் மாணவர் காரணங்களை அடுக்கியுள்ளார். அதன் முழுத்தாற்பரியத்தையும் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். 2013ஆம் ஆண்டு தேர்தலில் நிற்க முடியாது என்று நான் தொடர்ந்து கூறிய போது என்னைச் சமாதானப்படுத்தி தேர்தலில் நிற்க வைப்பதற்காகப் பல மாற்று யோசனைகள் முன் வைக்கப்பட்டன. இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும் நில்லுங்கள். பிறகு இன்னொருவர் ஏற்றுக் கொள்வார் என்று சிலர் கூறினார்கள். ஒரு நண்பர் 'உனக்கு என்ன பிரச்சனை இருந்தாலும் நாங்கள் தான் இருக்கின்றோமே' என்று கூறிவிட்டு தேர்தல் முடிந்ததும் வெளிநாடு சென்று விட்டார்.

வியாபாரத்துக்கான பசப்பு வார்த்தைகள் போன்றவை அவை. 'குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு' என்பது போல் காரியம் முடிந்ததும் அந்தக் கூற்றுக்களுக்கு மதிப்பில்லை. தேர்தல் முடிந்தபோது அதுவும் ஒரு லட்சத்து 33 ஆயிரத்துக்கு மேலான மக்கள் வாக்குகள் கிடைத்த பின்னர் எவருமே அது பற்றிப் பேசவில்லை. முடுக்கி விட்ட இயந்திரப் பொம்மைகள், முடுக்கியவர் முன்மொழிவுகளுக்கு ஏற்ப வடமாகாண சபையில் கூத்தாட்டத்தில் ஈடுபட்டபோதுதான் இவ்விடயம் முதன் முதலில் பேசப்பட்டது. அப்பொழுதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தின் மத்தியில் குடி கொண்டிருந்த சர்வாதிகாரப் போக்கு வெளிவந்திருந்தது. கூட்டமைப்பு கூட்டாகத் தீர்மானங்களை எடுத்ததைக் காண்பது அரிதாக இருந்தது.

### எங்களின் சுபாவம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்கவோ சிதைக்கவோ நான் நடவடிக்கைகள் எடுக்கவில்லை. அதன் தலைமைத்துவத்தின் பிழையான நடவடிக்கைகளைச் சுட்டிக் காட்டவே நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளேன்.

அரசியலுக்கு வருவேன் என்று நான் நினைத்திருக்கவில்லை. ஆனால் இறை செயலால் நான் அரசியலுக்குள் வந்துவிட்டேன். வந்த பின் எனது மக்களின் பேராதரவும் அன்பும் என்னை நெகிழ வைத்துவிட்டன. இதுவரை என்னால் முடிந்தள வுக்கு செய்யக்கூடியவற்றை செய்துள்ளேன். பல விடயங்களை செய்யமுடியாமல் அதிகார வரையறை, ஆட்சி அமைப்பு முட்டுக்கட்டைகள், குழிபறிப்புக்கள் என்று பல தடைகளை எதிர்கொண்டுள்ளேன். அதிகாரம் ஓச்சும் கட்சிக்குள்ளேயே இருந்து கொண்டு சிலர் பல விடயங்களை நாம் செய்ய விடவில்லை.

ஏன்! அடுத்த ஆறு மாதங்களினுள் எமது மக்களிடையே மனமாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கலாமா? முடியாது. பழைய பாணியில் எமக்க மீண்டும் கடுமையான எதிர்ப்பக்கள் வெளிப்படுத்தப்படும். அடுத்து உள்ளூராட்சி சபைகளிலும் இந்தவாறான நடவடிக்கைகளை எதிர் பார்க்கலாம். இது எங்கள் சுபாவம் போல் தெரிகின்றது.

### என்னால் முடியாது

எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை, படுகொலைகளை, போர்க்குற்றங்களை எல்லாம் யாருக்கோ உதவி செய்யும் நோக்கில் எம்மவர் சிலர் மறைக்க முற்படுவது போல் என்னால் மறைக்க முடியாதிருக்கின் றது. உண்மையை உலகம் உணர வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. அவற்றை வெளிக்கொண்டு வருவதற்கு என்னால் இயலுமானளவு செயற்பட்டிருக்கின்றேன். ஏகோபித்த வடமாகாண சபை இனப்படுகொலைத் தீர்மானம் இதற்கொரு உதாரணம்.

எமக்கான உதவிகளை சிங்கள ஆட்சியாளர்கள் செய்துதர முன்வராமையால் எம் புலம்பெயர் சொந்தங்களிடம் எமக்கான உதவிகளைப் பெற்று போரினால் நலிவுற்றிருக்கும் எம்மக்களின் துயர்களை துடைக்க முதலமைச்சர் நிதியம் ஒன்றுக்கான ஒப்புதலைத் தரும்படி 4 ஆண்டுகளாக வேண்டி நிற்கிறோம். மாகாண சபையின் ஆயுள்காலமும் முடிவுக்கு வருகிறது. ஆனால் இன்று வரை அதற்கான ஒப்புதல் அளிக்கப்படவில்லை. நாடாளுமன்றத்தில் செயற்படும் எமது எந்த தமிழ்த் தலைவராவது இதனை வலியுறுத்தி இருக்கின்றார்களா? போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒன்றும் கிடைக்காது போனாலும் பரவாயில்லை தனியொருவனுக்குப் பெயர் வந்து விடக்கூடாது என்ற மனோபாவத்தின் வெளிப்பாட்டை நான் அவதானிக்கின்றேன்.

### வடக்கு கிழக்கு இணைப்பு

இணைந்த வடக்கு கிழக்கில் சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வு என்ற எமது தீர்வுக் கோரிக்கையை இல்லாமல் செய்து தமிழ்த் தேசியக் கோட்பாட்டைச் சிதைக்குந் திட்டமிட்ட நடவடிக்கைகளை எதிர்க்கும் நிலைக்கு நான் கடந்த 4 ஆண்டுகளில் தள்ளப்பட்டிருந்தேன். இவ்வாறான சிதைக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக என்னால் முடிந்தளவுக்குச் செயற்பட்டு 'இணைந்த வடக்கு கிழக்கில் சுயநிர்ணய உரிமை' என்ற அரசியல் கருத்து வினைப்பாட்டை மீள நிலைநிறுத்தியுள்ளேன். எவர் முதலமைச்சர் பதவிக்கு வந்தாலும் இவற்றைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். அவர்கள் சுயநலமொன்றே குறிக்கோளாக வைத்திருப்பின் எமது போராட்டம் பிசு பிசுத்துப் போய்விடும். ஆலைகளுக்கும் சாலைகளுக்கும் ஆசைப்பட்டு அடிப்படை உரிமைகளைத் தவற விட்டு விடுவோம்.

### மக்கள் கருத்து முக்கியம்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும். இதுவே எனது வழிபாடு. எமது மக்களுக்கு நாம் செய்யவேண்டிய பணிகள் ஏராளம் உள்ளன. தற்போது பொருளாதார ரீதியாகப் பல செயற்றிட்டங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளேன்.

நான் அடுத்த தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று பெருவாரியான மக்கள் விரும்பு வதை நான் அறிவேன். நான் செல்லும் இடங்களில் எல்லாம் மக்களிடம் இருந்து இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது. எனது பயணம் தொடரவேண்டும் என்பது அவன் சித்தமும் மக்கள் விருப்பமும் போலும். இந்தப் பின்னணியில் நான் என்ன செய்ய? மக்கள் கருத்தும் மகேஸ்வரனின் கருத்துமே முக்கியம். கட்சிகளின் அனுமதி பெறாத, கரவான கருத்துக்களைக் கொண்டோரின் கருத்துக்களைக் கேட்டுக் கலவரம் கொள்ளத் தேவையில்லை.

### பதவி தேடிவரும்

ஜி.ஜி பொன்னம்பலம், இரத்தினபுரியில் கிரிமினல் வழக்கொன்றில் முன்னிலையாகி குற்றம் சாட்டப்பட்டவரை விடுவித்துக் கொடுத்தார். விடுதலையான அந்த நபர் உடனே ஜி.ஜியிடம் சென்று "சேர்! இனி எந்த வழக்கு வந்தாலும் உங்களிடமே நான் அதைக் கொண்டு வருவேன்" என்று மகிழ்ச்சியாகக் கூறினார். ஜி.ஜிக்கு இது பிடிக்கவில்லை. "என்ன சொன்னாய் நீ? எனக்கு நீ வழக்கு கொண்டு வருவாயோ? அடே! வழக்குகள் என்னைத் தேடி வருமடா! தேடி வரும்" என்றார். ஆகவே பதவிகள் வருவதாக இருந்தால் அவை தேடி வருவன.

### கண்ணாடியில் பார்த்து காரணம் கண்டறியுங்கள்

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கு என்னையே காரணம் காட்டுகின்றார்கள். சிலர் தம்மைத் தாமே கண்ணாடியில் பார்த்துக் காரணங்களைக் கண்டு பிடிக்காமல் என்னை வைகின்றார்கள். தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசுக் கட்சியிடம் இருந்து எனக்கு அழைப்பு வரக் கூடிய சாத்தியம் இல்லை. எனவே மக்கள் நன்மை கருதி கொள்கை ரீதியாக எம்முடன் உடன்படும் வேறு ஒரு கட்சிக்கூடாகத் தேர்தலில் நிற்கலாம். ஆனால் கடந்த கால அனுபவங்களின் அடிப்படையிலும் மூலோபாய ரீதியாகவும் நடைமுறை அடிப்படையிலும் அவ்வாறு நிற்பதால் பல பிரச்சினைகள் இடையூறுகள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன.

### புதிய கட்சி

புதிய கட்சி ஒன்றைத் தொடங்குமாறு பலரும் ஆலோசனை வழங்கி வருகின்றார்கள். கொள்கை ரீதியாக உடன்படும் அனைவருடனும் கூட்டணி அமைத்துப் போட்டியிடலாம் என்கின்றார்கள். அதற்குரிய காலம் கனிந்து விட்டதோ நான் அறியேன்.

எமது அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார வேணவாக்களை வென்றெடுப்பதற்கான பயணப் பாதையைத் தனிநபர்கள் தீர்மானிக்காமல் அறிவு ஜீவிகளின் பங்களிப்புடன் ஒரு நிறுவன மயப்படுத்தப்பட்ட அரசியல் செயற்பாட்டை இதுவரை காலமும் முன்னெடுத்திருப்போமானால் எம்மிடையே பிளவுகள் ஏற்பட்டிருந்திருக்காது. தெற்கில் எவர் வரப்போகின்றார் என்ன நடக்கபோகின்றது என்ற மனக் கிலேசங்களுக்கு உள்ளாக வேண்டியிருந்திருக்காது.

நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்படும் இனமாக இருக்கவேண்டி வந்திருக்காது. எமது பிரதேசங்கள் தொடர்ந்தும் திட்டமிட்ட குடியேற்றங்க ளால் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்காது. திட்டங்களுக்கு ஏற்ப நிறுவனமயப்படுத்தப்பட்ட மற்றும் ஒழுக்கம் சார்ந்த ஓர் அரசியலை மேற்கொண்டு எமது வேணவாக்களை வென்றெடுக்க சிவில் சமூகத்தினர், ஊடகவியலாளர்கள், சமூகவியலாளர்கள், புத்திஜீவிகள், மகளிர், இளையோர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணையவேண்டும்.

### கூட்டமைப்பே இல்லை

கேள்வி: அரசியல் ரீதியாக இந்த வருடம் உங்களுக்கு முக்கியமான ஒரு வருடம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உங்களை எதிர் வரும் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதற்கு முன்வந்தால் ஏற்றுக்கொள்வீர்களா?

பதில்: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது எதற்காக யாரால் உருவாக்கப்பட்டது என்பது உங்கள் எல்லோருக்குந் தெரிந்த விடயம். அதன் ஆரம்ப காலத்தில் அதனை உருவாக்கப் பாடுபட்டவர்களுடன் எனக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது.

வடக்குக் கிழக்குத் தாயகம், இறைமை, சுயநிர்ணயம் என்ற தமிழ்த் தேசியத்தின் அடிப்படைக் கூறுகளை ஐந்து கட்சிகளின் கூட்டிணைவாக முன்வைத்து உருவாக்கப்பட்டதே அந்தக் கட்சியாகும். அந்தக் கொள்கைகளுக்காகவே கடந்த மாகாணசபைத் தேர்தலில் மக்களிடம் நாம் வாக்குக் கேட்டோம். மக்களும் எமக்கு அமோக வெற்றியை பெற்றுத்தந்து என்னையும் முதலமைச்சராக்கினர். அதே கொள்கையுடைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இன்று இருக்கின்றதா? இன்று அதில் எத்தனை உருவாகக் கட்சிகள் உள்ளன? அப்படி ஓர் அமைப்பே இல்லாதவிடத்து எங்கிருந்து எனக்கு அழைப்பு வரும்? என்று அவரது கேள்வி பதில் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-5)

## புத்தாண்டு...

கொழும்பு, ஏப். 11

தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் அமைச்சரவை மறுசீரமைக்கப்படும். இந்தப் பணியை திருப்திகரமாக செய்து முடித்தால் மாத்திரமே புத்தாண்டை நிம்மதியாகக் கொண்டாட முடியும்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டம் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முற்பகல் அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்றது.

ரணிலுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம், கூட்டரசுக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடு உட்பட சமகால அரசியல் நிலவரங்கள் சம்பந்தமாக விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் பங்கேற்காவிட்டாலும், அமைச்சரவையால் இந்த வாரம் (நேற்று) எடுக்கப்படவேண்டிய தீர்மானங்கள் கட்டாயம் எடுக்கப்படவேண்டும். அது எந்தக் காரணம் கொண்டும் ஒத்திவைக்கப்படக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்கள் சுட்டிக்காட்டினர். இதன்படி நிகழ்ச்சி நிரலிலிருந்த யோசனைகள் நிறைவேற்றப்பட்டன.

அமைச்சரவை மறுசீரமைப்பு சம்பந்தமாகவும் பேசப்பட்டுள்ளது. அவ்வேளையிலேயே புத்தாண்டுக்கு முன்னர் மறுசீரமைப்பு இடம்பெறும் என்ற தகவலை மைத்திரி வெளியிட்டுள்ளார்.

"நாட்டில் அரசியல் உறுதிப்பாடற்ற நிலை ஏற்பட்டுள்ளது. அரசின் போக்கு என்னவென்பது சம்பந்தமாக அதிகாரிகளுக்கும் தெரியாமல் இருக்கின்றது. இந்த நிலமையில் புத்தாண்டை நிம்மதியாகக் கொண்டாட முடியாது. புத்தாண்டு உதயமாவதற்கு முன்னர் அமைச்சரவையில் உறுதியானதொரு மாற்றத்தை ஏற்படுத்துவேன்" என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் 13ஆம் திகதிக்குள் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்றும், புத்தாண்டு உதயமானதும், கடமைகளைப் பொறுப்பேற்கும் சுபவேளையில் அமைச்சுகளின் பொறுப்புகளை அமைச்சர்கள் ஆரம்பிக்கும் வகையில் ஏற்பாடுகள் இடம்பெறும் என்றும் நம்பகரமாக அறியமுடிகின்றது. (ஐ-5)

## தாக்குதல்...

சகோதரன் என்று விசாரணையில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

சம்பவம் யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டை சாவற்கட்டில் இடம்பெற்றது. அதே இடத்தில் வசித்த முல்லைத்தீவைச் சேர்ந்த முத்துராசா முனீஸ்வரன் (வயது -46) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

குடும்பத் தகராறு காரணமாக அவருக்கும் மனைவிக்கும் இடையில் வாய்த்தர்க்கம் இடம் பெற்றுவந்தது. மனைவியின் சகோதரரான 26 வயதுடையவர் கடந்த மாதம் 3 ஆம் திகதி தனது வீட்டில் உறக்கத்திலிருந்த குடும்பத் தலைவரை அவரது வீட்டுக்குள் அத்துமீறிச் சென்று தடி, வயர் என்பவற்றாலும் கால்களாலும் தாக்கியுள்ளார். அவர் விழித்து தாக்குதலிலிருந்து தப்பியுள்ளார். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

பின்னர் கடந்த மாதம் 7 ஆம் திகதி குடும்பத் தலைவர் வீதியில் சென்றுகொண்டிருந்போது எதிர்ப்பட்ட மனைவியின் சகோதரன், அடித்தது போதாது என்று கூறி மீண்டும் தாக்குவேன் என்று அச்சுறுத்தியுள்ளார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அதனால் தன்னை மீண்டும் தாக்குவார் என்று அஞ்சிய குறித்த குடும்பத் தலைவர் அன்றிரவு தனக்குத் தானே தீமூட்டியுள்ளார் என்று கூறப்படுகின்றது. எரிந்த நிலையில் அவரை மீட்ட அயலவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர். சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

உயிரிழப்புக்குக் காரணமானவர் மனைவியின் சகோதரரான 26 வயதுடையவரே என்று இறந்தவரின் மனைவியும், சகோதரனும் விசாரணையில் வாக்குமூலம் வழங்கியுள்ளனர். இது தொடர்பில் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப் படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தினார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-4)

## முதலமைச்சர்...

வடக்கு முதலமைச்சர் கலந்து கொள்ளவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்கக் கோரி முல்லைத்தீவுக்கு நேரில் சென்று ஆராயப்படும் என்றும், அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படும் என்றும் மாகாண சபை அறிவித்திருந்தது.

நேற்று சபையின் அவைத்தலைவர் உள்ளிட்ட அமைச்சர்கள், உறுப்பினர்கள் அங்கு சென்று நிலமைகளை அவதானித்திருந்தனர். ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர். அதில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் இதில் பங்கு கொள்ளவில்லை.

அதேவேளை, வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆன்மிகப் பயணம் மேற்கொண்டு இந்தியா பயணமாகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-21,8)

## நாளை...

நிறுத்தப் படமாட்டேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியமைக்கான பதிலை நாளை 12ஆம் திகதி வெளியிடவுள்ளேன். இந்தியாவுக்கு தனிப்பட்ட பயணமாகச் செல்கின்றேன். இருப்பினும், அரசியல் ரீதியான சந்திப்புக்களிலும் கலந்து கொள்வேன் என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார் என்று சூரியன் செய்திச் சேவை வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தால், முதலமைச்சரின் கேள்வி பதில் அறிக்கை 11ஆம் திகதியிடப்பட்டு, நேற்று வெளியிடப்பட்டிருந்தது. (ஐ-5)

## கதிர்காமத்தின் பதில் பஸ்நாயக்க நிலமேயாக திலுருவன் ராஜபக்ச

கொழும்பு, ஏப். 11
கதிர்காமத்தின் பதில் பஸ்நாயக்க நிலமேயாக திலுருவன் ராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளார்.

கதிர்காமத்தின் பஸ்நாயக்க நிலமே டி.பி குமார தற்காலிகமாக பதவி நீக்கப்பட்டதை அடுத்தே அவர் நியமிக்கப்பட்டுள்ளார். (5)

கேலிச்சித்திரம்




# மனோ வசமாகின்றது மைத்திரியின் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

### ஒரே விடயதானத்துக்கு இனிமேல் தனித்தனி அமைச்சுகள் இல்லை

கொழும்பு, ஏப். 11

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வசமுள்ள தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு, மனோ கணேசனின் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின்கீழ் வரவுள்ளது.

கூட்டரசின் அமைச்சரவை மாற்றம் நாளைமறுதினத்துக்குள் நடைபெறவுள்ளது. இதன்படி ஒரே விடயதானத்துடன் தொடர்புடைய திட்டங்களுக்கு தனித்தனியே அமைச்சுகளை நியமிக்காமல் அவை அனைத்தையும் ஒரே அமைச்சின்கீழ் கொண்டுவருவதே மைத்திரியின் திட்டமாக இருக்கின்றது. தனது இந்த நிலைப்பாட்டை நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் வெளிப்படுத்தியுள்ளார்.

அவ்வேளையிலேயே தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு, மனோ கணேசன் தற்போது வகிக்கும் அமைச்சுடன் இணைக்கப்படும் என்ற தகவலையும் மைத்திரி தெரிவித்துள்ளார். போக்குவரத்து, கல்வி உள்ளிட்ட அமைச்சுகளுக்கும் இதே நடைமுறை கடைப்பிடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (5)

## அரச தலைவர் தேர்தலில் நான் போட்டியிடுவேன்

### கோத்தபாய தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 11
அரச தலைவர் தேர்தலில் போட்டியிடத் தயார் என்றும், அதற்காக அமெரிக்க குடியுரிமையைக் கைவிடுவேன் என்றும் தெரிவித்துள்ளார் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச.

கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு அரச தலைவர் தேர்தல் குறித்து அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

'அரச தலைவர் வேட்பாளராக நீங்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாக பேசப்படுகிறது. அரச தலைவர் வேட்பாளராகப் போட்டியிடுவது பற்றியாரேனும், உங்களை அணுகினார்களா?' என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த கோத்தபாய, 'இல்லை. ஆனால் பேசப்படுகிறது. அதுபற்றி முடிவு செய்வதற்கு இன்னமும் ஒன்றரை ஆண்டுகள் இருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். அது முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைப் பொறுத்த விடயம். மிகச் சிறந்த வேட்பாளர் என்று அவரே முடிவு செய்வார். வெற்றி பெறக் கூடிய பொருத்தமான வேட்பாளர் யார் என்பது அவருக்குத் தெரியும்' -என்றார்.

'உங்களை வேட்பாளராகத் தெரிவு செய்தால், அந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு, நீங்கள் தயாரா?' என்ற கேள்விக்கு,

அவர் அவ்வாறு நினைத்தால், நான் போட்டியிடுவேன். அதற்காக முன்வருவேன். போட்டியிடுவதற்கான ஆற்றல் எனக்கு இருப்பதாக நான் நினைக்கிறேன், என்று கோத்தா குறிப்பிட்டார்.

'அமெரிக்காவில் குடியுரிமையைக் கொண்டுள்ளதால், இரட்டைக்குடியுரிமை உங்களுக்குத் தடையாக இருக்கிறது. இதனை எப்படி தீர்க்கப் போகிறீர்களா?' என்ற கேள்விக்கு, 19 ஆவது திருத்தச் சட்டத்தினால் இப்போது என்னால் போட்டியிட முடியாது. இருந்தாலும், முன்னாள் அரச தலைவர் என்னை வேட்பாளராகத் தெரிவு செய்தால், இரட்டைக் குடியுரிமையை கைவிடும் செயல்முறை செல்ல வேண்டும். அது தெளிவான குறுகிய நடைமுறைதான், என்று பதிலளித்துள்ளார். (5)

## ஐ.நா. உடன்பாட்டை ராணுவம் மீறியமைக்கு பதிலளிக்க மறுப்பு

கொழும்பு, ஏப். 11
ஐ.நா. மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் செய்து கொண்ட உடன்பாட்டை இராணுவம் மீறியுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக கருத்து வெளியிட இராணுவம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

மனித உரிமை ஆணைக் குழுவின் மனித உரிமை பதிவு ஆய்வுகள் முடிய முன்னரே, இராணுவத்தின் 49 பேர் கொண்ட அணி கடந்த பெப்ரவரி மாதம் லெபனானுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதையடுத்து, லெபனானுக்கு அனுப்பப்படவிருந்த 101 படையினரின் பயணத்தை ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைப் பணியகம் நிறுத்தி வைத்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து விடம் கேள்வி எழுப்பியிருந்தது.

எனினும், அவர் இது குறித்து கருத்து எதையும் வெளியிட மறுப்புத் தெரிவித்துள்ளார். (5)

# கூட்டமைப்பு செய்ததில் எந்தத்தவறும்இல்லை

### கூறுகிறார் அசாத் சாலி

கொழும்பு, ஏப். 11
தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கவிடம் நிபந்தனைகளை முன்வைத்து, தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும்அதிகாரம்தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கின்றது. ரணிலுக்கு எதிரான தீர்மானம் மீதான வாக்கெடுப்பில்கூட்டமைப்பு நிபந்தனை விடுத்து ஆதரவு தெரிவித்ததில் எவ்வித தவறும் இல்லை.

இவ்வாறு கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது, பொதுமக்கள் முன்னணி என்ற மொட்டுச் சின்னக்காரர்கள் தொடர்ச்சியாக செய்தியாளர் சந்திப்புக்களை நடத்தி வருகின்றனர். முன்னாள் அரச தலைவர் மகிந்தவை தலைமை அமைச்சராக்க முடியாமை குறித்து, முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கண்ணீர் விட்டு அழுகிறார். தலைமை



அமைச்சர் கனவினைக் கலைத்துவிட்டு தற்போது, எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக அழுகின்றார். சம்பந்தரை நீக்கிவிட்டு அதனைத் தமக்கு கொடுக்குமாறு கேட்கின்றார்.

இந்தநாட்டின்நிறைவேற்று அதிகார அரச தலைவராக இருமுறை பதவி வகித்த மகிந்த, கீழிறங்கி அற்பத்தனமாக எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக ஏங்குகின்றார். இப்பொழுது திருமண வீடுகளுக்கு பலவந்தமாக செல்கிறார். யாரும் அவரை அழைக்கவில்லை என்றாலும் பரவாயில்லை, அவராகவே செல்கிறார்.

கூட்டமைப்புடன், ரணில் விக்கிரமசிங்க ஒப்பந்தம் செய்து, அவர்களுக்கு நிறைய விடயங்களைக் விட்டுக்கொடுக்கவுள்ளதாக கூறுகிறார். வடக்கில் தமிழர்களின் சொத்துக்களையும், கிழக்கில் முஸ்லிம்களின் சொத்துக்களையும் போர்க் காலத்தில் இராணுவத்தினர் பலவந்தமாக பெற்றுக் கொண்டனர். அவற்றை மீளக் கொடுக்குமாறு கோருவது பிழையா? 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் மக்களிடம் பெற்ற காணிகளை மீள ஒப்படைப்போம் என்று கூறினார்கள். ரணிலுக்கு வாக்களிக்க, அதனை இப்போது செய்யுமாறு கோருவது தவறா? மக்களின் சொத்துக்களை மகிந்த அச்சுறுத்தி சூறையாடினார். அதனை மக்கள் மீளக் கோருவது தவறில்லை. அவற்றை மீளக் கோருவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு முழு உரிமையும் இருக்கிறது. இந்த அரசுடன் கலந்துரையாடி அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க, அவர்கள் கோரிய 16 விடயங்களில் 10 விடயங்களைக் கொடுக்க அரசு ஒப்புக் கொண்டமைக்காக சந்தோசப்படுங்கள் -என்றார். (5.61)

## உள்ளேயா? வெளியேயா?

### இன்று மீண்டும் கூடுகின்றது சு.கவின் மையக் குழு

கொழும்பு, ஏப். 11
தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 16 பேரும் கூட்டரசை விட்டு வெளியேறுவார்களா அல்லது இல்லையா என்பது தொடர்பில் இன்று இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

இதற்காக அந்தக் கட்சியின் மையச் செயற்குழு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று இரவு மீண்டும் கூடவுள்ளது.

ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் சுதந்திரக் கட்சியின் மைத்திரி அணி இரண்டாகப் பிளவுபட்டது. 41 பேரில் 16 பேர் ரணிலை எதிர்த்து வாக்களித்திருந்தாலும் ஏனையவர்கள் வாக்கெடுப்பிலிருந்து விலகியிருந்தனர்.

இதையடுத்து மகிந்த அணியின் யோசனைக்கு ஆதரவாக வாக்களித்த சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை கூட்டரசிலிருந்து வெளியேற்றுமாறு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அரச தலைவரை வலியுறுத்தினர். மறுபுறத்தில் அமைச்சுப் பதவிகளைத் துறப்பதற்கு தாம் தயாராகவே இருக்கின்றனர் என்று சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் அறிவித்தனர்.

இது தொடர்பில் ஆராய்ந்து இறுதி முடிவை எடுப்பதற்காக மையச் செயற்குழு நேற்றுமுன்தினம் இரவு மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடியது. முன்னாள் அரச தலைவர் சந்திரிகா அம்மையாரும் இதில் பங்கேற்றிருந்தார். சுதந்திரக் கட்சி அமைச்சர்கள், அரசை விட்டு வெளியேற வேண்டும் என்ற யோசனை நிறைவேற்றப்பட்டது.

இதன்போது அரச தலைவர் மைத்திரிபால, அவசரப்பட்டு எந்தவொரு முடிவையும் எடுக்கக்கூடாது. கட்சி என்ற வகையில் ஒருமித்த முடிவையே எடுக்கவேண்டும். 41 உறுப்பினர்களும் உறுதியானதொரு முடிவை எடுங்கள். இது சம்பந்தமாக நாளைமறுதினமும் (இன்று) கூடி ஆராய்வோம், என்று கூறியுள்ளார்.

இந்த நிலையிலேயே, இன்று மீண்டும் சுதந்திரக் கட்சியின் மையக் குழு கூடவுள்ளது. ரணிலுக்கு எதிராக வாக்களித்த சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 16 பேரும் எதிரணியில் அமர்ந்து சுயாதீன உறுப்பினர்களாக செயற்படும் முடிவையும், ஏனையவர்கள் அரசியல் தொடர்ந்தும் அங்கம் வகிக்கும் தீர்மானத்தையும் எடுப்பார்கள் என்று நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. (5)

# புதிய அரசமைப்பை வெள்ளைவான் கடத்திச் சென்றுவிட்டது! - மனோ



கொழும்பு, ஏப். 11

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகத் தயாரிக்கப்படவிருந்த புதிய அரசமைப்பை, வெள்ளைவான் கடத்திச் சென்றுவிட்டது என்பதைப் பயமின்றிப் பொறுப்புடன் தெரிவிக்கின்றேன். இவ்வாறு தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு ஊடாகத் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்போம் என வாக்குறுதியளித்துத் தான் எமது நல்லாட்சி ஆட்சியமைத்தது.

அந்த அரசமைப்பு வரும் வரையிலும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அந்த அரசமைப்பு என்பது மரத்திலிருக்கும் குருவி. மொழிச்சட்டம் என்பது கையிலிருக்கும் குருவி, கையிலிருக்கும் குருவியை நன்றாக வளர்த்து ஆளாக்க நினைக்கின்றேன்.

நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறையை இல்லாதொழிக்கும் வகையில், அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை மக்கள் விடுதலை முன்னணி, தனிநபர் தீர்மானமாகக் கொண்டுவரவுள்ளது. தமிழ் மற்றும் சிங்கள மொழியை அரச கரும மொழிகளாக்கும் வகையில், அரசமைப்பின் 21 ஆவது திருத்தத்தை, எதிர்காலத்தில் நிறை வேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளேன்.

அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தை நானே கொண்டு வரப்போகிறேன் - என்றார். (5)

## களைகட்டியது நாமலின் பிறந்தநாள் கொண்டாட்டம்

கொழும்பு, ஏப். 11

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மூத்த மகனும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தனது பிறந்தநாளை நேற்றுப் பெரும் எடுப்பில் கொண்டாடினார்.

1986ஆம் ஆண்டு பிறந்த நாமல் ராஜபக்ச தனது 31ஆவது பிறந்தநாளை நேற்றுக் கொண்டாடினார். நேற்றுக் காலை கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், அவரை வாழ்த்துவதற்காகப் பெருந்திரளானோர் அங்கு திரண்டிருந்ததுடன், பௌத்த மதத் தலைவர்கள் பலரும் அங்கு சென்றுள்ளனர். (5)

## கூட்டு அரசிலிருந்து வெளியேறவேண்டாம்

### சந்திரிகா தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 11

சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு அரசிலிருந்து வெளியேற வேண்டும் என்று அமைச்சர் அனுரபிரிய தர்சன யாப்பா கட்சியின் மையக் குழுக் கூட்டத்தில் விடுத்த வேண்டுகோளை முன்னாள் அரசதலைவர் சந்திரிகா குமாரதுங்க நிராகரித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்குச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களே காரணம். ஐக்கிய தேசியக் கட்சி காரணம் இல்லை என்றும் முன்னாள் அரச தலைவர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெளிவான தூர நோக்கோ அல்லது அரசியல் கொள்கையோ இல்லாமல் செயற்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னைய அரசில் ஊழல் கொலைகள் போன்றவற்றில் ஈடுபட்டு மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் ஏற்படுத்திக் கொண்டுள்ள இரகசிய உடன்பாடே கட்சியின் இன்றைய நிலைக்குக் காரணம் எனவும் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

அரசிலிருந்து வெளியேற விரும்புபவர்கள் பொதுமக்கள் முன்னணிக்கு ஆதரவளிக்கும் விதத்தில் அண்மைக் காலங்களில் செயற்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (5)

## உரிமையாளருக்குத் தெரியாமல் மோசடியாக காணி விற்பனை

### கில்லாடி நபர் கைது

கொழும்பு, ஏப். 11

காணியின் உரிமையாளருக்குத் தெரியாமலேயே, அந்தக் காணியைப் பிறிதொருவருக்குக் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள உறுதியின் தகவல்களை மாற்றி, போலியாக உறுதியொன்றைத் தயார் செய்து விற்பனை செய்யும் கும்பல் ஒன்றைப் பேலியகொட சிறப்புக் குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பேலியகொடை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இந்த மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும், கிடைக்கப் பெற்ற 11 முறைப்பாடுகளுக்கு அமைய 4 கோடி ரூபாவுக்கும் அதிகமான மோசடி இடம்பெற்றுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மேலும் 300க்கும் அதிகமான போலியான மற்றும் உண்மை உறுதிகள்மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

பத்திரிகை விளம்பரங்களைப் பார்த்து, விற்பனைக்கு உள்ள காணிகளைத் தேர்ந்தெடுக்கும் சந்தேக நபர், பின்னர் காணிப் பதிவாளர் அலுவலகத்துக்குச் சென்று குறித்த காணியின் உண்மை உறுதியைப் பரீட்சித்து அந்த உண்மை உறுதியில் சூட்சுமமாக மாற்றங்களைச் செய்கின்றார். அதனை மையப்படுத்தி போலி உறுதியைத் தயாரித்து, தரகர் ஊடாக காணியை விற்பனை செய்துள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் இந்த நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. சந்தேக நபரின் மினுவாங்கொடை இல்லத்தின் பின்னால் நிலத்துக்கு கீழ் சூட்சுமமாகக் கொங்றீட் தகடுகள் இட்டு மறைக்கப்பட்டிருந்த கிடங்குக்குள் இருந்து போலி மற்றும் உண்மைக் காணி உறுதிகள், மோசடிக்குப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு அடையாள அட்டைகள், வங்கி காசோலைகள் உள்ளிட்டவற்றை மீட்டுள்ளோம். போலி உறுதிகளைத் தயாரிக்கப் பயன்படுத்திய கணினிகள், காணி விற்பனைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள 28 அலைபேசிகள் மற்றும் சிம் அட்டைகளையும் கைப்பற்றியுள்ளோம் - என்றனர். (5,31)

## ஐ.தே.க. தவிசாளர் பதவி நவீனுக்கு?



கொழும்பு, ஏப். 11

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பதவிக்கு அமைச்சர் நவீன் திசாநாயக்க நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. அந்தப் பதவியை வகித்த, அமைச்சர் மலிக் சமரவிக்ரம, பதவி விலகுவதாக அறிவித்திருந்தார். இந்த நிலையிலேயே அந்த வெற்றிடத்துக்கு, நவீன் திசாநாயக்க நியமிக்கப்படலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது.


இதேவேளை, அமைச்சர் பதவியிலிருந்து விலகி விட்டு, தவிசாளர் பதவியை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு, ஐக்கிய தேசியக் கட்சியின்பின் வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, இந்த விவகாரம் தொடர்பில் கருத்துரைத்த அமைச்சர் நவீன் திசாநாயக்க, கட்சியின் தவிசாளர் பதவியை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு, உத்தியோகபூர்வமான அழைப்புகள் எவையும் எனக்குக் கிடைக்கவில்லை. கட்சியின் மேம்பாட்டுக்காகவும், வளர்ச்சிக்காகவும், முழுமையான அதிகாரங்களுடன் அந்தப் பதவி வழங்கப்படுமாயின் அதனைப் பொறுப்பேற்பதற்கு நான் தயார் - என்றார். (5)

## இந்தியா ஒதுக்கிய வாகனங்களை இறக்குமதி செய்ய முயற்சி

கொழும்பு, ஏப். 11

இந்திய அரசால் பாவனைக்கு பொருத்தமற்றது என்று தடை செய்யப்பட்ட சிறிய ரக காரை இலங்கையில் இறக்குமதி செய்வதற்கு சில அரசியல் தலைவர்களால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது. (5,31)



## யானைகளின் வழிப்பறி

கொழும்பு, ஏப். 11

புத்தளத்திலிருந்து கதிர்காமம் செல்லும் பிரதான வீதியில் யானைகள் வழியை மறித்து நின்று, அந்த வழியே செல்வோரிடம் பழங்கள் வாங்கி உண்ணும் சம்பவம் இடம்பெறுகின்றது.

இந்த யானைகளுக்கு பழங்கள் கொடுத்தால் மட்டுமே அவை வழி விடுகின்றன. இது பொதுமக்களுக்கும் பழகி விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த யானைகளைப் பற்றி தெரியாதவர்கள் அவ்வழியே செல்லும்போது யானைக்குப் பயந்து அவை செல்லும் வரை காத்திருப்பார்கள். ஆனால் பழக்கப்பட்டவர்கள் சென்றால், பழம் வழங்குவார்கள். அந்த யானைகள் உடனே அவர்களுக்கு வழி விடும்.

வாகனங்கள் வந்தால் வீதியின் மத்திக்கு வந்து வழிமறித்து நிற்கும். வாகனங்கள் அருகே சென்று தும்பிக்கையை நீட்டி பழம் கேட்கும். பழங்களை வழங்கியதும் யானைகள் வழியைவிட்டு ஒதுங்கி விடுகின்றன. (5)

## காதலியை மிரட்டிப் பணம் பறித்தவர் தந்தையுடன் சேர்ந்து கம்பி எண்ணுகிறார்

கொழும்பு, ஏப். 11

காதலியின் நிர்வாணப் படங்களை சமூக வலைத் தளங்களில் வெளியிடப் போவதாகக் கூறி அவரை அச்சுறுத்திச் சுமார் பத்து இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படும் 21 வயது இளைஞனையும் அவனது தந்தையையும் வென்னப்புவப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குடும்பத்தில் ஒரே பிள்ளையான 20வயது இளம் பெண் நீர்கொழும்பு தனியார் கல்வி நிலையமொன்றில் கல்வி பயின்று கொண்டிருந்த போது 21 வயதுடைய இளைஞனுடன் காதல் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக சந்தேக நபரான இளைஞர் இளம் பெண்ணுடன் பல தடவைகள் பாலியல் உறவை மேற்கொண்டு வந்துள்ளதாகவும், இவ்வாறான சந்தர்ப்பங்களின்போது அந்தக் காட்சிகளைச் சந்தேகநபர் தனது அலைபேசியில் பதிவு செய்து கொண்டுள்ளமை விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்த இளம் பெண்ணின் நிர்வாணப் படங்களை அவரிடம் காட்டி அவற்றைச் சமூக வலைத் தளங்களில் பதிவேற்றப் போவதாகப் பயமுறுத்தி சுமார் ஒரு வருட காலமாக அவ்வப்போது அவரிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டுள்ளமை தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த இளம்பெண், குடும்ப உறுப்பினர்களின் வங்கிக் கணக்கிலிருந்தே ஏ.டி.எம் அட்டையைப் பயன்படுத்திப் பணத்தைப் பெற்று சந்தேகநபருக்கு வழங்கியுள்ளார். பின்னர் அந்தப் பெண்ணின், தாய் வங்கிக் கணக்கைப் பரிசீலித்த போது அதில் பணம் இல்லாதிருந்ததை அவதானித்துள்ளார். அது தொடர்பில் இளம் பெண்ணிடம் கேட்டபோது அனைத்து விடயங்களையும் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் வென்னப்புவ பொலிஸ் நிலையத்தில் தாயார் முறைப்பாடு செய்துள்ளார். சந்தேக நபரும் அவரது தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளனர். (5,31)

# மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் ஆளணியின்றி உத்தியோகத்தர்கள் அவதி

## தீர்க்குமாறு பிரதேச செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 11

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில்ஆளணிப்பற்றாக்குறைநிலவுகிறது. முக்கியமானபதவிநிலைகளில் உத்தியோகத்தர்கள் இல்லை. அதனால் இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளன.

இருக்கும் குறைந்தஅளவிலானஉத்தியோகத்தர்கள் சிரமத்தின் மத்தியிலேயேபணிகளைச்செய்துவருகின்றனர். ஆளணிப்பற்றாக்குறையை முழுமை செய்தால் பிரதேசத்தில் சிறந்தசேவையைவழங்கமுடியும். இவ்வாறு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர்ந.நிரஞ்சலாதெரிவித்தார்.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக்கூட்டம் செயலகத்தில்நேற்றுமுன்தினம்இடம்பெற்றது. இணைத்தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா மட்டுமே கலந்துகொண்டு அபிவிருத்திக்குழுக்கூட்டத்தைநடத்தினார்.

ஏனைய இணைத் தலைவர்கள் அதில் கலந்துகொள்ளவில்லை. குறித்தசெயலகஅபிவிருத்திக்குழுக்கூட்டம்2016ஆம்ஆண்டுசெப்ரெம்பர் 26ஆம் திகதி இறுதியாக நடைபெற்றிருந்தது. சுமார் ஒன்றரை வருடங்களின்பின்னர்நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அங்கு வரவேற்புரையில் அவர் இந்தப் பிரச்சினையைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**வீதிகள்**

மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் வீதிகள் சீரின்மையால் தாம் கடும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளோம் என்று பிரதேச மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். இங்குபிரதேசத்தின்வீதிகள்பலகிலோமீற்றர்தூரங்களை கொண்ட நீண்ட வீதிகள். வீதிகள் சீரின்மையால் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் ஏதோ ஒருவகையில்தாமதமாகிக்கொண்டிருக்கின்றது.

குறித்தபிரதேசத்துக்குபேருந்துகள் ஏன் செல்லவில்லை என்று கேட்டால் வீதிச் சீரின்மையே காரணம் என்று கூறுகிறார்கள்.

**மருத்துவமனை**

பிரதேசத்தில்இருக்கின்றஒரேயொரு மருத்துவமனையாக நெட்டாங்கண்டல்மருத்துவமனைகாணப்படுகின்றது. அதற்கு நிரந்தர மருத்துவர் இன்மையால்அங்குசிகிச்சைக்காகச்செல்லும்பொதுமக்கள்அவதிப்படுகிறார்க்ள. அலைச்சலுக்குஆளாகிறார்கள். நிரந்தர மருத்துவர் நியமிக்கப்பட வேண்டும்.

**சமுர்த்தி**

பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பொதுமக்கள் பலர் வாழ்கின்றனர். இவர்களுக்குச் சமுத்திக் கொடுப்பனவு964பேருக்கேவழங்கப்படுகிறது. சமுர்த்திபெறாதுஏராளமான குடும்பங்கள். சமுர்த்தி தருமாறு இன்னும் கேட்டு அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்க வேண்டும்.

பிரதேசத்தில் ஒரு அங்கத்தவரைக் கொண்ட குடும்பங்கள் பல உள்ளன. அவர்களுக்கென்று ஒரு திட்டம் உருவாக்கப்படவேண்டும்.

**5 இலட்சம் ரூபா போதாது**

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுத்திட்டத்தில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 5 இலட்சம் ரூபா கொடுக்கின்றார்கள்.

இந்தத் தொகைக்குள் வீடு கட்டி முடிக்க முடியாது பயனாளிகள் பெரும்சிரமங்களைஎதிர்கொள்கின்றார்கள். அந்தத் தொகை உண்மையில் போதாதுள்ளது.

அதற்கான தொகையை அதிகரித்தால் பொதுமக்களுக்கு இலகுவாக இருக்கும்.

**காணி பெயர் மாற்றலில் சிக்கல்**

காணி தொடர்பான பிரச்சினைகள் இந்தப் பிரதேசத்தில் அதிகளவில் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் உரிமையாளர் ஒருவராகவும் தற்போது காணியில் அபிவிருத்தி செய்பவர்கள்வேறுநபர்களாகவும்இருப்பார்கள்.

இதில் காணி மாற்றி அமைப்பதில் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். அவர்களது ஆரம்ப அட்டவணையில்உள்ளபெயரைமாற்றுவதற்கானஅதிகாரம்பிரதேசசெயலகத்துக்கு இல்லை. அது தொடர்பில் உரியதீர்மானம்எடுக்கவேண்டும். காணிமாற்றுவதுதொடர்பானஇழுபறிக்கு முடிவு காணவேண்டும்.

**பொழுதுபோக்கு இல்லை**

பிரதேசத்தில்பொழுதுபோக்கு வசதிகள் இல்லை. பூங்கா, உள்ளக விளையாட்டு அரங்குகள், கலாசார மண்டபம்போன்றனஇல்லாததால் இளையோர் பொழுதுபோக்குக்கு ஏற்ற இடமின்றியுள்ளனர்.

இவற்றைஎதிர்காலத்தில் அமைக்க வேண்டும் என்று பிரதேச செயலர் நிரஞ்சலா கோரிக்கை முன்வைத்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் அனைத்துப்பிரதேசசெயலகங்களிலும்ஆளணிப்பற்றாக்குறைஉள்ளதாகக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4,ரி3)

---

திறன் விருத்திப் பயிற்சிக்கான

## இடை நேர் செலவை மாகாண சபையிலிருந்து பெற நடவடிக்கை

யாழ்ப்பாணம்.ஏப்.11

தமிழ் நாட்டில் நடைபெறவுள்ள திறன் விருத்தி பயிற்சிக்கு செல்லவுள்ள வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கான இடைநேர்செலவைவடக்குமாகாணசபையின் நிதியில் இருந்து பெற்றுக்கொடுக்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகமாகாண விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும்தெரிவிக்கப்பட்டதாவது. வடக்குமாகாணவிவசாயதிணைக்களங்களில் பணியாற்றும் விவசாய போதனாசிரியர்களுக்கான14நாள்கள் கொண்ட நவீன விவசாய முறை பயிற்சிகள் இந்தியாவில் வழங்கப்படவுள்ளன. பிரதி விவசாயப் பணிப்பாளர் இருவர் உட்பட 25பேர்இந்த பயிற்சி நெறிக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இவர்களுக்கான இடை நேர் செலவுகள் 19 இலட்சத்து 34 ஆயிரத்து 240 ரூபாவாக கணிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதியை மாகாண சபையின் நிதியின் ஊடாக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

---

## செயலக அலுவலர்களுக்கும் அதிகஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு

### வழங்குமாறு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப். 11

**கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்குக் கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு வழங் கப்படுவது போன்று அதிகஷ்டப் பிரதேச பிரதேச செயலகங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கும் கொடுப்பனவு வழங்கவேண்டும். அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

இவ்வாறுமாந்தைகிழக்குபிரதேசசெய லாளர் என்.நிரஞ்சலா தெரிவித்தார். மாந்தை கிழக்குப்பிரதேசசெயலகஅபிவிருத்திக்குழுக்கூட்டம் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. அதில்அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாந்தை கிழக்கு பிரதேசத்தில் பணி செய்கின்றஆசிரியர்களுக்கு அதிகஷ்ரப்பிரதேசம் மற்றும் கஸ்ரப்பிரதேசங்களில் பணிபுரிகின்றனர் என்ற அடிப்படையில் மேலதிக கொடுப்பனவுகள் வழங் கப்படுகின்றன.

வெளிமாவட்டங்களில்இருந்துஎத்தனையோ பிரச்சினை களுக்கு மத்தியிலும் அரச உத்தியோகத்தர்கள் பலர் பணிக்காக வந்து செல்கிறார்கள். அவர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை. குறைந்தது கஸ்ரப்பிரதேசத்துக்கான கொடுப்பனவு என்றாலும் இந்த பிரதேசத்தில் வேலைசெய்கின்ற வெளிமாவட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவேண்டும். அதன்மூலமாக அவர் கள் பணி செய்வதற்கு இலகுவாக இருக் கும். இது தொடர் பில் உரியவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்றும் பிரதேச செயலர் தெரிவித்தார். (எ-4,ரி3)

---

திறன்மிக்க மாணவர்களை உருவாக்குவதற்கான

## சிறப்பான கல்வித் திட்டம் மாகாண சபையிடம் இல்லை!

### சிவன் அறக்கட்டளை நிறுவன இயக்குனர் கொந்தளிப்பு

யாழ்ப்பாணம் ஏப் 11

இம்முறை வெளியாகியுள்ள 2017ஆம் ஆண்டு ஜி.சி.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றை நோக்குகின்றபோது போர்க் காலத்தை விட போர் நிறைவுக்குப் பின்னர் கல்வி மறுக்கப்பட்ட பிரதேசமாக வடமாகாணம் திகழ்கிறது என்பது தெளிவாகின்றது. இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்கள்.

அவர்களுக்கான ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கி கொடுத்து அவர்களை நல்ல பிரஜைகளாக மாற்றியமைப்பதற்கான சிறந்த கல்வித் திட்டம் வடமாகாணசபையிடம்இல்லை என்பதையே இம்முறை வெளியாகியுள்ள பெறுபேறுகள் உணர்த்தியுள்ளனஎன்றுசிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குனர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டம் 12ஆவது இடத்திலும் வவுனியா மாவட்டம் 18ஆவது இடத்திலும் யாழ்ப்பாணம்மாவட்டம்19ஆவதுஇடத்திலும் முல்லைத்தீவு மாவட்டம் 24ஆவது இடத்திலும் கிளிநொச்சி மாவட்டம் 25ஆவது இடத்திலும் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. அது மட்டுமன்றி பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் 623 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளதாகவும் புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

வடக்கு மாகாண மாணவர்களின் எதிர்காலக் கல்வி என்பது அவர்களுக்கு நாம் வழங்க வேண்டிய அரிய சொத்தாகும். அந்த வகையில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்ற வகையில் வட மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோர்களுக்கு முக்கிய பங்கு இருக்கின்றது. போர்க் காலப் பகுதியில் ஆறாம் இடத்தில் இருந்த வடமாகாணம் தான் தற்போது ஒன்பதாம் நிலைக்கு பின்தள்ளப்பட்டு தொடர்ந்தும் அதே தரத்தில் தக்க வைத்துக் கொண்டுள்ளதைப் பார்க்கின்றபோது தம் தலைமேல் தீயை முட்டிக் கொள்கின்ற விசயமாகப் பார்க்க வேண்டி இருக்கிறது.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தின் கல்வி நிலையின் வீழ்ச்சிக்கு வடக்கு மாகாண சபை முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும். இவர்களுடைய திறனற்ற செயற்பாடுகளே முக்கிய காரணம் ஆகும்.

வடபுல மண்ணின் எதிர்காலத்தையோ சமூக அபிவிருத்தியையோ தீர்மானிக்கும் பிரதான காரண கர்த்தாக்களாக இருக்கப் போகின்றவர்கள் எமது பாடசாலை மாணவர்களாவர். கல்வி அறிவால், மற்றும் சாதகமான உளப்பாங்கினால் கட்டி எழுப்பட வேண்டியவர்கள்.

இந்த மாணவர்களேதான் எதிர்காலத்தில் நற்பிரஜைகளாகவும் புத்திஜீவிகளாகவும் தொழில்நுட்ப விற்பன்னர்களாகவும் சமூகத்திற்கு ஒப்படைக்க கூடிய அல்லது ஒருங்கிணைக்க கூடிய பாரிய பொறுப்பைச் சுமந்தவர்களாக உள்ளனர். இவர்கள் பற்றி எல்லோருமே பாராமுகமாக இருந்து வருகின்றனர். இந்தக் கல்வி வீழ்ச்சியானது பெரும் அழிவைக் கொண்டு வந்து சேர்க்கும் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடம் இல்லை. இன்று கல்வியை முன்னேற்றுவதற்காக புலம்பெயர் தமிழ் சமூகம் தயாராக இருக்கின்றது. ஆனால் ஏனோ தெரியவில்லை. புலம் பெயர் தமிழ்சமூகத்தையும் இணைத்துக் கொண்டு வடபுல கல்வி எழுச்சியை முன்னெடுப்பதற்கு வட மாகாண சபைமுன்வருவதில்லை என்பது ஒரு புரியாத புதிராகவே இருக்கிறது என்றார். (எ)

---

## சித்திரைப்புத்தாண்டு விற்பனைச் சந்தை

யாழ்ப்பாணம்.ஏப்.11

வடக்கு மாகாண சபையின் தொழில் துறைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் சித்திரைப் புத்தாண்டு சிறப்பு விற்பனைச்சந்தை பின்வரும் பிரதேச செயலகப் பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலக வளாகம், நல்லூர் றியோ கிறீம் கவுஸ் அருகில், சண்டிலிப்பாய் பிரதேச செயலக வளாகம், தெல்லிப்பளை சகாய மாதா தேவாலய வளாகம், சங்கானை மத்திய பேரூந்து நிலையத்துக்கு அருகில், கோப்பாய் பிரதேச செயலக வளாகம், ஊர்காவற்றுறை பிரதேச செயலக வளாகத்திலும் நடைபெறும்.

மறுநாள் 12ஆம் திகதி யாழ்ப்பாணம் குருநகர் புனிதயாகப்பர் ஆலய வளாகம், காரைநகர் ஆலடி சந்தை அருகில், கரவெட்டி பிரதேச செயலக வளாகத்திலும் இடம்பெறும் என மாவட்ட தொழில்துறைத் திணைக்கள அலுவலர் தெரிவித்துள்ளார். (எ)





# கட்டிளமைப் பருவ மாணவர்களின் பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது?

ஆசிரியர்களுக்கு நேற்றுக் கருத்தமர்வு
கோரினால் இனியும் திணைக்களம் நடத்தும்

யாழ்ப்பாணம். ஏப். 11
கட்டிளமைப் பருவ மாணவர்களுக்கு, குறித்த பருவத்தில் ஏற்படும் பிரச்சினைகளை எப்படிக் கையாள்வது என்பது பற்றிய கருத்தமர்வு ஆசிரியர்களுக்கு யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரால் நடத்தப்பட்டது.

பிரதேசங்களின் பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் அல்லது பாடசாலைகளின் அதிபர்கள் அல்லது கோட்டக் கல்விப் பணிப்பாளர் அல்லது வலயக் கல்விப் பணிப்பாளரோ இதுபற்றிய கருத்தமர்வை நடத்துமாறு கோரினால் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு அதனை நடத்த முடியும் என்று திணைக்களம் தெரிவித்தது.

கட்டிளமைப் பருவம் என்பது மிக முக்கியமானது. அந்தப் பருவத்தில் அறிந்தோ அறியாமலோ பல பிரச்சினைகளுக்கு மாணவர்கள் முகம் கொடுப்பர். சகமாணவர்களாலும் இதன் தாக்கம் ஏற்பட்டிருக்கலாம். எவ்வாறெனினும் பாதிப்பு ஏற்படுமளவுக்கு இடமளிக்கக்கூடாது. அதற்கு அனுமதிக்கவும் கூடாது. அவ்வாறான பிரச்சினைகள் ஏனைய இடங்களைப் போன்றே வடக்கிலும் சில இடம்பெற்றிருக்கின்றன. ஒழுக்கம் இந்த இடத்தில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கவேண்டும்.

கட்டிளமைப் பருவத்தில் மாணவர்களுக்கு ஏற்படும் மாற்றங்கள், அது எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது பற்றிய மருத்துவ ரீதியான அறிவுறுத்தல்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றன. மருத்துவம் சம்பந்தமானது என்பதால் அது பற்றிய அதிக விளக்கங்களை சுகாதாரத் திணைக்களம் வழங்குவதே சிறப்பானது.

வடக்குமாகாணப் பாடசாலைகளில் இது பற்றிய கருத்தமர்வுகளை நடத்துதல் சிறப்பானது என்று கூறப்பட்டதன் அடிப்படையில் குறித்த கருத்தமர்வு நடத்தப்பட்டது என்று திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

புங்குடுதீவு மகா வித்தியாலத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு நேற்றும் நேற்றுமுன்தினமும் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் இந்தக் கருத்தமர்வு நடத்தப்பட்டது. மாணவர்களுக்கு, இந்தப் பருவத்தில் ஏற்படும் பிரச்சினைகளை அவர்கள் எப்படித் தீர்க்க வேண்டும், ஆசிரியர்கள் எப்படித் தீர்க்க வேண்டும் என்பது பற்றியதாகக் குறித்த கருத்தமர்வு இடம்பெற்றது.

குறித்த கருத்தமர்வின் ஊடாக ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் விடயம், குறித்த வயதில் அவர்களுக்கு ஏற்படும் மாற்றங்களால் ஏற்படும் பிரச்சினைகள், அவற்றை எப்படித் தீர்ப்பது என்பனபற்றி ஆசிரியர்கள் தாமும் அறிந்து கொள்வதோடு மாணவர்களுக்கும் அவற்றை எடுத்துரைப்பதே.

வளர்ந்துவரும் நாகரிக, மாற்றத்துக்கு ஏற்ப கட்டிளமைப் பருவ மாற்றங்களால் எத்தகைய பிரச்சினைகள் ஏற்படும், எப்படி எதிர்கொள்வது, அவற்றிலிருந்து எப்படி விலகியிருப்பது உள்ளிட்ட விடயங்களை பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறுவது மிக அரிது. அதனை ஆசிரியர்கள் எடுத்துக் கூறுவதும் அரிது. அதனால் ஆசிரியர்களுக்கு இவை பற்றித் தெளிவுபடுத்தி அவர்கள் ஊடாக மாணவர்களுக்குத் தெளிவு படுத்தி அறிவூட்டுவது நோக்கமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பயன்மிக்க இந்தக் கருத்தமர்வுகளை தற்போதைய காலத்தில் சகலரும் அறிந்திருக்க வேண்டும். அறிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். அதனை எவரும் தட்டிக்கழிக்க முடியாது. தட்டிக்கழிக்க முடியாத காலத்தில் மாணவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆசிரியர்களும் பாடசாலைகளின் அதிபர்களும் உணரவேண்டும். மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும். என்றும் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு நாள்களாக இடம்பெற்ற குறித்த கருத்தமர்வை யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின். தொற்றா நோய்களுக்கான மருத்துவ அதிகாரி எஸ்.சிவகணேஸ், சுகாதாரக் கல்வி அதிகாரி அ.ஜெயபாலன் ஆகியோர் வழங்கினர்.

புங்குடுதீவுப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கருத்தமர்வை ஏற்பாடு செய்திருந்தார். இரண்டு நாள்களும் 16 ஆசிரியர்கள் கலந்துகொண்டிருந்தனர். (எ-4)

---

மதுப்பாவனை தொடர்பான குற்றங்களைத் தடுக்க

# புத்தாண்டை முன்னிட்டு சிறப்பு கண்காணிப்பு நடவடிக்கைகள்

மதுவரித் திணைக்களம் நடைமுறைப்படுத்தியுள்ளது

யாழ்ப்பாணம், ஏப். 11
**மதுப்பாவனை தொடர்பான குற்றங்கள் மற்றும் அனுமதியளிக்கப்பட்ட மதுபான விற்பனை நிலையங்களின் சுற்றாடலில் இடம்பெறத்தக்க சட்டமீறல் செயற்பாடுகள் என்பவை இடம்பெறாது தவிர்ப்பதற்காக மதுவரித்திணைக்களம் சிறப்புக்கண்காணிப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.**

புத்தாண்டுக் காலப் பகுதியை கருத்திற் கொண்டு கடந்த 9ஆம் திகதி இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் புத்தாண்டு தினம் வரை அதாவது 15ஆம் திகதிவரை இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மேற்குறித்த காலப்பகுதியில் இடம்பெறும் குற்றச்செயல்கள் குறித்துப் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் தகவல்கள், முறைப்பாடுகளுக்கமைய மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் தேவையான நடவடிக்கைகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்படும்.

இது குறித்த அறிவுறுத்தல்கள் சகல பிராந்திய மதுவரித் திணைக்கள உயரதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் தத்தமது பகுதிகளில் குறித்த குற்றச்செயல்கள் ஏதாவது இடம்பெற்றால் 0112-045077 என்ற அலைபேசி இலக்கத்துக்கோ, 011-2877882 என்ற தொலைநகலுக்கோ தகவல் வழங்கமுடியும் என்று மதுவரித்திணைக்கள ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார். (எ)

---

நோயாளர் காவு வண்டிகள் போதியளவு இன்மையால்

# சிரமங்களை எதிர்கொள்ளும் தெல்லிப்பழை மருத்துவமனை

யாழ்ப்பாணம்.ஏப்.11
நோயாளர் காவு வண்டிகள் போதியளவு இன்மையால் பெரும் இன்னல்களை எதிர்நோக்குவதாக யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் பல்வேறு சிறப்புச் சிகிச்சை பிரிவுகள் உள்ளன. அதற்கமைவாக பல்வேறு பட்ட சிகிச்சைமுறைகளுக்குநோயாளர்களை இடம் மாற்ற வேண்டிய தேவை உள்ளது. அதற்கு எம்மிடம் உள்ள நோயாளர் காவு வண்டிகள் போதாமல் உள்ளன. 4 வண்டிகள் உள்ளன. அதில் ஒன்று பழுதடைந்தது. அந்த வண்டி தற்போது திருத்தப்பட்டுபிராந்தியசுகாதார பணிமனையில்உள்ளது. திருத்தப்பட்ட வண்டி எமக்கு மீள் கிடைத்தால் இங்குள்ள நிலைகளை ஓரளவு சமாளிக்க கூடியதாக இருக்கும். இது தொடர்பில் மருத்துவமனை நிர்வாகம் உரியவர்களிடம் வண்டியை தரும்படி கேட்டிருந்தது. மருத்துவமனையில் பாவனையில் உள்ள வண்டி ஒன்றை தந்து திருத்தப்பட்ட வண்டியை பெற்றுக்கொள்ளுமாறுசுகாதரபணிமனை கூறியிருந்தார்கள். நாள் ஒன்றுக்கு ஆய்வுகூடம், இரத்த வங்கி, கிளினிக் சிகிச்சைக் காக கொழும்புக்குநோயாளர்களை மாற்றுதல், சிறப்பு சிகிச்சை நிபுணர்களிடம் அழைத்துச் செல்லல்போன்றதேவைகளுக்காக 30தடவைகள்தற்போதுஉள்ள வண்டிகள் சேவையில் ஈடுபடுகின்றன. வெளிமாவட்டங்களுக்கு சேவையில் வண்டிகள் ஈடுபட்டால் சாரதிக்கு இரண்டு நாள் ஓய்வும், வண்டிக்கு ஒரு நாள் ஓய்வும் கொடுக்க வேண்டியது கட்டயமானது. இந்த நிலையில் எம்மிடம் உள்ள வண்டிகளைகொடுப்பதுநோயாளர்களுக்கு ஆபத்தை விளைவிக்கும்செயற்பாடாகும். ஆகவே எமக்குரிய நோயாளர் காவு வண்டியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ். திருவாகரனை தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைநிர்வாகத்திடம்இருந்து இது தொடர்பில் முறைப்பாடு ஒன்று அமைச்சுக்குகிடைத்துள்ளது. அதன் நிலை தொடர்பில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரை தெரியப்படுத்த வேண்டும் என்று பணித்துள்ளோம் - என்றார். (எ-7)

---

## சந்தர்ப்பத்தை இழந்த தொண்டராசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரிய நியமனத்தின்போது சந்தர்ப்பத்தை இழந்த ஆசிரியர்கள் 494 பேருக்கும் எதிர்வரும் 19ஆம் திகதி மீண்டும் நேர்முகத் தேர்வு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக தொண்டராசிரியர்களாகப் பணியாற்றியோருக்கு நிரந்த நியமனம் வழங்கும் நோக்கில் கடந்த ஆண்டு நேர்முகத்தேர்வு இடம்பெற்றது. தேர்வின் அடிப்படையில் பலருக்கு சந்தர்ப்பம் மறுக்கப்பட்டது. இவ்வாறு நியமனம் மறுக்கப்பட்ட தொண்டராசிரியர்கள் பலர். தமக்கும் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் எனப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். ஆளுநர் செயலகம் மற்றும் முதலமைச்சர் அலுவலகம் எனப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நோக்கில் தற்போது நேர்முகத் தேர்வுக்கான அழைப்பிதழ் கடிதங்கள் தனித்தனியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதில் இரண்டாம் கட்ட நேர்முகத் தேர்வுக்காக 494 பட்டதாரிகள் எதிர்வரும் 19ஆம் திகதி அழைக்கப்பட்டுள்ளனர். (எ-105)

---

## சாவகச்சேரி நகரசபையின் நூலகத்துக்கு அலுவலர் நியமனம்

சாவகச்சேரி ஏப் 11
சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகத்துக்கு நூலகர் சேவை தரம் 111ஐச் சேர்ந்த அலுவலரை நியமனம் செய்தார் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் நிரஞ்சன்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் பொது நூலகத்தில் கடமையாற்றிய செ.செல்வகுமார் என்பவர் உடனடியாகச் செயற்படும்வண்ணம் சாவகச்சேரி நகரசபைக்கு இடமாற்றல் செய்யப்பட்டுள்ளார் என அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையால் மீசாலை சாவகச்சேரி நுணாவில் ஆகிய இடங்களில் பொது நூலகங்கள் நடத்தப்படுகின்றபோதிலும் சாவகச்சேரி முதன்மை பொது நூலகம் மற்றும் நுணாவில் பொது நூலகம் ஆகியவற்றுக்கு நூலகர்கள் இல்லாததையும் மீசாலை பொது நூலகத்தில் கடமையாற்றும் தயாநிதி பாலச்சந்திரன் விரைவில் ஓய்வுபெறவுள்ளதையும் சுட்டிக் காட்டி மூன்று நூலகங்களுக் கும் நூலகர்களை நியமிக்குமாறு சபையின் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் உள்ளூராட்சி ஆணை யாளரைக் கேட்டிருந்தார்.

இதன் பிரகாரம் புதுக்குடியிருப்பு பொது நூலகத்தில் கடமையாற்றிய நூலகர் இடமாற்றல் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்படுத்த முயற்சிகள்

## மக்கள் அமைப்பின் தலைவர் தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஏப். 11

ஆயுத போராட்டத்துக்குள் பிளவுகளை ஏற்படுத்தி அதை பலவீனப்படுத்தியது போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவுகளை ஏற்படுத்தி பலவீனப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் தலைவர் சாணக்கியன் தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் தெரிவித்ததாவது:

"கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலை வைத்துக் கொண்டு கட்சிகள் தொடர்பிலான எந்த கணிப்பீடுகளையும் செய்ய முடியாது.

இந்தத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளைக் கட்சிகளுக்குரிய வாக்குகளாகக் கருத முடியாது. இது குடும்பத் தேர்தலாகவே பார்க்கவேண்டியதொன்றாகும்.

எதிர்வரும் மாகாணசபை தேர்தல் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எந்தவித வீழ்ச்சியும் ஏற்படவில்லை என்பதைக் காண முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்கிய ஆதரவைப் பயன்படுத்தி பல்வேறு வேலைத்திட்டங்களை வடக்கு, கிழக்கில் முன்னெடுக்க முடியும்.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயணித்து வருகின்றது.

இந்தக் காலத்தில் தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வை நாங்கள் காணாவிட்டால் எதிர்காலத்தில் அவ்வாறான தீர்வைப் பெற்றுக் கொள்வது என்பது மிகவும் கஸ்ரமான நிலையாகவே இருக்கும்.

தமிழ் மக்களுக்கான உரிமையைப் பெற்றெடுக்க வேண்டும் என்றே பல்வேறு இழப்புகளை சந்தித்துள்ளோம்.

தமிழர்களின் உரிமைக்காக முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்துக்குள் பிளவுகளை ஏற்படுத்தி அதனைப் பலவீனப்படுத்தியது போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிளவுகளை ஏற்படுத்தி அதனை பலவீனப்படுத்தலாம் என்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை எங்களால் காணமுடிகின்றது.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரால் முன்னெடுக்கப்படும் நகர்வுகள் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் நிலையில் தமிழ் மக்கள் மிகவும் சிந்தித்துச் செயற்பட வேண்டும் - என்றார். (ற-ரி5)

# நாம் தமிழ்மொழியைப் பேணிக்காக்க வேண்டும்

## கவிஞர் கந்தையா கனகசிங்கம் அறிவுரை



திருகோணமலை. ஏப்.11

'நாம் தமிழிலே பேசினால் எங்களை சிலர் தவறாக மதிப்பார்கள் என பலரும் கருவதுண்டு' இந்த நிலை மாறவேண்டும் தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா என்பதற்கிணங்க நாம் செயற்படவேண்டும்' அவ்வாறான பெருமைக்குரியது எமது தமிழ் மொழியாகும்.

இவ்வாறு மூத்த கவிஞர் கட்டைபறிச்சான் கந்தையா கனக சிங்கம் தெரிவித்தார்.

சம்பூரில் நேற்று இடம்பெற்ற முத்தமிழ் விழாவில் ' கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது.

"கல்தோன்றி மண்தோன்றாக்காலத்தே முன்தோன்றிய மூத்த மொழி தமிழ் என்று சொல்வார்கள். நாங்கள் படிக்கும் காலத்தில் இதனை ஆசிரியர்கள் கூறும் போது நாம் விளங்கிகொள்ளவில்லை.

இவ்வாறு பார்த்தால் ஏறக்குறைய உலகத்தில் உள்ள 200மொழிகளிலே தமிழ் மொழியின் செல்வாக்கு இருக்கிறது.என அறிஞர்கள் கூறுகிறார்கள். எம்மத்தியில் உள்ள சில பிரச்சைனைகள் உள்ளன. எமது சொற்களுடன் சில சொற்களை நாம் கலந்து பேசினால்தான் நாகரீகம் என நாம் கருதுகின்றோம். அவ்வாறு பேசுபவர்கள் தான் படித்தவர்கள் என நாம் நினைக்கின்றோம்.

நாங்கள் எமது பிள்ளைக்கு தமிழ் தெரியாது என்றால் அதனைப்பெருமையாக சொல்லும் மக்களாகவுள்ளோம்.

எங்களுக்கு வேறு சான்று எதுவும் தேவையில்லை. தமிழென்று சொல்லடா.தலைநிமிர்ந்து நில்லடா என்பது பகிடியான விடயமல்ல. ஆகவே அந்த நிலமையை நாம் மாற்ற வேண்டும் - என்றார். (ற-ரி5)



தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சில் அமைக்கப்பட்ட நவீன அழைப்பு நிலையத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் அமைச்சு வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அமைச்சின் செயளாலர், அமைச்சு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி5)

# மட்டக்களப்பில் சிறுவர் சந்தை

மட்டக்களப்பு. ஏப்.11

அக்கரைப்பற்று பதுர் வித்தியாலயத்தில் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு நேற்று பாடசாலையின் அதிபர் மௌலவி எம்.கே.அஹமட் சியாத் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எச்.பௌஸ் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் ஏ.கே.ஏ.பாஹீம், ஆரம்பப்பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.அபூதாஹிர்,பாடசாலை மேம்பாட்டு உத்தியோகத்தரும், சேவைக் கால ஆசிரிய ஆலோசகருமான எம்.ஏ.தாஹிர், முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.இக்பால், ஆசிரிய ஆலோசகர் மௌலவி என்.ரீ.நஸீர், ஜீ.ஐ.இசட் நிறுவனத்தின் உத்தியோகத்தர் சந்திரிக்கா, பாடசாலை அபிவிருத்திக்குழுவின் செயலாளர் டபிள்யு.றக்கீப், பாடசாலை அபிவிருத்திக் குழுவின் முன்னாள் செயலாளர் எம். அனஸ் அதிபர்கள், ஆசிரியர்கள் உட்படப் பாடசாலையின் அபிவிருத்திக்குழுவின் உறுப்பினர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி5)

# வானும் டிப்பரும் மோதி விபத்து: 11 பேர் காயம்

ஹற்றன், ஏப்.11

ஹற்றன் செனன் பகுதியில் நேற்று முன்தினம் மாலை வானும் டிப்பரும் மோதி விபத்துக்குள்ளானதில் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் டிக்கோயா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து வெலிஓயாப் பகுதியை நோக்கிச் சென்ற வானும் கினிகத்தேனையிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற டிப்பரும் மோதியே விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.

வானின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதாலேயே எதிரே வந்த டிப்பர் மோதி விபத்துக்குள்ளானது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகைளைக் ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# கண்டியில் தீ விபத்து மூவர் உயிரிழப்பு

கண்டி. ஏப்.11

மெனிக்ஹின்ன ரஜவெல்லப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தீ விபத்து நேற்றுக் காலை நடந்தது.

36 வயதான தந்தை, 13 வயதான மகள் மற்றும் 5 வயதான மகன் ஆகியோர் இந்தச் சம்பத்தில் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ பரவியமைக்கான காரணம் தெரியாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (றரி5)



# கிளர்ச்சிக் குழுவுடன் பேச்சு நடத்த தயார்

## சிரியா அறிவிப்பு

டமஸ்கஸ், ஏப். 11



சிரியாவின் கவுட்டா நகரைத் தொடர்ந்து அடுத்ததாக டௌமா நகரில் மிகப்பெரும் தாக்குதலை சிரிய அரசு நடத்தவுள்ளது என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் டௌமாவில் உள்ள ஆயுதக் குழுவுடன் பேச்சு நடத்தச் சம்மதம் தெரிவித்தது சிரிய அரசு.

சிரிய அரசுக்கு எதிராக ஏகப்பட்ட கிளர்ச்சிக் குழுக்கள் போராடி வருகின்றன. அனைத்தும் அதிபர் அசாத் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையைத்தான் வலியுறுத்துகின்றன. அலெப்போ நகர் கடந்த வருடம் கிளர்ச்சிக் குழுவிடம் இருந்து மீட்கப்பட்டது. கவுடாவில் தற்போது அண்மைக்காலமாக போர் இடம்பெற்று வருகிறது. இந்த நகரம் விரைவில் அரச தரப்பின் கட்டுப்பாட்டில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கவுடாவைத் தொடர்ந்து டௌமா நகரில் மிகப் பெரும் தாக்குதலை நடத்த சிரிய - ரஷ்யப் படைகள் திட்டமிட்டு வந்தன. எனினும், டௌமா நகரில் ஜெஸ் அல் இஸ்லாம் என்ற ஆயுதக் குழு ஆயுதங்களைக் கைவிட்டு மக்களுடன் மக்களாக வாழ்வதற்குத் தயார் என்று அறிவித்திருந்தது.

இந்த நிலையில் அந்த ஆயுதக் குழுவுடன் பேச்சு நடத்த சிரிய அரசு தயாராகவுள்ளது என்று தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# சீனாவின் வர்த்தகம் முட்டாள் தனமானது

## ட்ரம்ப் பாய்ச்சல்

வொஷிங்டன், ஏப். 11

சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே சமீப காலமாக வரி விதிப்புப் பிரச்சினைகள் நீடித்து வரும் நிலையில், சீனாவின் வர்த்தகம் முட்டாள் தனமானது என்று குறிப்பிட்டார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

"சீனாவிலிருந்து அமெரிக்காவுக்கு கார் இறக்குமதி செய்யப்படுகிறது என்றால் 2.5 சதவீதமான வரிதான் விதிக்கப்படுகிறது. ஆனால் மாறாக அமெரிக்காவிலிருந்து சீனாவுக்கு ஒரு கார் செல்கிறது என்றால் 25 சதவீத வரி விதிக்கப்படுகிறது.

இது என்ன சுதந்திர வாணிபமா, நியாய வர்த்தகமா? இது 'முட்டாள் வர்த்தகம்'. பல ஆண்டுகளாக இப்படித்தான் நடக்கிறது" என்று ட்ரம்ப் தனது ருவிற்றரில் நேற்றுப் பதிவிட்டார். (ம)



போர்த்துக்கலின் லிஸ்பன் நகரில் காளை அடக்குதல் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தப் போட்டியின் போது எடுக்கப்பட்ட ஒளிப்படமே இது. பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் இந்தப் படத்தை வெளியிட்டது. (ம)



# செவ்வாய் கிரகத்தில் 'ரோபோ' தேனிக்கள்

அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் செவ்வாய் கிரக ஆராய்ச்சிக்கு 'ரோபோ' தேனீக்களை அனுப்ப திட்டமிட்டுள்ளது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

செவ்வாய் கிரகத்துக்கு 'ரோவர்' கருவியை நாசா அனுப்பியுள்ளது. அது ஆராய்ச்சிகள் செய்து முடிவுகளை பூமிக்கு அனுப்பி வருகிறது. அது மிக மெதுவாக நகர்ந்து ஆய்வு செய்கிறது. பூமிக்கு தகவல்களை அனுப்ப அதிக காலமாகிறது. அதிக எரிபொருள்களையும் எடுத்துக் கொள்கிறது. எனவே 'ரோவர்' கருவிக்குப் பதிலாக 'ரோபோ' தேனிக்களை அறிமுகப்படுத்துகிறது நாசா. 20 தேனிக்கள் முதல் கட்டமாக அனுப்பப்படவுள்ளன. (ம)

# சவூதி அரேபியாவில் 33 லட்சம் கோடி செலவில் வருகிறது சூரிய மின்திட்டம்

ரியாத், ஏப். 11

சவூதியில் இலங்கை மதிப்பில் சுமார் 33 லட்சம் கோடி ரூபா செலவில் சூரிய மின்திட்டம் அமைக்கப்படவுள்ளது.

தற்போது பன்னாட்டு அளவில் சூரிய மின்திட்டத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இந்த நிலையில் எண்ணெய் வளம் மிக்க நாடான சவூதி அரேபியாவில் உலகிலேயே மிகப்பெரிய சூரிய மின் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இலங்கை மதிப்பில் சுமார் 33 லட்சம் கோடி ரூபாவில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. சவூதி அரேபியாவின் நிதி நிறுவனமும், ஜப்பானின் நிறுவனமொன்றும் இணைந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளன. (ம)



# அணுவாயுதப் பரவலாக்கத் தடை குறித்து ட்ரம்புடனான சந்திப்பில் பரிசீலிக்கப்படும்

## வடகொரியா அறிவிப்பு

பியாங்யாங், ஏப். 11



அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வடகொரியா அதிபர் ஜி ஜின் பிங் இருவருக்கும் இடையிலான சந்திப்பு அடுத்த மாதம் நடைபெறவுள்ள நிலையில், இந்தச் சந்திப்பில் அணுவாயுதப் பரவலாக்கத்துக்கான தடை குறித்தும் பரிசீலிக்கப்படும் என்று நேற்று அறிவித்தது வடகொரியா.

பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறி தொடர்ந்து ஆயுத, அணுவாயுதச் சோதனைகளை நடத்திவந்தது வடகொரியா. இதனால் வடகொரியாமீது ஐ.நா. சபை கடும்பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தது. அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகியனவும் தனித்தனியாக தடைகளை விதித்திருந்தன. தென்கொரியாவில் அண்மையில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் தொடரில் கலந்துகொண்டதை அடுத்து வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இணைக்கம் ஏற்பட்டது. தென்கொரியாவுடன் பகையை மறந்து புதிய அத்தியாயம் எழுதத் தயார் என்று கிம்ஜோங் உன் அறிவித்தார். இதையடுத்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கிம் ஜோங் உன் இடையிலான சந்திப்பு அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பில் கல்தாலோசிக்கும் விடயங்கள் குறித்து தற்போது வெளியிடப்பட்டு வருகிறது. இதன்படி அணுவாயுதப் பரவலாக்கத் தடை குறித்தும் பரிசிலிக்கப்படும் என்று வடகொரியா அறிவித்தது. (ம)



# சிரியாவை தாக்கியது இஸ்ரேல்!

## இரசாயனத் தாக்குதலுக்குப் பதிலடி!

டமஸ்கஸ், ஏப். 11

சிரியாவின் கவுட்டா நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதலில் சுமார் 100 பொது மக்கள் உயிரிழந்தனர். அவர்களில் பலர் குழந்தைகள். இந்தத் தாக்குதலை சிரிய அரசே மேற்கொண்டது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியது. இதையடுத்து சிரிய அரசுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், சிரியாவின் இராணுவத் தளத்தின் மீது வான் தாக்குதலை நடத்தியது இஸ்ரேல்.

சிரியத் தலைநகர் டமஸ்கஸுடன் எல்லையைப் பகிரும் கவுட்டா நகரில் அண்மைக் காலமாக போர் இடம்பெற்று வருகிறது. சிரிய அதிபர் அசாத்துக்கு எதிரான ஆயதக் குழுவின் பிடியில் இருந்த இந்த நகர் தற்போது அரச தரப்பின் கட்டுப்பாட்டுக்குள் வரும் நிலையே உள்ளது. அங்கு கடந்த 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உலங்கு வானூர்திகள் மூலம் இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் சுமார் 100 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்கள். சிரியாவில் செயற்பட்டுவரும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்தத் தாக்குதலை உறுதிப்படுத்தியது. சிரிய அரசே இந்தத் தாக்குதலை நடத்தியது என்று அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் குற்றம் சுமத்தின. விரைவில் இதற்குப் பதிலடி கொடுக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரித்திருந்தார். இதையடுத்து, இஸ்ரேலின் எப்.15 போர் வானூர்திகள் சிரியாவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள டி4 வானூர்தித் தளத்தின் மீது தாக்குதல் நடத்தின என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது. (ம)

## சிரியாவுக்கு எதிரான ஆதாரங்கள் எதுவுமில்லை

### ரஷ்யா அறிவிப்பு

மொஸ்கோ, ஏப். 11

சிரியாவின் கவுட்டா நகரில் கடந்த 8ஆம் திகதி நடத்தப்பட்டதாகச் சொல்லப்படும் இரசாயனத்தாக்குதலின் பின்னணியில் சிரியா உள்ளது என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்று தெரிவித்தார் ரஷ்ய அயலுறவுத் துறை அமைச்சர் செர்கெய்.

"எங்களது இராணுவ சிறப்பு அதிகாரிகள், சிரியன் ரெட் கிரெசென்ட் என்ற அமைப்பின் பிரதிநிகளுடன் கவுட்டாவுக்குச் சென்றனர். அங்கே குளோரின் அல்லது வேறு ஏதேனும் இரசாயன பொருள்கள் அங்குள்ள மக்கள் மீது பயன்படுத்தப்பட்டதற்கான எந்த ஆதாரத்தையும் கண்டுபிடிக்கவில்லை. ஏனைய ஒருசில நாடுகள் சொல்லும் தாக்குதலுக்கும் அவ்வாறு அந்தத் தாக்குதல் உண்மையென்றால் அது சிரியாவாலேயே நடத்தப்பட்டது என்பதற்கும் எந்த ஆதாரமும் இல்லை" என செர்கெய் மேலும் தெரிவித்தார். (ம)

## தொடர் நிலநடுக்கம் ஜப்பானில் வரலாம்

டோக்கியோ, ஏப். 11

ஜப்பானில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தைப் போன்று தொடர்ச்சியான நிலநடுக்கங்கள் அங்கு ஏற்பட வாய்ப்புள்ளது என்று ஜப்பான் புவியியல் ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

ஜப்பானின் மேற்கு பகுதியில் ஹோன்சு தீவில் உள்ள ஹிரோசிமா நகரில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. ஹிரோசிமா நகரில் எதிர்வரும் நாள்களில் இதே போன்று சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும், மக்கள் விழிப்புடன் இருத்தல் அவசியம் என்றும் ஜப்பான் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. (ம)



இஸ்ரேலால் கடந்த இரண்டு வாரங்களில் நடத்தப்பட்ட தாக்குதலில் 30 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ள நிலையில், இஸ்ரேலில் அத்துமீறல்களைக் கண்டித்து காசாவில் நடத்தப்பட்டுவரும் தொடர் போராட்டத்தில் நேற்றுமுன்தினம் பங்கெடுத்த பலஸ்தீனப் பெண்களின் ஒளிப்படமே இது. (ம)

## ஐ.பி.எல். தொடரை நிறுத்துமாறு அண்ணாசாலையில் போராட்டம்

காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்குமாறு கோரி சென்னை - அண்ணா சாலையில் நேற்று மாலை மறியல் போராட்டம் இடம்பெற்றது.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று இந்திய உச்சநீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும் இதுவரை புதுடெல்லி அரசால் அதற்குரிய நகர்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படாமைக்கான எதிர்ப்பலை அப்படியே ஐ.பி.எல். தொடருக்கு எதிராகவும் திரும்பியுள்ளது. நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் நேற்றைய ஆட்டம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் சென்னை - கொல்கத்தா அணிகள் மோதின. இந்த ஆட்டத்துக்கு முன்னதாக சென்னை சேப்பாக்கம் மைதானத்துக்கு முன்பாக போராட்டம் நடத்தப்படலாம் என்று ஏற்கனவே எச்சரிக்கப்பட்டது. இந்த நிலையில் சேப்பாக்கத்துக்குச் செல்லும் அண்ணா சாலையில் நேற்று மாலை மறியல் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் போக்குவரத்து கடும் பாதிப்புக்கு உள்ளானது என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

## 500 கொலைகளால் ஆன ஓவியம் இது!

சீனாவைச் சேர்ந்த லி ஸெங், க்வான்ஸொவ் பல்கலைக் கழகத்தில் நான்காம் ஆண்டு ஓவியக்கலை பயின்று வருகிறார். சமீபத்தில் வண்ணத்துப்பூச்சிகளின் இறக்கைகளை வைத்து இவர் உருவாக்கிய ஓவியம் அதிக வரவேற்பையும் அதிக எதிர்ப்பையும் பெற்று வருகிறது.

"இந்த ஆண்டு நான் ஓவியமொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். என் நண்பர்கள் இதுவரை எவரும் பயன்படுத்தாத பொருளை வைத்து ஓவியத்தை உருவாக்கச் சொன்னார்கள். யாருமே பயன்படுத்தாத பொருளைப் பல நாள்கள் யோசித்தேன். ஆராய்ச்சியும் மேற்கொண்டேன். இறுதியில் வண்ணத்துப் பூச்சிகளின் இறக்கைகளை



வைத்து ஓவியத்தை உருவாக்க தீர்மானித்தேன். புகழ் பெற்ற ஓவியர் வான்காவின் உருவப்படத்தை உருவாக்குவதற்கு எனக்கு சுமார் 500 வண்ணத்துப் பூச்சிகள் தேவைப்பட்டன. அதற்காக வேட்டையில் இறங்கினேன். ஆரம்பத்தில் வண்ணத்துப் பூச்சிகளைக் கொல்கிறோமே என்று வருத்தமாக இருந்தது. சில நாள்களில் இறந்துபோகும் வண்ணத்துப் பூச்சிகளுக்கு மறுவாழ்வு அளிக்கிறோம் என்று என்னை நானே சமாதானம் செய்துகொண்டேன். வண்ணத்துப் பூச்சிகளைப் பிடித்து, பதப்படுத்தி, ஓவியத்தில் கொண்டுவருவது நான் நினைத்ததைப்போல் அவ்வளவு எளிதாக இல்லை. என்னுடைய இந்த ஓவியம் எல்லோரையும் கவர்ந்துவிடும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் பேராசிரியர்கள் உட்பட பலரும் என்னைக் கண்டித்துவிட்டனர். இந்த ஓவியம் உருவாக்கியதில் இப்போதுவரை எனக்குக் குற்றவுணர்வு ஏற்படவில்லை. இந்த ஓவியத்தின் அழகையும் உழைப்பையும் மதிப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களின் பாராட்டு எனக்கு ஆறுதலைத் தருகிறது" என்கிறார் லி ஸெங். (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அடுத்த முதலமைச்சர் வேட்பாளருக்கான மோதல்

வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக அடுத்த தேர்தலில் போட்டியிடப் போகின்றவர் யார் என்கிற சூடான விவாதம் ஆரம்பித்துவிட்டது. வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் முடிவதற்கு இன்றும் 6 மாதங்கள் இருக்கின்றன. அது முடியும் தறுவாயில் அல்லது முடிந்த சில மாதங்களில் மாகாண சபைக்கான தேர்தல் நடக்கலாம். நடக்காமலும் போகலாம்.

மாகாண சபைகள் திருத்தச் சட்டத்தை கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியபோது ஒரு வருடத்துக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக அரசு அதில் தெரிவித்திருந்தது. பதவிக் காலம் முடிவடைந்த மாகாண சபைகளுக்குத் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்கிற வலியுறுத்தல் தீவிரமானபோது, அதனை ஒத்தி வைத்து எல்லா மாகாண சபைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தலை நடத்தப்போவதாக அரசு அறிவித்தது.

அரசின் அந்த முடிவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு அப்படிச் செய்வது பிழை என்று தீர்ப்புக் கூறப்பட்டபோது, பின்கதவால் மாகாண சபைகள் தேர்தல்கள் தொடர்பான திருத்தத்தை நிறைவேற்றியது அரசு. அதன் மூலம் எல்லா மாகாண சபைகளுக்கும் ஒரு வருட காலத்தில் தேர்தல் நடத்தப்படும் என்றும் அந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டது.

ஆனால், உள்ளூராட்சித் தேர்தலிலும் பின்னடைவைச் சந்தித்திருக்கும் நிலையில் ஏதாவது திருகுதாளங்களைச் செய்து மீண்டும் மாகாண சபைத் தேர்தல்களை அரசு பின்போடாது என்று சொல்வதற்கில்லை.

இப்படி இந்த வருடத்தில் மாகாண சபைத் தேர்தல் நடக்குமா நடக்காதா என்பதே அறுதியாகத் தெரியாத நிலையிலும் வடக்கு மாகாண சபையின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் யார் என்கிற விடயம் சூடுபிடித்திருக்கிறது.

அடுத்த முதலமைச்சராக தற்போதைய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை நிறுத்தப்போவதில்லை என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார். விக்னேஸ்வரன் 2 வருடங்களுக்கு மட்டுமே பதவியில் இருப்பேன் என்று கூறிவந்தவர், அதனால் அவரைத் தொடர்ந்தும் துன்பப்படுத்தக்கூடாது என்று தெரிவித்திருந்தார்.


ஆனால், முதலமைச்சர் வேட்பாளரைப் பொறுத்த நேரத்தில் தெரிவு செய்வோம் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்திருக்கிறார். விக்னேஸ்வரன்தான் அடுத்த வேட்பாளர் என்று அவர் உறுதிப்படுத்தாத நிலையையும் அண்மைக்காலமாக கூட்டமைப்புத் தொடர்பில் சுமந்திரன் முன்கூட்டியே தெரிவிக்கும் கருத்துக்கள்தான் பின்னர் கூட்டமைப்பின் முடிவுகளாக மாறுகின்றன என்பதைப் பார்க்கும்போதும் கூட்டமைப்பின் வேட்பாளராக முதலமைச்சர் விக்னேஸ்வரன் நிறுத்தப்படுவது சந்தேகத்துக்கிடமானதாகவே இருக்கலாம்.

இந்த ஏதுநிலையை முதலமைச்சர் விக்னேஸ்வரனும் புரிந்துகொண்டிருக்கிறார் என்பதை அவர் நேற்று விடுத்த அறிக்கை புலப்படுத்துகின்றது. எனினும் தான் நன்கு பற்றிப் படர்ந்து செழித்துப்பூக்கக்கூடிய ஒரு கொழுகொம்பு கிடைக்காததன் காரணத்தால் அடுத்த தேர்தலிலும் போட்டியிடுவேன் என்கிற அறிவிப்பை முதலமைச்சர் திட்டவட்டமாக வெளியிடவில்லை. அதேபோன்று அப்படிப் போட்டியிடுவதற்குத் தனக்கு இருக்கும் வாய்ப்பைக் குலைத்துக்கொள்ள விரும்பாததன் காரணத்தால் போட்டியிடமாட்டேன் என்றும் அவர் அறிவிக்கவில்லை.

தனது வெற்றியைக் கிட்டத்தட்ட 100 வீதம் உறுதிப்படுத்தும் வகையில் அரசியல் களம் தயாராகும் வரைக்கும் அடுத்த தேர்தலில் போட்டியிடும் தனது முடிவை முதலமைச்சர் அறிவிக்கமாட்டார் என்றும் தோன்றுகின்றது. எனவே அடுத்து வரும் 6 மாதங்களில் வடக்கு அரசியல் களம் வெகு சூடானதாக இருக்கும் என்ப்தில் ஐயமில்லை. தமிழர்களுக்கு விடிவு கிடைக்கிறதோ இல்லையோ இவர்கள் தமிழர்களின் உரிமைக்காக என்ற பெயரில் பதவியைப் பிடிப்பதற்குப் போடப்போகும் சண்டைகளால் சூடு, சுவையான பலவற்றையும் பார்க்கும் வாய்ப்பு நிச்சயம் தமிழர்களுக்குக் கிடைக்கும். எமது பிறவிப் பெரும் பயன் அது என்ற புளகாங்கிதத்துடன் காத்திருப்போம்!

# கூட்டமைப்பின் குழப்பநிலை மக்களால் ஏற்க முடியாதது

சேரலாதன்



தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டமைப்பால் உடன்படிக்கை எதுவும் செய்யப்படவில்லையென கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தள்ளமை, மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் குழப்பமடைந்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பான 10 கோரிக்கைகளை ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பித்து, எழுத்து மூலமான உறுதிமொழியை அவரிடமிருந்து கூட்டமைப்புப் பெற்றுள்ளதாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட நிலையில், சுமந்திரனின் இந்த அறிவிப்பு வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

### தொடர்ந்து சிங்கள தலைமைகளால் ஏமாற்றப்படும் தமிழர்கள்

தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தொடர்ந்தும் சிங்களத் தலைமைகளால் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். சிங்களத் தலைமைகள் எழுத்து வடிவில் உறுதிமொழிகளை வழங்கிவிட்டுப் பின்னர் அவற்றைக் கிழித்து எறிவது



இந்த நாட்டைப் பொறுத்த வரையில் புதியதொன்றல்ல.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் இந்த நாட்டின் அரசியலில் மிகவும் முக்கியமானதொன்றாக நோக்கப்பட்டது. இது வெற்றிபெறுமாயின், நாட்டின் ஆட்சியில் பெருமாற்றம் ஏற்படுமென்ற பெரிய எதிர்பார்ப்பு நிலவியது. ரணில் விக்கிரமசிங்க தமது தலைமை அமைச்சர் பதவியைத் துறந்துவிடுவதற்கான சாத்தியமும் அதிகளவில் காணப்பட்டது. மகிந்த தரப்பினர் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான பெருமுனைப்பில் இருந்ததால், எந்த வகையிலேனும் பிரேரணையை வெற்றிபெற வைக்க வேண்டும் என்ற துடிப்புடன் செயற்பட்டனர். அரச தலைவர், தலைமை அமைச்சரைப் பதவி விலகிவிடுமாறு கேட்டுக்கொண்டதன் பிரகாரம் பிரேரணைக்கு ஆதரவான சைகையை வெளிக்காட்டியிருந்தார்

### நாட்டில் ஓரளவு சுமூக நிலை நிலவுவதை மறுப்பதற்கில்லை

கடந்த மூன்று ஆண்டுகளாக நாட்டில் ஒருசில சம்பவங்களைத்தவிர, அமைதி நிலவியதைக் காணக்கூடியதாகவிருந்தது. தமிழர் பிரதேசங்களில் முன்பு இருந்ததைப் போன்று படையினரின் கெடுபிடிகளும் காணப்படவில்லை. இதனால் இங்குள்ள மக்கள் தமது அடிப்படைப் பிரச்சினைகள் தீராத நிலையிலும், ஓரளவு நிம்மதியுடன் வாழ்ந்து வருகின்றனர். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதற்கு இதையே காரணமாகக் கூறியிருந்தார்.

கூட்டமைப்பின் ஆதரவு கிடைக்காவிட்டாலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டிருக்கும் என்பதை இறுதி நிலவரங்கள் எடுத்துக் காட்டிய போதிலும், அதன் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அரசியல் ரீதியில் மிகப் பெரிய பலத்தைக் கொடுத்திருந்ததை, மறுத்துவிட முடியாது. கூட்டமைப்பு ஆதரவு தெரிவிக்க முன்வந்தமை ஏனைய சிறுபான்மைக் கட்சிகளுக்கும் ஓர் உந்து சக்தியாக இருந்தமையையும் மறுத்து விட முடியாது.

### தீர்க்கப்படாது தொடரும் தமிழ் மக்களது பிரச்சினைகள்

> **போர் ஒய்ந்து பல வருடங்கள் ஆகிவிட்ட போதிலும் தமிழர்களின் வாழ்க்கையில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவற்றுக்குத் தீர்வு காணப்படுமென அரச தலைவரும், தலைமை அமைச்சரும் வழங்கிய உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை.**

போர் ஒய்ந்து பல வருடங்கள் ஆகிவிட்ட போதிலும் தமிழர்களின் வாழ்க்கையில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் தொடர்ந்தவண்ணமே உள்ளன. இவற்றுக்குத் தீர்வு காணப்படுமென அரச தலைவரும், தலைமை அமைச்சரும் வழங்கிய உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை. மாறாக இறுதிப் போரின்போது, போர்க்குற்றங்களிலும், மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டவர்களைக் காப்பாற்றுகின்ற செயற்பாடுகளே இடம் பெறுகின்றன. படையினரை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு ஒருபோதுமே இணங்கப் போவதில்லையென அரச தலைவர் பகிரங்கமாகத் தெரிவித்துவிட்ட நிலையில், இது தொடர்பாக அவரிடம் மேலதிகமாக வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் பெரும் இக்கட்டான நிலையில் இருந்த ரணில் விக்கிரமசிங்க தமிழர் பிரச்சினையில் தலையிட்டுத் தீர்வு காண வேண்டிய கட்டாயத்தில் இருந்தார். இதனால் அவர் கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்கு இணங்கியிருப்பாரென்ற நம்பிக்கை தமிழர்களிடம் காணப்பட்டது. ஆனால் சுமந்திரனின் கருத்துக்கள் அந்த நம்பிக்கையைத் தகர்த்தெறிந்துவிட்டன. கூட்டமைப்புக்கு எதிரானவர்களுக்கு இதுவொரு நல்ல சந்தர்ப்பத்தையும் வழங்கி விட்டது.

கூட்டமைப்பின் செயற்பாடுகளால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதைக் கடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டிவிட்டன. இதைச் சீர் செய்யவேண்டிய மிகப்பெரிய பொறுப்பும் கூட்டமைப்புக்கு உண்டு. தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நல்லதொரு வாய்ப்பை வழங்கியிருந்தது. இதை நன்கு பயன்படுத்தியிருந்தால் ஒரு சில அனுகூலங்களையாவது பெற்றிருக்க முடியும். ஆனால் அதையும் கூட்டமைப்பு தவற விட்டுள்ளது, என்றே கருத வேண்டியுள்ளது. தமிழர்களின் தலையாய தலைமைப் பொறுப்பை வகித்துவரும் கூட்டமைப்பு, நிலையான தீர்மானங்களைச் சரியாக எடுக்கமாட்டாமல் தடுமாறுவதை மக்கள் ஒருபோதுமே ஏற்க மாட்டார்கள் என்பதைக் கூட்டமைப்பின் தலைமை புரிந்து கொள்ள வேண்டும்.

இந்துமதி




# காணாமல் போனோர் விடயத்தில் தவறிழைக்கிறது இலங்கை அரசு

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பதற்கான சட்ட மூலத்தில் மிகப்பெரிய குறைபாடுகள் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. இதனை இறுதிப்போர் மற்றும் கடந்த கால விடயங்களுக்குப் பயன்படுத்த முடியாது என்பதால் தமிழர்கள் இந்தச் சட்ட மூலம் தமக்கு எந்த வகையிலும் பயனுள்ளதாக அமையாது என்றே நினைக்கின்றனர்.

இதேவேளை காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென அமைக்கப்பட்ட அலுவலகத்துக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. ஐ. நா.மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் மிக அண்மையில் இடம்பெற்ற வேளையில் இந்த நியமனங்கள் இடம் பெற்றமை பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது. ஜெனிவாவைச் சமாளிப்பதற்கான அரசின் ஏமாற்று வேலையே இதுவென காணாமல் போனவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். எங்கு தேடியும் காணாமல் போனவர்களைக் கண்டறிய முடியவில்லையென அரச தலைவர் கைவிரித்துவிட்ட நிலையில், இந்த நியமனங்கள் தேவையற்றவை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இவற்றையெல்லாம் பார்க்கும் போது அரசின் கபடத்தனம் தெளிவாகப் புரிகின்றது.

**காணாமல் போனவர்களைக் கண்டறியும் விடயத்தில் ஒப்புக்காகச் செயற்படும் அரசு**

காணாமல் போனவர்களைக் கண்டறிய நடவடிக்கை எடுப்பதாக அரச தலைவர் உறுதிமொழி வழங்கி மூன்று ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், வெறும் கண் துடைப்புக்காகவும், உலக நாடுகளை ஏமாற்றுவதற்காகவும் அரசு செயற்படுகின்றதோ என்ற ஐயமும் கூடவே எழுகின்றது. காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்துக்கு தலைவரையும், ஏனைய உறுப்பினர்களையும் நியமித்ததை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் வரவேற்றிருந்தமை இதைத் தெளிவாக எடுத்துக்காட்டி விட்டது. ஜெனிவா சென்ற இலங்கைத் தூதுக்குழுவும் இதையொரு பெரிய விடயமாகக் காட்டி அரசின் மீதான அழுத்தங்களைச் சமாளிக்க முயன்றது.

காணாமல் போனவர்களின் உறவுகள் எதிர்கொள்கின்ற துயரங்களுக்கு ஈடு இணையாக எதையும் கூறிவிட முடியாது. தமது கண்முன்னால் தமது உறவுகளைத் தொலைத்துவிட்டு நிற்கின்ற இவர்களின் மனம் அரச தலைவர் கூறியதைக் கேட்ட



போது என்னபாடுபட்டிருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் பதறுகின்றது. இந்த நிலையில் வெறும் கண் துடைப்புக்காக அலுவலகம் அமைத்து, அதற்கு அலுவலர்களையும் நியமிக்கும் சமாளிப்பு நாடகத்தை அவர்களால் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்?

காணாமல் போனவர்களில் பலர் தத்தம் வீடுகளில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள். இதைவிட இறுதிப் போரின்போதும் அதற்குப் பின்னரும் பலர் காணாமல் போயிருக்கின்றனர். போர் உச்சக்கட்டத்தை எட்டிய போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்ற பலரது நிலை தொடர்பாகவும் இதுவரை எதுவித தகவலும் தெரியவில்லை. இதைவிடப் படையினரிடம் சரணடையச் சென்ற போராளிகளில் பலரைப் படையினர் தமது வாகனங்களின் ஏற்றிச் சென்றிருக்கிறார்கள். இவர்கள் தொடர்பாகவும் எதுவுமே தெரியவரவில்லை. இவ்வாறு பல்வேறு நிலைகளில் பலர் காணாமல் போயுள்ளனர். இவர்கள் அனைவரையும்தேடி அவர்களது உறவுகள் அலைந்து கொண்டிருக்கின்றனர். தமது உறவுகள் எங்கோ ஓரிடத்தில் உயிருடன் இருப்பதாகவே அவர்கள் நம்புகின்றனர். இந்த நம்பிக்கையே அவர்களை உயிருடன் வாழவைத்துக் கொண்டிருக்கின்றது.

போரின் வடுக்களால் பாதிக்கப்படாத தமிழர்கள் இங்கு இல்லையென்றுதான் கூற வேண்டும். ஒவ்வொரு தமிழனும் ஏதோவொரு விதத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறான். ஆனால் எந்தவொரு தமிழ்க் குடிமகனுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் தாம் போரை நடத்தி வெற்றி கொண்டதாக மகிந்த ராஜபக்ச கூறிக் கொண்டிருக்கிறார். அவர் சொல்வது உண்மையாக இருந்தால், முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் மீள்குடியமர்ந்த குடும்பங்களில் 6 ஆயிரத்து 246 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும், 2 ஆயிரத்து 291 மாற்றுத் திறனாளிகளும் எவ்வாறு காணப்படுகின்றனர் என்பதற்கு விடை தெரியவில்லை. இதைப்போன்று ஏனைய தமிழர் பிரதேசங்களினதும் நிலைமை காணப்படுகின்றது.

ஏற்கனவே காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்ற நிலையில் புதிய விசாரணைகளை மேற்கொள்வது காலத்தைக் கடத்துகின்றதொரு உத்தியாகவே கருதமுடிகின்றது.

காணாமல் போனவர்களின் விடயத்தில் அரசு இனியும் மெத்தனப் போக்குடன் செயற்படுவது நல்லதல்ல. அமெரிக்கா உள்ளிட்ட பிரதான நாடுகள் இந்த விடயத்தில் அதிக அக்கறை கொள்ள ஆரம்பித்துவிட்டன. ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கைக்கு எதிரான கடுமையான அறிக்கையை எவருமே எளிதில் புறமொதுக்கிவிட முடியாது.

கடினமானதொரு காலகட்டத்தை இலங்கை எதிர்கொள்ளப்போவதை இப்போதே அனுமானிக்க முடிகின்றது. காணாமல் போனவர்கள் தொடர்பான விடயமும், படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயமும் இலங்கையைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வல்லவை.

## ஆசிரியருக்கான கடிதம்

# முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தின் முறையீட்டுக்கு உதயன் வாசகியின் விளக்கம்

முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்க சுன்னாகம் கிளை செயலாளருக்கு,

தங்களது சங்க உறுப்பினர்களான முச்சக்கர வண்டிச் சாரதிகள் சம்பந்தமாக எந்தவொரு உண்மைக்கு புறம்பான செய்தியையும் நான் எழுதவில்லை. நான் மட்டுமல்ல, பெரும்பாலானவர்கள் அலைபேசியூடாகவே ஆட்டோவை அழைப்பது இன்றைய வழக்கமாகிவிட்டது. வேறுபட்ட கட்டண அறவீடுகள் காரணமாக என்னைப் போன்ற பலரது ஆதங்கங்களை கருத்திற்கொண்டு இதனை எழுதியிருந்தேன். நான் எவரையும் நேரடியாகச் சுட்டிக் குறிப்பிடாத போது, குறிப்பிட்ட ஒருவரை மட்டும் நீங்கள் முன்னிலைப் படுத்துவதற்கு நான் பொறுப்பாளியல்ல. ஆனாலும் குறித்த சம்பவத்தின் உண்மை நிலையை நியாயப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இந்தக் குறிப்பை மீண்டும் எழுதுகிறேன்.

முற்பகல் 11.30 இற்கு லவ்லேன் தொடக்கத்தில் இருந்து புறப்பட்ட ஆட்டோ, சுன்னாகம் HNBயில் பத்து நிமிடம் தரித்து, பின் இலங்கை வங்கியில் ஏ.ரி. எம் இயந்திரத்தில் பணம் எடுத்துக்கொண்டுவந்தபோது, சாரதியை அங்கு காணவில்லை. தன்னுடைய தனிப்பட்ட தேவைக்காக அந்தப் பகுதியின் வங்கியொன்றின் முகாமையாளரைச் சந்தித்துவிட்டு சுமார் 30 நிமிடங்களின் பின்னரே அவ்விடத்துக்கு வந்தார். அதன்பின் மருதனார்மடம் வந்து சிலிண்டரைப் பெற்றுக்கொண்டு லவ்லேன் வந்து சேர நேரம் 12. 20 ஆகியிருந்தது. 50 நிமிடங்களே பயணத்துக்காக எடுத்துக்கொண்ட நேரம். இதில் கூடுதலான நேரத்தை சாரதி தனது தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்தியுள்ளார்.

முக்கியமாக மதிப்பிற்குரிய செயலாளருக்கு வலியுறுத்திக் கூறவிரும்புவது, கட்டணமாக மனமுவந்து 350ரூபா கொடுக்கவில்லை. 300ரூபா கொடுத்தபோது, மேலும் 50ரூபா தரச்சொல்லி வற்புறுத்தியதால் 350ரூபா கொடுக்கப்பட்டது. அத்துடன் நான் பயணம் செய்யவுமில்லை. பயணம் செய்தவர்களுக்கு செலான் வங்கியில் எந்தவொரு கணக்கும் இல்லை.

எனவே அங்கு போகவில்லை. எவரையும் நோகடிக்கவே, குற்றம் கண்டு பிடிக்கவோ, அல்லது சங்கத்துக்கு களங்கம் விளைவிக்கவோ விரும்பி இதனை எழுதவில்லை என்பதனையும் ஆணித்தரமாக இவ்விடத்தில் பதிவு செய்கிறேன்.

இன்னல்கள், துன்பங்களிலும் தங்களது நேர்த்தியான சேவைக்கு தலைவணங்குகிறேன். அதேசேவை இனி மேலும் தொடர கட்டண விவரங்களை, சிற்றூர்திகள் போல முன்புறத்தில் ஒட்டியும், மீற்றரைப் பூட்டியும் உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

*உடுவிலூர் கலா*

## மிரட்டும் பிரபுதேவா; மெர்குரி முன்னோட்டக் காணொலி வெளியீடு




பிரபுதேவா நடித்துள்ள மெர்குரி படத்தின் முன்னோட்டக் காணொலி வெளியாகியுள்ளது. கார்த்திக் சுப்பராஜ் இந்தப் படத்தை இயக்கியுள்ளார்.

திரில்லர் படமாக இது உருவாகி யுள்ளது. வசனங்களே இல்லா மல் இசையின் மூலம் மட்டுமே காட்சிகளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தப்படத்திற்கு.சந்தோஷ்நாரா யணன் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தில் ரம்யா நம்பீசன், ஷ்னத் ரெட்டி, தீபக் பரமேஷ், 'மேயாத மான்' இந்துஜா ஆகி யோரும் நடித்துள்ளனர்.

துரோகம்னா என்ன?
பச்சைத்துரோகம்னா என்ன?



போண்டால பாதி முட்டை இருந்தா துரோகம். போண்டால முட்டையே இல்லைனா அது பச்சத்துரோகம்.

குரைக்கிற நாயை கல்லால் அடித்து துரத்திட்டு ஓடினா...
உன் இலக்கை அடைய முடியாது.



பிஸ்கட்டை ஒவ்வொன்றாக போட்டிட்டு போய்க்கிட்டே இரு....



வெயில் கொடுமை தாங்க முடியல...

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 8 | | | 2 |
| | | | | | | | | |
| | 9 | | | 6 | | 3 | | |
| 4 | | | | | 5 | | | |
| | | | | 7 | | 1 | | |
| 8 | 5 | 2 | | | | | | |
| | 1 | | 6 | 9 | | | | |
| | 2 | | | | | | | |
| 5 | | 8 | | | | | | 4 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 8 | 6 | 5 | 9 | 2 | 3 | 4 |
| 9 | 3 | 4 | 8 | 2 | 1 | 6 | 5 | 7 |
| 6 | 2 | 5 | 3 | 7 | 4 | 1 | 9 | 8 |
| 4 | 6 | 1 | 9 | 8 | 2 | 3 | 7 | 5 |
| 7 | 9 | 3 | 5 | 1 | 6 | 8 | 4 | 2 |
| 5 | 8 | 2 | 7 | 4 | 3 | 9 | 1 | 6 |
| 3 | 1 | 7 | 4 | 6 | 8 | 5 | 2 | 9 |
| 2 | 5 | 6 | 1 | 9 | 7 | 4 | 8 | 3 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 5 | 7 | 6 | 1 |

நேற்றைய விடை




## twitter

Maran Retweeted
நித்ர்ர் @nithratweets · Aug 27

துளியும் ஒளி இல்லாத இருட்டில் பாலும் காக்கையும் ஒரே நிறம்தான். வெளிச்சம் கண்ணுக்கு இல்லை. எண்ணத்துக்குத்தான் தேவை.

9 151 161

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பேச்சிலும், செயலிலும் திறமை வெளிப்படும். எதிரி இடம்மாறி போகிற சூழல் உருவாகும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** மனதில் இனம் புரியாத தயக்கம் உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**மிதுனம்:** பேச்சில் நிதானம் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம் கவனம். இலாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**கடகம்:** பொதுநல நோக்குடன் செயல்படுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**சிங்கம்:** சுய நலம் கருதாமல் செயல்படுவீர்கள். அவமதித்து பேசியவரும் அன்பு பாராட்டி வருவர். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு விலகும். இலாபம் அதிகரிக்கும்.

**கன்னி:** உங்களின் நியாயமான பேச்சை சிலர் ஏற்க தயங்குவர். தொழில் வியாபாரத்தில் விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவைப்படும். இலாபம் சுமார்.

**துலாம்:** திட்டமிட்டுச் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில்லாபம்சுமாரானஅளவில்இருக்கும்.பணியாளர்கள் பணிச்சுமையை சந்தித்தாலும் வருமானம் சீராக இருக்கும்.

**விருச்சிகம்:** பேச்சு, செயலில் நேர்மை நிறைந்திருக்கும். தெய்வ அருள் பலம் துணை நிற்கும். தொழில் வியரபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும்.

**தனுசு:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிவிஷயமாக பயணம் மேற்கொள்வர்.

**மகரம்:** வாழ்வில் இனிய அனுபவம் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும்.

**கும்பம்:** குடும்பத்தினரின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணைநிற்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**மீனம்:** வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு விரும்பிய இட, பணிமாற்றம் கிடைக்கும்.

## பேசும் முறைகள்

தாயிடம் - அன்பாகப் பேசுங்கள்
தந்தையுடன் - பண்பாகப் பேசுங்கள்
ஆசிரியரிடம் - அன்பாக பேசுங்கள்
துணைவியிடம் - உண்மையாகப் பேசுங்கள்
குழந்தைகளிடம் - ஆர்வத்தோடு பேசுங்கள்
நண்பர்களிடம் - உரிமையோடு பேசுங்கள்
அதிகாரியிடம் - பணிவோடு பேசுங்கள்
தொழிலாளரிடம் - மனிதநேயத்தோடு பேசுங்கள்
அரசியல் வாதியிடம் - அவதானமாகப் பேசுங்கள்.



உதயன்
புதன் பொய்கை
ஏப்ரல் 11 2018
Uthayan Print newuthayan.com @UthayanPrint

பிரகாஸ்

# ஈழத்து சிறுவர்கள் வாழ்வில் போர் கொடுத்த தாக்கத்தை கதைக்கிறது சாலைப் பூக்கள்

## சொல்கிறார் இயக்குநர் சுதர்சன்

### ஈழத்துச் சினிமா தமிழகத்தை பின்தொடர்கிறது என்றும் அவர் ஒப்புதல்



ஈழத்துத் திரைப்பட இயக்குனர் சுதர்சன் ரட்ணத்தின் இயக்கத்தில் உருவாகியுள்ளது சாலைப் பூக்கள். ராஜா திரையரங்கில் இன்று காலை 10.30 மணிக்கு இந்தப் படம் திரைக்கு வருகிறது. ஈழத்துச் சிறுவர்கள் பலரின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்ட ஈழத்துப் போரின் இன்னல்களை படம்பிடித்துக் காட்டுகிறது இந்தப் படம். படத்தின் இயக்குனர் ரட்ணம் சுதர்சனுடனான செவ்வியின் சாராம்சம் கேள்வி, பதில் வடிவில் இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.



'வெறும் பொழுதுபோக்குப் படங்கள் மட்டுமே படங்களல்ல. அந்தந்தப் பிரதேசத்தின் வலிகள், வேதனைகள் என்பனவும் படங்களில் பதிவாக வேண்டும். அந்த வகையில் இயக்குனர் சுதர்சன் ரட்னத்தின் சாலைப்பூக்கள் படைப்பு அருமையாக அமைந்துள்ளது'

*நடிகர் நாசர்*

**கேள்வி**-உங்களைப்பற்றி..?

**பதில்**- நான் சுதர்சன். வயது 32. நான் வேலணையைச் சேர்ந்தவன். கல்வி கற்றது யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில். கல்லூரியில் படிக்கும் போதே நாடகத் துறையில் ஆர்வம் அதிகம். பின்பு திருமறைக் கலா மன்றத்தின் நாடகங்களில் நடித்தேன். அதன் பின்னர் சினிமாத் துறைக்கு வந்தேன். சுமார் 5 ஆண்டுகளாக ஈழத்துச் சினிமாவுடன் என்னை இணைத்துக் கொண்டுள்ளேன். நீ தந்த வலி, எனக்கானவள், ஆதாம் ஆகிய படங்களை இயக்கியுள்ளேன். அந்த வரிசையில் தற்போது சாலைப் பூக்கள். சினம்கொள் என்ற தென்னிந்தியத் தமிழ் திரைப்படத்தில் உதவி இயக்குநராகப் பணியாற்றியுள்ளேன். அந்தப் படத்தில் வில்லனாகவும் நடித்துள்ளேன்.




**கேள்வி** - சாலைப்பூக்கள் பற்றி...?

**பதில்**- போரில் தத்தமது பெற்றோரை இழந்த நான்கு சிறுவர்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வகையில் படம் அமைந்துள்ளது. நான்கு சிறுவர்களுக்கும் நான்கு விதமான பிரச்சினைகள் உள்ளன. அவர்கள் தமது அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவர்களின் ஏக்கங்கள், ஏனைய சிறுவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்பதுதான் கதை. நான் கொழும்பு பயணமானபோது முறிகண்டிப் பிள்ளையார் கோவிலில் இடம்பெற்ற சம்பவத்தையும் ஏனைய சில புனைவுகளையும் மையமாக வைத்துப் படம் இயக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களை வைத்து படம் இயக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு நேரம் கிடைக்கும்போதே படப்பிடிப்புப் பணிகளை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. படப்பிடிப்புப் பணிக்காக சுமார் ஒரு வருடமும் ஒரு மாதமும் எனக்குத் தேவைப்பட்டுள்ளது.



சினிமா என்பது வியாபாரமும் கலையும் சார்ந்த விடயமாக இருந்தாலும்கூட, அதைத் தாண்டியும் ஏகப்பட்ட விடயங்கள் உள்ளன. அந்த வகையில் இலங்கையில் உள்ள தமிழ் இளைஞர்களால் படைக்கப்பட்டுள்ள சாலைப்பூக்கள் படத்தைப்பற்றிக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

*இயக்குனர் பொன்வண்ணன்*



ஈழத்துப் போரில் தமது பெற்றோரை இழந்த நான்கு சிறுவர்கள் எவ்வாறு தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றனர் என்பதைப் புடம் போட்டுக் காட்டுகிறது சாலைப்பூக்கள். மிகவும் அருமையான கதைக் களம். அருமையான படைப்பு.

*டெல்லி கணேஸ்*

படத்துக்கு ஈழத்தில் சிறந்த வரவேற்புக் கிடைத்துள் ளது. ஈழத்தில் உள்ள பெரும்பாலான திரையரங்கு களில் படம் திரையிடப்படுகிறது.

**கேள்வி** - படமொன்றை இயக்குவதில் சந்தித்த மிகப்பெரும் சாவால்?

**பதில்**- ஈழத்து இயக்குநர்கள் அனைவருமே எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால், தயாரிப்பாளர்களைப் பெறுவது. அத்துடன் மேம்பட்ட தொழில்நுட்பச் சாதனங்கள் இங்கு இல்லை. அவற்றை இயக்கக்கூடிய அறிவுபடைத்தவர்களுக்கும் இங்கு தட்டுப்பாடே நிலவுகிறது.

**கேள்வி** - ஈழத்துச் சினிமாப் பாணி தமிழகத்தைப் பின்பற்றுகிறது என்று குற்றச்சாட்டு உள்ளதே?

**பதில்**- ஈழத்துச் சினிமா தமிழகத்தைப் பின்செல்கிறது என்பது என்னைப் பொறுத்த வரையில் 100 சதவீதம் உண்மை. தமிழக சினிமாவைப் பார்த்துப் பழகியவர்கள் நாம். எனவே அவற்றின் தாக்கம் எமது சமூகத்தில் காத்திரமான அளவில் இருக்கவே செய்கிறது. இந்திய சினிமா நூற்றாண்டைக் கண்டுவிட்டது. ஈழத்துச் சினிமா 10 ஆண்டுகள் அனுபவத்துடனேயே உள்ளது. ஈழம் தொடர்பில் தொடர்ந்து படங்கள் வெளிவர ஈழத்து சினிமாவும் தனக்கென தனியான தொரு அடையாளத்தைக் கண்டுகொள்ள வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. ஆனால் தமிழக சினிமாவுடன் ஈழத்துச் சினிமாவை ஒப்பிடுவது தவறு. ஏனெனின் 100 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் வித்தியாசங்கள் உள்ளன அல்லவா?

**கேள்வி** - வர்த்தக ரீதியில் சாலைப் பூக்கள் வெற்றி பெறுமா?

**பதில்**- நிச்சயமாக!. அதற்குரிய வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. ஏனெனில் தென்னிந்தியாவில் இருந்து தற்போது படங்கள் வெளிவரவில்லை. அங்கு திரைப்பட உரிமையாளர் சங்கம், திரையங்குகளின் சங்கம் ஆகியன நடத்திய அடுத்தடுத்த போராட்டங்களால் படங்களின் வெளியீடு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஈழத்தில் இருந்தும் இந்தக் காலப்பகுதியில் படங்கள் எதுவும் வெளியாகவில்லை. எனவே சாலைப் பூக்கள் படம் இரசிகர்களின் ஒரே தெரிவாகவும் அமையலாம். அத்துடன் பாடசாலைகளுக்கு தற்போது விடுமுறை வழங்கப்பட்டுள்ளன. சிறுவர்களுக்கு உரித்தான படமாகவும் சாலைப் பூக்கள் அமைந்துள்ளதால் பாடசாலை மாணவர்களையும் அது திரையரங்கை நோக்கி ஈர்க்கும். இவ்வாறு நோக்குகையில் சாலைப் பூக்கள் படம் வணிக ரீதியிலும் வெற்றிபெற வாய்ப்புக்கள் அதிகம்.



ஈழத்துச் சிறுவர்கள் சிலரின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வகையில் யதார்த்தமாக அழகாக உருவாக்கப்பட்டுள்ளது படம். பாடலும் அற்புதமாக உள்ளது. இந்தப் படம் வெற்றிபெற வாழ்த்துக்கள்.

*வையாபுரி*




## சாலைப் பூக்கள் பலம், பலவீனம்

சாலைப் பூக்கள் படம் போரால் தமது தாய், தந்தை, பாதுகாவலர்களை இழந்த சிறுவர்களின் வாழ்க்கையை சிறப்பாகவே பிரதிபலிக்கிறது. உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, படுக்க இடமின்றி துன்பியல்படும் நூற்றுக் கணக்கான சிறுவர்களின் வாழ்க்கை முறையை கண்முன் கொண்டு வருகிறார் இயக்குனர் சுதர்சன்.

படத்தின் பெரும் பலமாக அமைகிறது அந்தப் படத்தின் ஆரம்பமும் பாடலும். சாலையோரப் பூக்களில் ஒன்று, தனது தாய் தன்னை பாடசாலைக்கு அனுப்ப எழுப்புவதுபோல் கனவு காண்கிறது. இந்தக் காட்சியுடனேயே படம் ஆரம்பிக்கிறது. அது தவிர படத்தின் பாதி இடங்களில் அம்மா 'சென்டிமென்ட்' மையப்படுத்தப்படுகிறது. பாடலிலும் அவ்வாறே. இவை படத்தின் இமாலயப் பலங்கள்.

ஈழத்து திரைப்படங்கள் என்றாலே போர் மற்றும் அது சார்ந்த பின்னணிகளில்தான் அவை பெரும்பாலும் இருக்கின்றன என்ற பொதுவான, பரவலான அபிப்பிராயம் உள்ளது. அந்த வரிசையில் ஒன்றாக இணைந்துள்ளது இந்தச் சாலைப் பூக்கள் திரைப்படம். ஆக, ஈழத்து சினிமா கண்டுகண்டு சலித்துப்போன கதைக் களத்தில் படம் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதனால் ரசிகர்கள், இந்தப் படத்தை ஏனைய படங்களில் இருந்து பிரித்தறியாமல் பத்துடன் பதினொன்றாக எடுத்துக் கடந்துவிட்டுப் போக வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. நடிகர்களை அவ்வப்போது 'கமரா' பயம் ஆட்கொள்கிறது. இவை இந்தப் படத்தின் பலவீனங்கள். எனினும், ஏனைய படங்களுடன் ஒப்பிடுகையிலும், ஏனைய படங்களின் வருகைக்கு இருந்த பரபரப்புக்களுடன் ஒப்பிடுகையிலும் சாலைப் பூக்கள் சிறிது வித்தியாசமாகவே மலர்ந்துள்ளது.

# 'சமுர்த்தி சௌபாக்கியா' வர்த்தகக் கண்காட்சி

கே.தட்ஷாயினி
















நடப்பு வருடத்துக்கான சமுர்த்தி சௌபாக்கியா வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை, செவ்வாய்க் கிழமை என்று இரண்டு தினங்கள் நடைபெற்றது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள யாழ் மாவட்ட பணிப்பாளர் க.மகேஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. முதல் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் மற்றும் சிறப்பு விருந்தினராக இலங்கை மத்திய வங்கியின் வடக்கு மாகாணப்பிராந்திய முகாமையாளர் பா.சிவதீபன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


இந்த கண்காட்சியில் சமுர்த்தித் திட்டத்தின் மூலம் உதவிகள் பெற்றுக் கொண்ட குறைந்த வருமானம் பெறுகின்ற பயனாளிகள் மேற்கொண்ட உற்பத்தி பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன. தும்பு, ஓலைகள், சிற்பிகள் போன்றவற்றாலான பொருட்கள், மரக்கறிகள், தைத்த உடைகள், சீமெந்து, மரத்தால் செய்யப்பட்ட சிலைகள், பாரம்பரிய உணவுகள் என பலவித மானவை காட்சிப்படுத்தப்பட்டு, விற்பனை செய்யப்பட்டன.

# இலக்கியங்களில் இழையோடும் மன்மதன்

இரா. நிசாந்தன்

தமிழ் மற்றும் சமய இலக்கியங்கள் அனைத்திலும், காதலின் அதிபதியாக குறிப்பிடப்படுபவன் மன்மதன். காதல் மட்டுமன்றி காமத்தின் அதிபதியாகவும் மன்மதனே விளங்குகின்றான். மன்மதன் என்றால் மனதைக் கடைபவன் எனப் பொருள்படும். அதாவது மனதை சஞ்சலம் கொள்ளச் செய்பவன் எனப்படும். காமதேவன், செஞ்சிலைமாறன், வசந்தன், மதனன், மகரக்கொடியோன், மாறன், மதன், புஷ்பவனன் எனும் பல நாமங்கள் கொண்டு அழைக்கப்படுபவன் மன்மதன். மன்மதன் காத்தல் கடவுள் விஸ்ணுவிற்கும் மகாலட்சுமிக்கும் மகனாகப் பிறந்தவன் எனப் புராணங்கள் சான்று பகிருகின்றன.

ரதி எனும் பெயருடையவள் மன்மதனின் மனைவியாக சித்தரிக்கப்படுகின்றாள். மேலும் அந்த ரதியுடனே மன்மதன் எங்கும் சஞ்சரித்து திரிபவன். மேலும் சாமன் எனும் தம்பியும் மன்மதனுக்கு அமைவுறுகின்றான். மன்மதனின் கொடி மீன் (மகரம்) கொடி, வாகனம் கிளி, தென்றலை ஆதாரமாகக் கொண்டு உலா வருபவன். இவனுக்குரிய காலம். வசந்த காலம் அதாவது இளவேனிற்காலமாகும். அழகு படைத்த பெண்கள் இவன் படையில் உள்ள நபர்கள்.



### கரும்பு வில்லும் மலரம்பும்

மன்மதன் கரும்பு வில்லை தன் கையில் கொண்டிருப்பவன். அந்த வில்லில் வைத்து செலுத்துவதற்கு ஐந்து மலரம்புகளையும் கொண்டிருப்பவன். அவை முல்லை, அசோகு, நீலோற்பவலம், மா, தாமரை முதலிய மலர்களாகும். இவற்றை மலர்க் கணைகள், ஐங்கணைகள், பூவாளி, மலர்ச்சரம் எனும் பெயராலும் அழைப்பர். தன் கரும்பு வில்லில் ரீங்காரம் செய்யும் தேனீக்களை நாணாக ஏற்றி அதில் மலரம்புகள் ஐந்தையும் தொடுத்து ஆண், பெண் இருவரை காதல் வயப்படுத்துவதே மன்மதன் தொழிலாகும். மன்மதனின் மலரம்புகளுக்கு தப்பியவர் யாருமில்லை என்றே கூறலாம். இதனையே மன்மத லீலையை வென்றவர் யாரோ? எனும் பாடலும் தெளிவுறுத்துகின்றது. அந்தளவிற்கு மன்மதனின் மலரம்புகளால் தாக்கப்பட்டவர்களுக்கு மீட்சி என்பதே கிடையாது என்பதுடன், காதல் வயப்பட்டவர்கள் மட்டுமன்றி, காதலில் பிரிந்த வர்களுக்கும் துன்பத்தையும், வேதனையையும் கொடுப்பவன் மன்மதன் தான் என்கின்றன எமது இலக்கியங்கள்.

**தன் கரும்பு வில்லில் ரீங்காரம் செய்யும் தேனீக்களை நாணாக ஏற்றி அதில் மலரம்புகள் ஐந்தையும் தொடுத்து ஆண், பெண் இருவரை காதல் வயப்படுத்துவதே மன்மதன் தொழிலாகும். மன்மதனின் மலரம்புகளுக்கு தப்பியவர் யாருமில்லை என்றே கூறலாம்.**

### சிவனது நெற்றிக்கண்ணால் எரியுண்டு சாம்பராதல்

ஒரு முறை தேவர்களின் தூண்டுதலின் பேரில் மன்மதன் தியானத்தில் இருந்த சிவபெருமான் மீதே தன் மலரம்புகளைச் செலுத்தினான். இதனால் கோபம் கொண்ட சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனை எரித்துச் சாம்பராக்கினார். இதனை அறிந்த ரதி, கவலை கெண்டு அழுது புலம்பி தன் கணவனை உயிர்பெற்றெழச் செய்யும் படி எம்பெருமானிடம் வேண்டவே, எம்பெருமானும் ரதி மீது கருணை கொண்டு மன்மதனை மீண்டும் உயிர்பெற்றெழச் செய்தார். ஆனால் ரதியின் கண்களுக்கு மட்டுமே உருவமாக புலப்படும் படியாக கருணை புரிந்தருளினார் எம்பெருமான்.



### மன்மதனின் மறுபிறப்பு

பின்பு, பகவான் விஸ்ணு கிருஸ்ணராக அவதாரம் செய்த போது அவர் மகன் பிரத்யும்னன் எனும் நாமம் தாங்கி மன்மதன் பிறந்தான். அவன் மனைவி ரதியும் மாயாவதி எனும் பெயரில் அவதரித்து இருவரும் திருமணம் செய்கின்றனர். இவ்வாறு இவர்களுக்கு பிறந்த பிள்ளையாக அநிருத்தன் என்பவன் கருதப்படுகின்றான் என மகாபாரதம் கதையுறுத்துகின்றது.

### இலக்கியப் பாடல்களில் உலா வரும் மன்மதன்

எம் இலக்கியங்கள் அனைத்திலும் மன்மதன் பற்றி சிறு குறிப்பானது நிச்சயம் அமைவுற்றிருக்கும். அத்தகு ஒருசில கூறுகளை இங்கு கண்ணுறுதல் நயத்தற்குரியதாகும்.

### அரிச்சந்திர புராணம்

காதலின் இறைவன் மன்மதன் பவனி வரும் காட்சியை வீரகவிராயர் காண்பிக்கின்றார்.

திங்கள் வெண் குடைக் கீழ் தென்றல் தேர் ஏறி வாரி
மங்கல முரசம் ஆர்ப்ப மகர கேதனம் நின்றோங்க
கங்குல் வெங் களிறு சூழக் கடுங் கிளிப் புரவி தூண்டி
அங்கண் மா ஞாலம் எல்லாம் அனங்கவேள் பவனி வந்தான்

அதாவது, குளிர்ச்சியான கதிர்களை ஒளியாக வீசுகின்ற சந்திரனை வெண் கொற்றக் குடையாகக் கொண்டு, இதமாக வீசி வரும் தென்றலை தன் தேராகக் கொண்டு, ஆர்ப்பரிக்கின்ற கடலின் அலையோசையானது அவன் வருகின்றான் என முரசறைந்து அறிவிக்க, கருமையான மேகங்கள் ஆண் யானைகளாக சூழ்ந்து வர, களிப்புடன் கிளி எனும் வாகனத்தில் ஏறி, தன் கையில் கரும்பு வில்லை ஏந்தி, மனைவி ரதியுடன் இந்த உலகம் முழுவதும் பவனி வருகின்றான் மன்மதன்.

### சிலப்பதிகாரம்

இளங்கோவடிகள் காப்பியம் காட்டும் பாடல் இது.

அரை இருள் யாமத்தும் பகலும் துஞ்சான்
*விரை மலர் வாளியொடு கரும்பு வில் ஏந்தி*
*மகர வெல் கொடி மைந்தன் திரிதர*
*நகரம் காவல் நனி சிறந்தது என்*

எப்படியெனில், இரவுப் பொழுதில் ஒரு சிறு கணப் பொழுதும் துயில் கொள்ளாது, வாசனை பொருந்திய மலரம்புகளை தன் கரும்பு வில்லில் தொடுத்து, தன் மகரக் கொடி காற்றில் பறக்க, மன்மதன் நகர்வலம் வருவதனால் நாட்டின் நகர்வலம் மிகவும் சிறந்து விளங்கியதாம்.

### கம்பராமாயணம்

*கம்பர் மன்மதனைத் தனது பாடல்களில் காட்டாமல் இருப்பாரா? என்ன, இராமனும் சீதையும் ஒருவரையொருவர் கண்டு காதல் எனும் துன்பப் படகில் நீந்தச் செய்தவன் மன்மதன்.* இராமனின் பெரும் வலிமையும் மன்மதன் முன் தோற்று ஒழிந்தது என்கின்றார் கம்பர்.

*கன்னல் வார் சிலை கால் வளைத்தே மதன்*
*பொன்னை உன்னிய பூங்கணை மாரியால்*
*என்னை எய்து தொலைக்கும் என்றால் இனி*
*வன்மை என்னும் இது ஆரிடை வைகுமே?*

மன்மதன், தன் கரும்பு வில்லை வளைத்து, திருமகளைப் போன்ற சீதையினை நான் நினைத்து வருந்தும் படி மலரம்பு மழையால் என்னை வீழ்த்துகின்றான் அப்படியிருக்க, இனி என் வலிமை என்று சொல்லப்படும் குணம் யாரிடத்தில் இருக்கும்? அதாவது, யாரிடமும் தோல்வியுறாத என் வலிமை மன்மதனிடம் தோல்வியுற்றதே? என இராமன் புலம்பினான்.

### குலோத்துங்க சோழனுலா

மன்மதனின் மலரம்புகளின் இயல்புகளை பின்வரும் பாடல் காப்பியம் செய்கின்றது

*நினைக்கும் அரவிந்தம் நீள் பசலை மாம்பூ*
*வனைத்துணவு நீக்கும் அசோக வனத்தில் உறு*
*முல்லை இடைக் காட்டு மா, தே முழு நீலம்*
*கொல்லும் மதன் அம்பின் குணம்*

மன்மதன் கையில் உள்ள மலரம்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தன்மையினைக் கொண்டிருக்கின்றனவாம். பொதுவாக அவை அனைத்தும் காதல் துன்பத்தையே அளிக்கக் கூடியனவாம்.

தாமரை காதலர் பற்றிய நினைவைத் தூண்டும் இயல்புடையது. அசோகு உள்ளத்தையே மறக்கச் செய்து விடும், மா காதலர் நினைவினால் காதலர் உடலில் மாற்றத்தை ஏற்படுத்தும், முல்லை காதல் பித்துப் பிடித்து தலை சுற்றச் செய்யும், நீலோற்பவலம் காதல் பிரிவினால் உயிரையும் குடிக்கும் தன்மை கொண்டது இதனாலேயே பெரும்பாலும் மன்மதன் நீலோற்பவலம் எனும் மலரம்பினை விடுத்து ஏனைய நான்கு அம்புகளையுமே செலுத்தி காதல் நோயினை உண்டாக்குகின்றான்.

இவ்வாறு இலக்கியங்களின் ஊடே ஊடுறும் மன்மதன், காதலின் இறைவனாக சித்தரிக்கப்படும் தன்மையினை இத்தகு இலக்கியப் பாடல்களின் வாயிலாக கண்ணுறலாம்

# சீர்திருத்தங்கள் மிக அவசியம்!



சீர்திருத்தம் என்று சொல்லி ஏதாவது ஒரு பணியில் ஈடுபட்டால் மக்களின் ஏச்சுக்களையும் பேச்சுகளையும் எதிர்கொள்ள வேண்டி வருமே எமக்கெதற்கு வம்பு என்று ஒதுங்கி இருப்பது ஒருவகையில் பலவீனமே.

நல்லவராக 'இருப்பதற்கும் சீர்திருத்தப் பணிகளில் ஈடுபடுவதற்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உள்ளன. நல்லவராக இருத்தல் என்பது நல்ல காரியம்தான். ஆனால் அதில் ஒருவகை பகட்டும், பலவீனமும் உள்ளடங்கி இருக்கும். ஆம், 'நான் நல்லவன் என்று காட்டுவதற்காக சமூகத்தைவிட்டு ஒதுங்கி இருத்தல் ஒருவகை பகட்டுதான்'.

பொதுவாக மக்கள் நல்லவர்களையே விரும்புவார்கள். சீர்திருத்தவாதிகளை வெறுப்பார்கள். ஏனெனில், மனம்போன போக்கில் வாழ்பவர்களை சீர் திருத்தம் செய்து நல்வழிப் படுத்துபவர்களை அவ்வளவு சீக்கிரம் யாரும் ஏற்றுக்கொள்வதில்லை. மனித மனோபாவம் இது.

ஆகவேதான் இறைத்தூதராக அனுப்பப்படுவதற்கு முன்னர் முஹம்மத் (ஸல்) என்ற தனிநபரை மக்கள் நேசித்தனர். அதிகம் விரும்பினர். 'நம்பிக்கையாளர்', 'உண்மையாளர்' என்று பட்டப் பெயர் சூட்டி அழைத்தனர். அதேசமயம், இறைதூதராக அனுப்பப்பட்ட பின்னர் பொய்யர், மந்திரவாதி, குறிசொல்பவர், பைத்தியக்காரர் என்று ஏசிப்பேசி தூற்றினர். காரணம், முஹம்மத் (ஸல்) என்ற மனிதர் அப்போது சீர்திருத்தவாதியாக மாறியிருந்தார்.

முஹம்மத் (ஸல்) என்ற தனிநபர் பிறந்த செய்தியைக் கேள்விப்பட்டு மகிழ்ச்சியில் ஓர் அடிமையை விடுதலை செய்தான் அபூலஹப். அதேசமயம் அதே முஹம்மத் (ஸல்) அவர்கள் சீர்திருத்தவாதியாக மாறியபோது அவருடைய முகத்தில் மண்ணை அள்ளி வீசினான் அதே அபூலஹப்.

இஸ்லாமிய வெள்ளி

உமைய்யா குலத்தாரிலேயே மிகவும் நல்லவர் என்ற நற்பெயரைப் பெற்றிருந்தார் உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்). அப்போது அவர் தனிமனிதர். அதேசமயம் கலீபா எனும் ஆட்சிப் பொறுப்பை ஏற்று இரண்டு வருட காலத்தில் பெரும் புரட்சிகளையும் சீர்திருத்தங்களையும் செய்தபோது அதே நல்ல மனிதரை விசம் கொடுத்துக் கொலை செய்தனர். காரணம் முந்தைய ஆட்சியாளர்களால் செய்ய முடியாத பெரும் பெரும் சீர்திருத்தங்களை இரண்டு வருட ஆட்சியில் இவர் செய்தமைதான்.

சீர்திருத்தவாதிகளுக்கு பேராபத்து காத்திருக்கும் என்பதற்காக சமூகத்தைவிட்டு ஒதுங்கியும் விலகியும் வாழ்வதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. இந்த சமூகத்தில்தான் நாம் பிறந்துள்ளோம். எனவே இந்த சமூகத்தின் அவலத்தைத் தடுத்து நிறுத்த வேண்டியதும் எமது கடமையே அன்றி வேறெவர் மீதும் இல்லை. இதற்காக இறைவன் இன்னொரு படைப்பினத்தை அனுப்பமாட்டான்.

ஆகவேதான் பெருமானார் ஸல், 'தான் உண்டு தன் வேலையுண்டு என்று ஒதுங்கி வாழ்பவனைவிட, சமூகப் பிரச்சினைகளில் பங்கு கொண்டு மக்களின் ஏச்சுப் பேச்சுகளையும் ஏற்று வாழ்பவனையே அல்லாஹ் விரும்புகின்றான்' என்றார்.

மக்களை மூன்று பிரிவினராகக் குறித்து திருக்குர்ஆன் பேசுகின்றது. 'இறைக் கட்டளையை மீறியவர்கள் முதல் பிரிவினர். அவர்களைத் தடுத்தவர்கள் இரண்டாவது பிரிவினர். அவ்வாறு தடுக்க முற்பட்டவர்களை, 'இதெல்லாம் வீண்வேலை' என்று கூறி விலக்க முறப்பட்ட நல்லவர்கள் மூன்றாவது பிரிவினர்'.

சீர்திருத்தம் செய்த பிரிவினரைத் தவிர ஏனையோர் அனைவர் மீதும் அல்லாஹ்வின் வேதனையும் சாபமும் ஒன்று சேர இறங்கியதாகவும், அப்போது மூன்றாவது பிரிவினரையும் சேர்த்தே அழித்துவிட்டதாகவும் திருக்குர்ஆன் கூறுகின்றது. காரணம், நல்லவர்கள் வெறுமனே நல்லவர்களாக மட்டுமே வாழ முற்பட்டமைதான்.

நல்லவர்களாக இருப்பது மிகவும் அவசியம். அதைவிட முக்கியம் சீர்திருத்த வாதிகளாக இருப்பது.

## வரலாற்றில் இன்றைய தினம் 11.04.2018

1689 - பிரிட்டனின் இணை ஆட்சியாளராக மூன்றாம் வில்லியம் இரண்டாம் மேரி இருவரும் முடிசூடினர்.

1957 - சிங்கப்பூரின் சுயாட்சிக்குச் சம்மதித்தது பிரிட்டன்.

1979 - உகண்டாவின் சர்வதிகாரி இடிஅமின் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

1987- இஸ்ரேலிய அயலுறவுத்துறை அமைச்சர் சைமன், ஜோர்தான் மன்னர் ஹூசைன் இடையே லண்டனில் வைத்து ஒப்பந்தமொன்று கைச்சாத்தானது.

1995- மீண்டும் ரயர்போட்டு எரிக்கும் கலாசாரம் தோற்றம்பெற இடமளிக்கப் போவதில்லை என்று தெரிவித்தார் இலங்கையின் முன்னாள் அரச தலைவர் சந்திரிக்கா.

2000 - மன்னாரில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் மூன்று சடலங்கள் மீட்பு.

2017 - சிறுபான்மை மக்களை மைத்திரி அரசு தெருவில் நிறுத்திவிட்டது என்று அமைச்சர் ரிசாத் சீற்றம்.



1909 – இஸ்ரேலின் டெல் அவிவ் நகர் உருவாக்கப்பட்டது.

### நாளை

**12.04.2018**

வியாழக்கிழமை

**பங்குனி 29**

திதி: ஏகாதசி காலை. 07.14 வரை
நட்சத்திரம்: சதயம் பி.இ. 02.24 வரை
சுபநேரம்: 07.36–09.06 வரை
ராகுகாலம்: 01.36–03.06 வரை









கவிஞர் ஆ.முல்லைதிவ்யனின் ஏழாவது நூலான 'முல்லை நிலமும் நந்திக்கடலும்' கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டுவிழா அண்மையில் பொலிகண்டி கடற்கரையோர முன்பள்ளி முன்றலில் முல்லைத்தீவு முத்தையன்கட்டு வலதுகரை மகாவித்தியாலய அதிபர் திரு நாகேந்திர்ராசா தலைமையில் நடைபெற்றது. நூலினை வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிஸ்கந்தராசா சாந்தி வெளியிட்டு வைக்க முதற் பிரதியை அறிவு விருட்சம் அமைப்பின் பணிப்பாளர் ஐ.எம்.சுரேஸ் பெற்றுக்கொண்டார்.

க.சட்டநாதன்

# பரணீயின் யதார்த்தமான புனைவுகள்



க.பரணீதரனின் சிறு கதைத்தொகுதியான அல்வாய்ச் சண்டியன் படித்தேன். நல்ல சிறுகதைகளை உள்ளடக்கிய தொகுதி இது. ஓரிரு கதைகளில் தொய்வு தென்பட்ட போதும் அனேகமான கதைகள் இறுக்கமாகவும் செறிவாகவும் சொற்செட்டுடனும் புனையப்பட்டுள்ளன. இவரது கதைகள் கலாபூர்வமாகவும் உருவ அமைதியுடையனவாகவும் உள்ளடக்க ரீதியில் இயன்றளவு சமூகப் பின்புலத்தை அழுத்துபவையாகவும் உள்ளன. அத்துடன் கதைகள் நம்பகத்தன்மை உடையனவாகவும் நிஜ வாழ்க்கையின் சோகத்தையும் அழகையும் தருபவையாகவும் உள்ளன. அந்த வகையில் கலைஞன் என்ற முறையில் பரணீக்குக் கிடைத்த வெற்றி இது.

ஒவ்வொரு கலைஞனது படைப்பிலும் தான் வாழ்ந்த காலமும் அந்தக்கால மனிதர்களும் அவர்களுக்கிடையிலான சமூக முரண்களும் உயிர்ப்புடன் பதிவாகிவிடுவது மிகவும் இயல்பு. இவரது எழுத்திலும் இவை முழிப்புடன் இருப்பதைக் காணலாம். பொதுவாக அனுபவமும் வெளிப்பாடுமே கலை என்பார்கள். அது சிற்பம், சித்திரம், சினிமா, புனைவிலக்கியம் என எதுவாக இருந்தாலும் எக்காலமும் பொருந்தி வரக்கூடிய அம்சமாகும். பரணீயின் அனுபவங்கள் அவரது உள்மனதை உசுப்பி, உக்கிரமம் பெற்று, கலை நேர்த்தியுடன் புனைவுகளாக இந்தத் தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இந்த நல்ல கலைஞனின் புற உலகச் சீண்டல்கள் அகத்துறிஞ்சப்பட்டு, நெருடலேதுமற்ற மொழியில் மிகவும் இயல்பாக - அழகிய கதைகளாக வந்துள்ளன.

### யதார்த்தம் மிகுந்த கதை அம்சங்கள்

முதலில் 'வெட்டியான்' கதையையும் 'மீளப் பிறந்தவர்கள்' கதையையும் இணைத்துப் பார்ப்போம்.

சலவைத் தொழிலாளியாக இருந்து, வறுமையின் வலியால் வெட்டியானாக மாறிய மூர்த்தியும் முன்னாள் போராளியான

> ஒவ்வொரு கலைஞனது படைப்பிலும் தான் வாழ்ந்த காலமும் அந்தக்கால மனிதர்களும் அவர்களுக் கிடையிலான சமூக முரண்களும் உயிர்ப்புடன் பதிவாகிவிடுவது மிகவும் இயல்பு. இவரது எழுத்திலும் இவை முழிப்புடன் இருப்பதைக் காணலாம். பொதுவாக அனுபவமும் வெளிப்பாடுமே கலை என்பார்கள். அது சிற்பம், சித்திரம், சினிமா, புனை விலக்கியம் என எதுவாக இருந்தாலும் எக்காலமும் பொருந்தி வரக்கூடிய அம்சமாகும்.

மாலதி என்ற இளந்தளிரும் எமது அனுதாபத்தைக கோருபவர்கள். இருவருமே வாசக நெஞ்சம் வதைபடக்கூடிய காலச் சூழலில் வாழ்பவர்கள். வறுமை எனும் தீ நாக்கின் மையத்துள் வதங்கிக் கருகுபவர்கள். வெட்டியான் வேலையே இனி வேண்டாமென்று மனைவியின் தீர்மானத்துக்கு இசைவாக நடந்து கொள்ள விளையும் மூர்த்தி, தனது பிள்ளைகளின் பசிப்பிணி போக்க, மீளவும் வெட்டியானாகச் செயற்பட முனைவது - மிகவும் இயல்பு தப்பாத யதார்த்தத்துடன் இலட்சியம் பெறுமானமேதுமற்று கதையில் பயில்கிறது. இதைப்போலவே போராளியான இளந்தளிர் என்ற மாலதியும் தான் பிரதேசச் சமூக சேவைப் பிரிவு உத்தியோகத்தர் ஒருவரால் இனங்காணப்பட்ட போதும் அதனைச் சிறிதும் காட்டிக்கொள்ளாமல், தனது பிள்ளை களுக்காகவும் நோய்வாய்ப்பட்டிருக்கும் கணவனுக்காகவும் சமூக சேவைக் கிளையிலிருந்து உதவிப்பணம் பெறமுனைவது கூட இயல்பு தப்பாத மனித நடத்தைதான். இந்த இயல்பு தன்மையும் யதார்த்தமுமே இவ்விரு கதையையும் வெற்றி பெற்றவையாக ஆக்குகின்றன.

### டிமென்சியா பற்றிப் பேசுகிறது 'நினைத்ததுமற்று நினையாமையுமற்று'

'நினைத்ததுமற்றுநினையாமையுமற்று' கதை வயது முதிர்ச்சியின் காரணமாக ஏற்படும் ஞாபகமறதியை ஏற்படுத்தும் டிமென்சியா பற்றிப் பேசுகிறது. உளவியற்பாங்கான கதை. இந்தக் கதை, நாட்டுக்கு மிகவும் தேவையான கண்டு பிடிப்புக்களையும் ஆய்வுமுடிவுகளையும் தந்து உதவும் பேராசிரியர் எமிலின் நோய்க் கூறு களையும் அதன் வழி அவர் படும் நெருக்கடிகளையும் பேசுகிறது. அதே சமயம் அவரது 'பி.ஏ' யான டோலியின் பதற்ற நிலையையும் அவள் பேராசிரியர் பால் கொண்டுள்ள அளவுகடந்த பேரன்பினையும் அபிமானத்தையும் அழகாகப் பதிவு செய்கிறது. கதையில் பேராசிரியருக்கும் டோலிக்குமிடையிலான உறவு நிலை பற்றிய சித்திரிப்புக்கள் அற்புதமாக வந்திருக்கின்றன.

'பேராசிரியர் எமிலின் மூளைப்பகுதியின் சிதைவுடன் இந்த நாட்டின் எதிர்கால நம்பிக்கையும் சிதைந்து போய் விட்டமையை எண்ணிய போது, டோலிக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. சத்தம் எழுப்பாமலே விம்மினாள்' இந்தப் பகுதிதான் கதையின் மகுடம்.

### போர்க்கால வதைகளை வெளிப்படுத்தும் கதைகள்

இந்தத் தொகுதியில் இன்னும் சில கதைகள் நன்றாகவே சொல்லப்பட்டுள்ளன. முதலில் 'எழுதிச் செல்லும் விதியின் கை', போரின் போதும் அதன் பின்னரும் குருதி வெடில் அடித்த நாடாகவே எமது நாடு இருந்தது. இப்பொழுதும் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. களை எடுப்பு என்ற போர்வையில் படையினர் இளைஞர்களைக் கடத்துவதும் அழிப்பதுவுமே தமது முதன்மைச் செயலாகக் கருதி செயற்பட்டு வருகின்றனர். இத்தகைய செயற்பாட்டினால் அக்காச்சியின் மகனான பாஸ்கரன் ஓரளவு இயக்கத்தொடர்பு இருந்தது என இனங்காணப்பட்டு - அழிக்கப்படுகின்றான். அவனது சடலம் உரப்பையில் கட்டபட்டநிலையில் கிடக்கும் அவலத்தை, உக்கிரமான சித்திரிப்புடன் ஆசிரியர் கதையாக்கி இருக்கிறார். உள்ளத்தைத் தொட்டு உரசிச்செல்லும் உணர்வுகள் மலிந்த கதை.

'ஏக்கம்' சிறுகதை தமையன் தம்பி உறவு பற்றிக் கூறும் கதை தம்பி அமெரிக்காவிலிருந்து மனைவியுடன் ஊருக்கு வந்து திரும்பவுள்ளான். முன்னதாகவே அமெரிக்கா சென்ற தம்பி - குடும்பத்தின் பல சுக துக்கங்களுக்கு வரமுடியவில்லை. அவனால் மூத்த தங்கச்சியின் இளைய மகளின் திருமண வைபவத்துக்குத்




தான் வரமுடிந்திருந்தது. ஓரளவு சுய நல நோக்குடன் நடந்து கொள்ளும் அவனது அண்ணன் தம்பியின் தியாகங்களையும் தன்னலம் கருதாத அர்ப்பணிப்பையும் உணர்ந்து கொண்டவராய், அவன் மீளவும் அமெரிக்கா திரும்பப்போகிறானே என்ற கவலைகளுடன் அவனது பிரிவைத் தாளமுடியாது துயர்படு நெஞ்சத்துடன் அவன் வந்து தங்கி நின்ற அறைக்குச் செல்கிறார். அப்பொழுது அவரது மனதின் கசிவு இப்படி வருகிறது.

'தம்பியின் வாசனை அறை எங்கும் பரவியுள்ளமையை என்னால் நுகர முடிகிறது. அவனது உடுப்புக்களை எடுத்துத் தடவிக் கொடுத்து மடித்து வைத்துக்கொண்டிருக்கிறேன்..' அவரது இதமானமனக்குரல்கதையின் முழுத்தாற்பரியத்தையும் பிழிந்து தருகின்றது. ஞாபகங்களின் ஈரம் சுவறிய கதை.

### உளவியலை உரசுகிறது 'இடமாற்றம்'

'இடமாற்றம்' எனும் கதை இடமாற்றம் பெற்ற சமயபாட ஆசிரியர் ரஞ்சனது நடத்தைக்கோலங்களைக் காட்டுகிறது. அவர் இடமாற்றம் பெற்றதால் ஏற்பட்ட மன அழுத்தத்தால் மாணவர்களைத் தண்டிக்கிறார். குறிப்பாகப் பாலன் என்ற மாணவனே மிகுந்த தண்டனைக்கு உள்ளாகின்றான். அவன் எதுவுமே செய்ய முடியாத நிலையில், தனது வளர்ப்புப்பிராணியான ஜிம்மியைத் தண்டிக்கிறான். இவனது மன அழுத்தமே நாய் மீது செல்கிறது. உளவியல் நிலைமைகளை மிக நுண்மையாக இக்கதை சொல்கிறது. அத்துடன் அவனது தாயாரின் பதகளிப்பையும் அழகாகக் கூறுகின்றது.

'அல்வாய்ச்சண்டியன்' ஆசிரியது திமிறல்களையும் அவர் சக மாணவர்களை ஒரு வெறியுடன் தாக்குவதையும் விலாவாரியாகச் சொல்லும் கதை. அவரது இளமைக் காலத்தில் பள்ளிப்பருவத்தில் இரட்சகனாய் வந்த கந்தசாமி ஆசிரியரின் அரவணைத்துச் செல்லும் பண்பினை அனுபவ ரீதியாகப் பகிரும் கதை. ரமணன் இன்னொரு அல்வாய்ச் சண்டியனாக வந்துவிடுவானோ என்று கலங்கும் சந்தர்ப்பம் உளவள ஆலோசகராக இருந்த போது ஆசிரியருக்கு ஏற்படுகின்றது. கவுண்சிலிங் செய்வதன் மூலம் அவனைத் தேற்றுவதும் தெம்பூட்டுவதுமே கதையின் இன்னொரு பகுதி. கதை சொல்லலில் பின்நோக்கு உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது. நல்ல கதை.

தொகுதியில் உள்ள நீண்ட கதைகளாக 'படமுடியாது இனித்துயரம்', 'மானிடம் வென்றது' ஆகியவை இறுக்கம் குறைந்து, தளர்ச்சியுடன் இருக்கின்றன. இந்தக் கதைகள் செறிவும் இறுக்கமும் பெற்றிருக்கும் பட்சத்தில் விதந்து பேசக்கூடிய, கருத்தில் எடுக்கக் கூடிய கதைகளாக வந்திருக்க முடியும்.

'வேர்கொண்ட உறவுகள்' யதார்த்தச் செறிமானம் உடையதாக இருந்த போதும் ஒரு வகை இலட்சியத்தை அழுத்துவது போல எனக்குப்படுகின்றது. இந்தக் குறைபாட்டை மானிடம் வென்றது கதையிலும் காணலாம்.

கதைசொல்லி கதாபாத்திரங்களின் துயரில் வலிந்து பங்குகொண்டு கசிவது ஒரு வகையில் மிகு கழிவிரக்கமாகவே எனக்குப்படுகின்றது. இதனையும் ஆசிரியர் கவனம் கொள்ளலாம்.

சிறுகதையில் பாத்திரப்படைப்பா? என்று கேட்கக்கூடும். அப்படி அல்ல, ஓவியத்தில் தூரிகையின் மெல்லிய மின்னல் கோடுகளாக அவை வரலாம். இவரது கதைகளில் அந்தத் துல்லியத்தன்மை மிக்க பாத்திரங்களைப் பார்க்கலாம்.

நல்ல படைப்பாளியான ஆசிரியர் சஞ்சிகை வெளியீடு நூற்பதிப்பு, ஆவணச் செயற்பாடுகள் எனத்தனது நேரத்தின் பெரும் பகுதியைச் செலவிடுவதால் அவரது படைப்பு ஆளுமை விகசிப்புப் பெறாமல் போய்விடுவது கண்கூடு. எனவே, அவர் படைப்பதற்கென ஓரளவு நேரத்தை ஒதுக்கிச் செயற்பட வேண்டும். அப்படிச்செயற்படும் பட்சத்தில் அவரிடமிருந்து இன்னும் பல நல்ல கதைகளை தமிழ்ச்சூழல் பெறும் என நம்பலாம்.

# ‘ஸ்ரீராமபிரான்’

## பஞ்சாமிர்த ராம சங்கீர்த்தனங்களில் சேமம் நல்கும் சுந்தர வடிவினன்

கே.எஸ்.சிவஞானராஜா



**இராமநவமி**

வட தமிழீழத்தில் மருதனார்மடம் என்கின்ற மாநகரத்திலே, ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் எழுந்தருளி அருள்கூறும் திவ்ய சேத்திரத்திலே, கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ இராம பிரான் அவதரித்த இராமநவமி திருநாளின் மகிமைப் பேற்றினை உளமார அனுபவித்தோம். ‘ராமா…ராமா…’ என்று பக்தி சிரத்தையோடு அடியவர்கள் நாவினிக்க உச்சிரிக்கும் போது அவன் தூய்மையடைகிறான். சகல பேறினுக்கும் உரியவனாகிறான். இராம அவதாரம் என்பது, ஒவ்வொரு மனிதனையும் வாழவைக்கும் தார்ப்பரியங்களை எடுத்துக்கூறும் வகையினதாய் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறியின் உருவகமாய் விளங்குகிறது.

மனிதர்களைத் தெய்வங்களாக மேன்மை பெறச் செய்வதும், தெய்வங்களே மனிதர்களாக வாழும்படி காட்சி அமைவு தந்து வியப்பதும் இந்த இராம நவமியின் அற்புதச் சித்தரிப்புகளாகும்.

**தவப்பயனின் பேறு**

தசரதன் கோசலை பெற்ற தவப்பயனின் பேறாக இராமபிரான் தெய்வமாகப் போற்றப்படுகின்றார். அதைவிடவும் இராமபிரான் சீதா பிராட்டியோடு வாழ்ந்து காட்டிய தர்மத்தினாலும், இராவண சம்காரமே அதர்மத்துக்கு வழங்கிய தீர்ப்பதனாலும், மக்களின் நலன் என்கின்ற உயரிய நோன்பின் பாற்பட்ட ஆட்சியின் தாற்பரியமாகவும் மிளிர்வுற வழிகாட்டியதனாலும் இராமன் தெய்வமாக உயர்த்தப்படுகிறான்.

தற்கால உலகின் இயங்குநிலை கொள்ளும் ஒவ்வோர் அசைவுகளும் இனித்தமுறக் கற்றுக்கொள்ள வேண்டிய பல தனித்துவ அம்சங்களை, கம்பராமாயணம் என்ற காப்பியம் கொண்டுள்ளதை நாம் உளமார ஏற்றிருக்க வேண்டும்.

**பக்தி நிலை கொ(க)ண்ட உத்தமர்**

அறம் நீங்காது திருப்பொலிவோடு வாழும் முறைமையை இராமனும் சீதையும் இல்லறம் என்கின்ற நல்லறத்தின் சிறத்தல் ஊடே எமக்கு எடுத்துக் காட்டியுள்ளனர். அவர்கள் இருவரும் உடலாலும், உள்ளத்தாலும் உண்மையாலும், உச்சாடனத்தாலும், உணர்வாலும், ஒழுக்கத்தாலும் வாழ்ந்து வெளிக்காட்டினர். இல்லறத்தின் பக்தி நிலை கண்ட உத்தமர்களாக திகழ்ந்தனர்.

சீதா, இராம, இலட்சுமண, பக்த ஹனுமான் அருள் ஒழுக ஒன்றித்த திருக்காட்சியின் பேற்றினை இந்த இராம நவமித் திருநாளில் கண்டு அனுபவிக்கலாம்.

இராமனை ‘ராமா…ராமா…’ என்று உச்சரிப்போர் மரணபயம் அறவே நீங்கப் பெற்று இராமனின் கருணையால் வயப்படுவர். ஸ்ரீராமஜெயம் என சொல்வோருக்கும், எழுது வோருக்கும், சங்கீதம் பாடுவோருக்கும், அதனைக் கேட்போருக்கும் ஆயுள் நீளும். அறிவின் சால்பு மிகுதியாய் செந்தளிக்கும். ராம நாமத்தை 96 கோடி தடவைகள் உச்சரித்த பேற்றினால் சீதா இராம தரிசனத்தை நேரிலே கண்டு பேரின்பம் அடைந்தவர் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள். அவருடைய கீர்த்தனைகள் யாவும் ஸ்ரீ ராமனைச் சரணடைவதாகவே படைக்கப்பட்டுள்ளன. அவருடைய கீர்த்தனைகளுள் பஞ்சாமிர்தமாய் இனிப்பவை பஞ்சரத்தினக் கீர்த்தனைகள். இவை உலகில் நீள் பெறுதியாய் நிலைத்து நின்று வாழ்ந்து எமக்கு வரந்தரக்கூடியன. அவற்றை ஸ்ரீ ராம நவமியன்று இசையோடு, உரியவாறு, உரியவர்கள் பாடும் போது ஸ்ரீராம தரிசனம் ஸ்ரீ ஆஞ்சநேய சகிதமாய் கிடைத்தே தீரும்.

**பஞ்சரத்தின ஆராதனை கண்ட மருதனார்மடம்**

இராம நவமியன்று, மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேய சுவாமி ஆலயத்தில், கலாபூஷணம் திருமதி. ஞானகுமாரி சிவனேசன் தலைமையில் பஞ்சரத்தின ஆராதனையும், அபிஷேகமும் களிப்புற இடம் பெற்றன. ஐம்பது கலைஞர்கள் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். ஆலயத்துக்கு வருகை தந்த அடியவர்களும் இராம தரிசனம் கண்டு பூரித்தனர். பெருவாழ்வு கண்டு கொண்டனர்.

அனைத்துக் கலைஞர்களுக்கும் சிவஸ்ரீ. சுந்தரேஸ்வரக்குருக்கள் உரிய மதிப்புறுத் தலை வழங்கினார். ஸ்ரீ இராம பிரானின் திருவருளுக்கு உரித்துடையவராய் அனைவருக்கும் அருளின் நீதியை மேன்மை கொள்ள வழங்கியருளினார்.

---

# ‘சிறாப்பர் மடம்’

## சிவப்பணியின் உயரிய பீடம்

### சிவப்பொலிவு காண சைவ சமயிகளாய் பணி செய்வோம்

கருடன்

**கீரிமலை**

கீரிமலை என்னும் பதி சித்தர்களும், முனிவர்களும், சிவமயமான பக்தர்களும் பக்தியின் திருப்பொலிவுடன் தவமாக வாழ்ந்த சிவபூமியாக சிறப்புறுகிறது. இங்கு அற்புதங்களும், அதிசயங்களும் பொற்புடன் பேறாகின்றன.

இந்தியா, இலங்கை, புலம் பெயர் தேசம் என அனைத்து இடங்களில் இருந்தும் பல்லின மக்களும், பன்மொழியாளர்களும் கீரிமலைக்கு வருகை தருகின்றனர். அவர்கள் இறை தரிசனம் காண்கின்ற போது, தாமும் சிவமாகப் பொருள் கண்டு ஆச்சரியமடைகின்றனர்.

**தலச் சிறப்பு**

சப்த தீர்த்தங்களும் கீரிமலையில் நாடி வந்து கலக்கும் இறை மாண்பு விந்தை. நகுல முனிவரும், மாருதப்புரவீகவல்லியும் வரம் பெற்ற மூர்த்தி, தல, தீர்த்தத்தின் அமைவு இங்குள்ள தீராத மகிமை. சிறப்பாக தேவர்களும், சிவபதமடைந்த புண்ணிய ஆத்மாக்களும் வானிருந்து கிழிறங்கி வந்து பான்மை தரு மேன்யுறு ஞானமொடு அருள் கண்டு பரவுதல் தொன்மை.

இங்குள்ள இன்னுமோர் சிறப்பின் அம்சம் தான், கிரிமலைக்கு மகுடம் வைத்தாற்போலச் சிவப்பணி ஆற்றிச் சிறந்த ‘சிறாப்பர் மடம்’. சைவ சமயத்தின் ஒரு மாபெரும் பீடமாக இது விளங்கியது. சிவமணம் கமழ்ந்த ஒரு ஷேத்திரகோட்டம். புராணபடனமும், திருமுறைகளும், பஜனையும், பூஜையும், தூப தீபங்களும், கோமாதா வழிபாடும், அன்னதானமும், தாக சாந்தியும் நாள்தோறும் தங்கு தடையின்றி அரங்கேறிய புண்ணிய ஆச்சிரமம் இது. இருபதாம் நூற்றாண்டிலே சிறாப்பர் மடம் ஆற்றிய சிவப்பணியாலே சைவம் பொலிவுற்றுத் தழைத்தோங்கியது மட்டுமல்ல, உலகத்தவர்களையும் இங்கு அழைத்து வந்து வாழ்வாங்கு வாழச் செய்தது எனலாம்.

**புராதன தொன்மம்**

செங்கட்டிகளாலும், சுண்ணாம்புக் கலவையினாலும் பெரும் நிலப்பரப்பில் அமையப் பெற்று, பல அறைகளின் கோட்டமாக மிளிர்ந்த ‘சிறாப்பர் மடம்’ தற்போது போரின் நிமித்தம் கலையிழந்து கூரையிழந்து வானம் பார்த்த மாடமாகக் காட்சி தருகிறது. “வடபுறமாகவும், தென்புறமாகவும் பெருவாயில்களைக் கொண்டதான விசால மண்டபங்கள், புராண படன இருக்கைகள், அமுது ஆக்கும் அடுக்களைகள், அடியவர்களுக்கான தங்குமிட வசதிகள், ஆய்வரங்க நூல் நிலையம், நோன்புகால மௌன கூடங்கள், சயன அறைகள், தொட்டிகளோடு கூடிய துலாக்கிணறு, கோமாதா சாலை, திண்ணைகள், கழிப்பறைகள், வடக்கு வாசலை அலங்கரிக்கும் விமான விதான பீடங்கள், ஆவுரஞ்சிக்கல்லு, வாய்விடாச்சாதிகளான தண்ணிர்ப்பெருந்தொட்டிகள், ஆழ்ந்து அகன்ற கண்ட கல்லினாலான சுண்ணாம்பு மதில்கள், சிவாம்சமானதும் ஐஸ்வரியங்களினால் பொலிந்த அழகொழுகு சிற்ப சித்திர தோரணவாயில்கள்" என யாவும் ஒருங்கே சேர்ந்த புராதனத் தொன்மமாக சிறாப்பர்மடம் திகழ்கிறது.

சைவ பாரம்பரியம் சொட்டுகின்ற இம்மடத்தின் பரிபாலனப் பேறதனால், வேத நெறி தழைத்தோங்கி மிகு சைவத்துறை சிவத்தின் அற்புதமாய் துலங்கியது.

1969 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி கிரிமலைக்கேணியும், மண்டபமும் புதுப்பிக்க ஆவனசெய்யப்பட்டபோது, சிறாப்பர் மடத்தில் புராணபடன வித்தகர்களின் ஆசியும் பெறப்பட்டதாக வரலாறுகள் உறுதி பகர்கின்றன.





**தொல்லியல் மையம்**

நகுலேஸ்வர ஆலயத்தோடு சிறாப்பர் மடமும் நெருங்கிய ஈடுபாட்டைக் கொண்டிருப்பதனால் இதன் தோற்றப்பாடு ஆய்வுக்குரியது. ஆனாலும் தொல்லியல் மையம் இதனைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வரையறை செய்து அடையாளப்படுத்தியிருப்பதனால், சிறாப்பர் மடத்தினைச் சிறைபிடித்து வைத்திருக்கிறதே அல்லாமல், உருப்படியாக அதனை வாழ்விக்க எந்தவொரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்பது கவலைக்குரிய விடயம். அடையாளப்படுத்தவேண்டிய “'கன்னியா' வெந்நீரூற்றுச் சூழல் பகுதி, பொலன்னறுவை சிவன் ஆலயச்சூழல் பகுதி, கந்தரோடையின் மேட்டுநில ஆய்வுத்திடல், மன்னார் மாந்தைக் கூடல், கீரிமலை நகுலமுனி சூழல்பகுதி, மாவிழிதிட்டியும் கேணிக்கரையோரமும்" போன்ற தொன்மையைப் பகரும் பகுதிகள் தமிழர்களின் நாகரீகங்களைப் பறைசாற்றி நிற்கின்றன. இவற்றினைத் தோண்டிக் கிளறக் கிளற இன்னும்பல உண்மைகள் வெளிப்பட்டே தீரும்.

**சிறாப்பர் மடம் புதுப்பொலிவு பெற வேண்டும்**

ஆக, சிறாப்பர் மடம் சிவபூமியில் புத்துயிர் பெற மீள் சீரமைப்புச் செய்யப்பட வேண்டும். சைவசமயம் என்பதால் ஆராயமல் தள்ளிப்போடுகின்ற சோம்பல் நிலையும் தவிர்க்கப்பட வேண்டும். சிறாப்பர் மடத்திலிருந்து ஒரு அரச மரம் வானுயர வளர்ந்து வருகிறது. என்ன நடக்கப் போகிறதோ தெரியவில்லை. அதன் ஆட்சி குறித்தும் சிந்திக்க வேண்டும்.

மகா சிவராத்திரியன்று அங்கு இடம்பெற்ற பட்டிமன்ற நிகழ்வின் முடிவு, ஆன்மிகமே சமுதாய முன்னேற்றத்துக்கு பெரிதும் துணைபுரியும், அறிவியல் அதனின்றும் நீங்கி இரண்டாவது பட்சமே என்ற தீர்ப்பும் வழங்கப்பட்டமை நோக்குதற்குரியது. இங்கு சமூக முன்னேற்றத்தை எடுத்து நோக்கின் இரண்டுமே சமாந்தரமாகப் பயணிக்கவே சிறாப்பர் மடம் தன்னைத் தீர்ப்பாக்கி எல்லோரையும் கூவி அழைப்பது தெரிகிறது. எமை உறக்கத்தில் இருந்து விழித்தெழப் பணிக்கிறது.

All Kind of offset & Digital printing

# Vista8 printers

Computer Designing,
Offset Printing,
Digital Printing
Screen Printing
Mug & Plate Printing
T - shirt design & Printing
Photocopy
Shield & ETC...




## Nameboard Work

பாடசாலைகளுக்குத் தேவையான சான்றிதழ்கள்,
வீர, வீராங்கனைகளுக்கான வெற்றி இலக்கங்கள், வெற்றிக் கேடயங்கள்,
பதக்கங்கள், சிறப்புமலர்கள் மற்றும் அனைத்து வகையான
அச்சுப் பதிப்புக்களையும் மிகக்குறைந்த விலையில்
துல்லியமாக அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள....

No :.116D,
Ramanathan Road
Kaladdy Junction, Jaffna.
vista8print@gmail.com

0212215488
0755206848
0777918373

HARI REAL ESTATE

## வீடு/ காணி விற்பனைக்கு

- மண்டைதீவு 08 ஆம் வட்டாரத்தில் 50 பரப்பு வெற்றுக்காணி நன்னீர் வளத்துடன் விற்பனைக்குண்டு. (தென்னைப் பயிர்ச்செய்கைக்கு மிக உகந்தது)
- திருநெல்வேலி கலாசாலை வீதி 04 ஆம் ஒழுங்கையில் அழகிய இரண்டு புதிய வீடுகள் விற்பனைக்குண்டு. 1200 Sq.ft, சுற்றுமதில், தூய நன்னீர் மற்றும் இணைந்த குளியலறை இவற்றுடன் நட்புறவுமிக்க சுற்றயல்.
- கொக்குவில் கருவேலடி வீதியில் 03½ பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு. (ஆடியபாதம் வீதியிலிருந்து 02 ஆவது காணி)
- யாழ்ப்பாணம் - கேரதீவு சாலையருகில் நாவற்குழி பொதுநோக்கு மண்டப வீதியில் 15.5 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு - தென்னைப் பயிர்ச் செய்கைக்கு மிகப் பொருத்தமானது.

## ஹரி றியல் எஸ்டேட்

இல. 10A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி +94 021 221 4422
மொபைல் + 94 70 300 4000
முகநூல் harirealestate.lk
POWERED BY HARI

## பிறிமியர் என்டெர்பிறைசெஸ்

எம்மிடம் உங்கள் பாவனைக்குரிய......

- இலத்திரனியல் தராசு மற்றும் பில் மெசின் விற்பனைக்கு உண்டு.
- இலகுத்தவணை முறையில் பெற்றுக் கொள்ள முடியும்.




உடன் தொடர்பு கொள்ளவும்:
076 443 1545, 076 362 6615
பருத்தித்துறை வீதி, குஞ்சர்கடைச் சந்தி, கரணவாய், கரவெட்டி.

## யாழ். திருநெல்வேலியில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட

# யாழ் வைத்தியசாலை

24 மணிநேர சேவை

தற்போது அதிநவீன வசதிகளுடன் கூடிய சத்திர சிகிச்சைக் கூடம்



அக்ரகாரா, அரச/ ETF தனியார் நிறுவனங்களின் காப்புறுதி அங்கீகாரம் பெற்றது.

- வெளிநோயாளர் பிரிவு O.P.D
- மருந்தகம் Pharmacy
- ஆய்வுக்கூட சேவை Laboratory

✓ **Laproscopy Surgery** (வீடியோ மூலம் சத்திரசிகிச்சை)
- Hernia (கேணியா)
- Appendectomy (அப்பண்டிஸ் அகற்றல்)
- Hysterectomy (கருப்பை அகற்றல்)
- Cholecystectomy (பித்தப்பை அகற்றல்)
- Dye Examination



✓ **General Surgeries**
- Vericosevein (வெறிகோஸ் சத்திரசிகிச்சை)
- Hernina (கேணியா சிகிச்சை)
- Appendection (அப்பண்டிஸ் அகற்றல்)

✓ **E.N.T சத்திர சிகிச்சை**
- Nasal (மூக்கு)
- Septoplasfy (மூக்கு சீராக்கள்)
- Ear (காது)
- Myringoplasy (காது சௌவு துவாரம் அடைத்தல்)
- Mastoidectomy
- Thyroidectomy (தைரொட்டு சுரபி அகற்றல்)
- Parotidectomy (உமிழ் நீர் சுரப்பி அகற்றல்)




✓ **Endocopy** (அதிநவீன என்டரஸ்கொப்பி)

315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 3533, 021 222 1011, 0777 781 005

மேலதிக தகவல்களுக்கு: 077 310 7685

# கேள்விஅறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை– 2018

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிராந்தியபெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்டஅட்டவணையில் விவரிக்கப்பட்டவேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02. கேள்வியானது தேசிய போட்டிவிலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

03. ஒப்பந்தமானது நிர்மாணகைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு.பொது நிதி சுற்றறிக்கை. இல.04/2016(i) இற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.

04. தேவையான தகைமைகள்.கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **ஆணையாளர்,மாநகர சபை,யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 2216468, 021 2222019)** என்னும் முகவரியிலிருந்து மேலதிகதகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலைநாள்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 2.00 மணிவரை 11.04.2018– 25.04.2018 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியிலிருந்து 11.04.2018 ஆம் திகதியில் இருந்து 25.04.2018 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2.000.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகைப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **ஆணையாளர்,மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 26.04.2018 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 நாள்களுக்கு (28.06.2018 வரை) செல்லுபடியாகும்.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

10. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம். மாநகர சபை. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 19.04.2018 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.

11. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லு படியாகும் காலம் |
| 1 | JMC/WD/06/PSDG/ 2018/01 | களஞ்சியஅறை அமைத்தல் - காக்கைதீவு | 3.5mn | 04 மாதங்கள் | C8 கட்டடம் | 35,000.00 | 26.07.2018 |

**ஆணையாளர்,**
**பிராந்தியபெறுகைகள் குழுத்தலைவர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.** (IN/64527)(11,17) **10.04.2018**

# பெறுகை அறிவித்தல்
## காரைநகர் பிரதேசசபை, காரைநகர்
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை-2018

01. தலைவர், பெறுகைக்குழு, காரைநகர் பிரதேசசபை, காரைநகர் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02. பெறுகையானது பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் பதிவுள்ளவராகவும், கறுப்புப் பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் காரைநகர் பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கில மொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை வலந்தலை, காரைநகரில் அமைந்துள்ள காரைநகர் பிரதேச சபையில் 11.04.2018 தொடக்கம் 24.04.2018 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை, மீளளிக்கப்படாத பணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். .

05. பெறுகை ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 25.04.2018 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், பிரதேசசபை பெறுகைக் குழு, காரைநகர் பிரதேசசபை, காரைநகர் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

06. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் காரைநகர் பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 19.04.2018 ஆம் திகதியன்று பி.ப 02.00 மணிக்கு நடைபெறும்

07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்திமூன்று - 27.06.2018) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் ( VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| 1 | கொட்டப்புலம் வீதி புனரமைத்தல்- கல்லிட்டுத் தாரிடல் | 4.30 | 02 மாதம் | C8 | 43,000.00 | 25.07.2018 |

**தொ.இல 021-225-1735**

**தலைவர்**
**பிரதேசசபை பெறுகைக்குழு**
**காரைநகர் பிரதேசசபை**
**காரைநகர்.**
**10.04.2018.** (IN 6450)(4.17)

# நாகபூஷணி திருமண சேவை

**பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்.** நீங்கள் விரும்பும் அரச உயர்பதவியில் உள்ளவர்கள், வங்கியாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், தனியார்துறையினர், வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப்பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

**47/ 1, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.**
**(தம்றோக்கு முன்பாக)**
**077 138 7596, 071 8945 692**

# கண்ணீர் அஞ்சலி



எமது சக மாணவியும் அளவெட்டி அருணோதயக் கல்லூரி ஆசிரியையுமான **தட்ஷாயினி கணேசன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

## பொன்னம்பலம் கணேசன்
(ஓய்வு நிலை முகாமி சீமெந்துக் கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை)

கடந்த 06.04.2018 அன்று சிவபதமடைந்ததையிட்டு அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**முதுகலைமாணி மாணவர்கள் (ஆங்கிலம் 2017 - 2019)**
**தேசிய கல்வி நிறுவகம்.** (IN 64470)(4.17)

# 10ஆம் ஆண்டு நினைவாஞ்சலி



## பொன் துரைஐயா
(வன இலாகா அதிகாரி)

பிறப்பு 20.07.1933 இறப்பு 02.04.2008

திதி: தேய்பிறை ஏகாதசி

எங்களை விட்டுப் பிரிந்து பத்தாண்டு
அப்போதிருந்து எங்களுக்கு இல்லை புத்தாண்டு
அடிக்கடி அதிசயக் கனவுகள் கண்டு
அதில் எம்முடன் கூடி நிற்கக் கண்டு
அப்போது நினைக்கும் இது கனவு எண்டு

என்றும் உங்கள் நினைவுகளுடன்.......
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

**நவற்கிரி, புத்தூர்.** (CS 15493) (14,17)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 . 08 . 1947



மறைவு 16 . 03 . 2015

## அமரர் சதாசிவம் சிவஞானசுந்தரம்
திதி:- அபரபக்க ஏகாதசி (11.04.2018)

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள் மூன்று ஆனாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம் இதயங்களில் நிலைத்திருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிராமணவீதி, தும்பளை,
பருத்தித்துறை. (IN/64217)(11,17) **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்
## வல்லிபுரம் செல்லத்துரை



**மலர்வு: 28.01.1937**
**உதிர்வு: 07.04.2018**

யாழ்.நீர்வேலி தெற்கு. பூதர்மடத்தடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Vreden ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்லத்துரை 07.04.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராமு வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, இராசதுரை மற்றும் அப்புத்துரை (நீர்வேலி), பொன்னுத்துரை (கொழும்பு) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற காமாட்சி மற்றும் மீனாம்பிகை, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாஸ்கரன் (பிரான்ஸ்), பரமேஸ்வரி (சாந்தி - பிரான்ஸ்), பவானி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2018) புதன்கிழமை முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை Friedh of. Z Will brocker STR.77. 48691, Vreden, Germany இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**பொன்னுத்துரை (கொழும்பு)**

(ACO/215)(11.17)

## திட்டமிட்ட...

முல்லைத்தீவு, ஏப்.11

தமிழர்கள் ஆண்ட நிலங்களைத் தமிழர்கள் தான் ஆளவேண்டும். இனங்களுக்கிடையில் மோதல்களை உருவாக்கிக்கொண்டிருக்கும் தென்னிலங்கை இனவாதிகளின் எண்ணங்கள் சிதைக்கப்பட வேண்டும். உண்மையான நல்லாட்சியாக இருந்தால் தமிழ்மக்களுக்கு உரிய தீர்வு கிடைக்க வழிசெய்யவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் திட்டமிட்டு தமிழர் நிலங்களை அபகரிக்கும் அரசின் செயற்பாடு தொடர்பாக ஆராய்வதற்கு வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையிலான அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அடங்கிய குழு நேற்று முல்லைத்தீவுக்குச் சென்றது. அவர்கள் அங்கு பல இடங்களையும் பார்வையிட்டனர். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இனவாதிகள் கிழக்கை மட்டுமல்ல வடக்கையும் முற்றுமுழுதாக அபகரித்து தமிழர்களை ஒடுக்க முயல்கின்றனர். அதற்கான கருவியாகப் பயன்படுத்தப்பட்டதுதான் மகாவலி எல்வலயம். இன்று (நேற்று) மாகாணசபை உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்ட சில இடங்களைப் பார்வையிட்டுள்ளோம்.

பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த விகாரை, அத்துமீறிய சிங்கள மீனவக் குடியேற்றங்கள், கொக்கிளாயில் இருந்த 12 தமிழர்களின் கரைவலைப்பாடுகள் சிங்களவர்களிடம், அரசில் உயர் பதவிகளில் இருப்பவர்கள் பெரும்பான்மையான காணிகளை தங்களின் உறவினர்களுக்கு பரிந்துரைகளைச் செய்து அதில் தோட்டங்கள் பலவற்றை உருவாக்கியுள்ளார்கள்.

தமிழர்களின் முந்திரிகைக்குளம், ஆமையன் குளம் என்பனவற்றைச் சிங்கள பெயர் மாற்றம் செய்துள்ளார்கள். தமிழர் வாழ் இடங்களில் மாயபுரம், கோகிலபுர என்கின்ற திட்டங்கள் ஊடாக சிங்கள குடியேற்றங்க ளைச் செய்து தமிழர்களின் நிலங்களை அபகரிக்கின்றார்கள்.

நாயாற்றின் கரையோரங்களில் அனுமதி பெறப்படாமல் நூற்றுக்கணக்கான மீனவக் குடும்பங்களைக் கொண்டுவந்து சட்டவிரோத தொழில் செய்கின்றனர். இந்த இடங்களை மாகாணசபை உறுப்பினர்கள் பார்வையிட்டுள்ளனர். இந்த நிலமைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்.

இந்த விடயங்கள் மாகாணசபையில் கடந்த நான்கு ஆண்டுகளாக என்னால் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. இதற்கு ஒருமித்த கருத்தை அனைவரும் பதிவு செய்துள்ளார்கள். இத்துடன் நின்று விடாது வடக்கில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடவுள்ளோம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் குரல்கொடுத்து தெற்கின் அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாட வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்துள்ளோம். தமிழர்களின் நிலங்கள் பாதுகாக்கப்படவேண்டும்- என்றார். (ம-21,8,ரி3)

## மாகாண...

முல்லைத்தீவு, ஏப்.11

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின்வடக்கு மாகாண செயற்பாடுகள் 13ஆவது திருத்தத்துக்கு உட்பட்ட வகையில் வடக்கு மாகாண சபையின் அனுமதியைப் பெற்று அல்லது அவர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் செயற்படுத்தப்படவேண்டும் என்று தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன்.

முல்லைத்தீவில் திட்டமிட்டு தமிழர் நிலங்களை அபகரிக்கும் அரசின் செயற்பாடு தொடர்பாக ஆராய்வதற்கு வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையிலான அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அடங்கிய குழு நேற்று முல்லைத்தீவுக்குச் சென்றது. அத்துமீறிய நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதிகளையும் அவர்கள் பார்வையிட்டனர். அவர்களுக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனும் சென்றிருந்தார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கில் கொக்கிளாய் உடன் சேர்ந்த பிரதேசங்கள் மணலாறு என்று எங்களால் அழைக்கப்பட்டது. பின்னர் அது வெலிஓயா என்ற பெயரில் சிங்கள ஆக்கிரமிப்பு பிரதேசமாக அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இது முற்றுமுழுதாக சிங்கள மக்களை குடியேற்று வதற்காக அமைக்கப்பட்ட பிரதேசமாகவே உள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கீழ் இந்த மகாவலி அபிவிருத்தி அதிகார சபை உள்ளது. இந்த அதிகார சபையைப் பயன்படுத்தித் தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. நாம் இதைப் பற்றிப் பேசினால் பரிசீலிக்கலாம் என்று கூறுகின்றார்கள். ஆனால் அவர்களின் நிகழ்ச்சிநிரல் மாறவில்லை. தற்போது கல்யாணபுர, ஜனகபுர எனப் பல புதிய கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தக் கிராமத்தில் வாழும் பெரும்பான்மையினத்தவர்கள் கடும் குற்றங்கள் புரிந்த வர்கள். அவர்களை சிறைகளில் இருந்து கொண்டுவந்துதான் ஆரம்பத்தில் குடியேற்றினார்கள். அரசு ஒரு பிழையான நடவடிக்கைகயை மேற்கொண்டுள்ளது.

முன்னர் அரச தலைவராகப் பதவி வகித்த மகிந்த ராஜபக்ச தமிழ் மக்களின் காணி உறுதிகளை மாற்றிச் சிங்கள மக்களுக்கு உறுதிகளை வழங்கினார். தமிழர்களின் பூர்வீக நிலங்கள் திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்படுகின்றன. 13ஆவது திருத்தச் சட்டத்தையும் மீறி மகாவலி அபிவிருத்தி அதிகார சபை தமிழர்களின் காணிகளை அபகரிப்பது ஏற்கமுடியாத செயல். தமிழர்கள் திரண்டு போராட வேண்டிய நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் ஆயுதபலம் காரணமாக மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் நடவடிக்கைகள் தமிழர் வாழ்விடங்களில் நடக்கவில்லை. தமிழர்களின் ஆயுதபலம் ஒடுக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான நாம் ஓர் பலமற்ற நிலையிலேயே அரசுடன் பேச்சுக்களில் ஈடுபட வேண்டியுள்ளது- என்றார். (ம-8,ரி3)

## 10 நிமிட...

நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டம் சுமார் 10 நிமிடங்கள் நடைபெற்றது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உட்படப் பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோருக்கான மனுவும் கையளிக்கப்பட்டது.

திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பை நிறுத்து, தாயகம் காப்போம் தமிழ் மண் மீட்போம், எமது நிலம் எமக்கு வேண்டும், தமிழர் வாழ்விடங்களைப் பறிக்காதே, அத்துமீறிய குடியேற் றங்கள் நிறுத்தப்பட வேண்டும், கோவில்களை ஆக்கிரமிக்காதே, அத்துமீறிய மீனவரைத் தடுத்து நிறுத்து போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கருத்துத் தெரிவித்தார்.

"நாம் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களையும், அத்துமீறிய தென்பகுதி மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளையும் பார்வையிட்டோம்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சபையில் ஆராய்வோம். இந்த விடயத்தை இத்துடன் விடாது தொடர்ந்து நடவடிக்கை எடுப்போம். எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து, அரசுக்குப் பெரும் அழுத்தத்தைத் கொடுத்து இவ்வாறான நடவடிக்கைகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுப்போம்." என்று தெரிவித்தார். (ம-8,ரி3)

## கேப்பாபிலவு...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராசா.

முல்லைத்தீவில் திட்டமிட்டு தமிழர் நிலங்களை அபகரிக்கும் அரசின் செயற்பாடு தொடர்பாக ஆராய்வதற்கு வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையிலான அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அடங்கிய குழு நேற்று முல்லைத்தீவுக்குச் சென்றது. அத்துமீறிய நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதிகளையும் அவர்கள் பார்வையிட்டனர். அவர்களுக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசாவும் முல்லைத்தீவு சென்றிருந்தார். அவர் கேப்பாபிலவில் 408ஆவது நாளாகத் தொடர் போராட்டம் நடத்திவரும் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அங்கு விடுவிக்கப்பட்ட பகுதிகளில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அமைத்துக் கொடுக்கப்படும் வீடுகளையும் பார்வையிட்டார்.

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மாகாண சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள காணிப் பிரச்சினைகள் தொடர்பிலும் தொடர்ச்சியான சிங்களக் குடியேற்றங்கள், வெளிமாவட்ட மீனவர்களின் பிரச்சினைகள் என்பன தொடர்பிலும் பார்வையிட மாகாண சபை உறுப்பினர்கள் வந்துள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக நாங்களும் வந்துள்ளோம்.

அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் இடையே பல முரண்பாடுகள் இருந்த பொழுதிலும் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவோம் என்று எம்முடன் கடந்த 3ஆம் திகதி நடந்த சந்திப்பில் கூறியிருந்த னர்.

மகாவலி வலயத்துக்குள் வரும் 2 ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் கையகப்படுத்தப்படும் அபாயம் இருக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும், நானும் இது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் பேசியுள்ளோம். மகாவலி அபிவிருத்தித் திட்டம் அரச தலைவரின் அமைச்சுக்குள்ளேயே வருகின்றது. அந்தக் காணிகளை சிங்களக் குடியேற்றங்களுக்குப் பயன்படுத்த முடியாது. அவ்வாறு பயன்படுத்துவதாக இருந்தால் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களே அங்கு குடியேற்றப்பட வேண்டும். தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களோ அல்லது வெளிமாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்மக்கள் அல்லாதவர்களோ மகாவலி அபிவிருத்திட்டத்தின் கீழ் குடியேற்றுவதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று அரச தலைவரிடம் எடுத்துரைத்தோம். அவ்வாறு நடக்காது என்ற வாக்குறுதியை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எமக்குத் தந்துள்ளார்- என்றார். (ம-8,ரி3)

## ஆக்கிரமிப்பு...

சென்று அவதானித்தது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் அதற்குரிய ஏற்பாடுகளை மேற் கொண்டிருந்தார்.

கொக்கிளாய் இறங்குதுறைப் பகுதியில் தமிழ் மக்களின் கரைவலைப்பாடுகளை ஆக்கிரமித்து அத்துமீறி சிங்கள மீனவர்கள் கரைவலை இழுப்பதை நேரடியாக அவர்கள் பார்வையிட்டு உறுதிப்படுத்தினர்.

உழவு இயந்திரங்களைக் கொண்டு தடை செய்யப்பட்ட முறையில் சிங்கள மீனவர்கள் கரைவலை இழுப்பதையும் அவர்கள் நேரில் அவதானித்தனர்.

கொக்குத்தொடுவாயில் உள்ள கோட்டைக்கேணிப் பிள்ளையார் கோயில் பகுதியில் மகாவலி எல் வலயத்தின் ஊடாக தமிழர்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டு பெரும்பான்மையினர் 33 பேருக்குத் தலா 25 ஏக்கர் வீதம் கொடுக்கப்பட்டுள்ள காணிகளையும் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

வெலிஓயாவில் தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமித்து மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களையும், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் வயல் நிலங்களையும் நேரில் சென்று அவதானித்தனர். முல்லைத்தீவு நாயாறுப் பகுதியில் மாயபுர எனும் பெயரில் அமைக்கப்படவுள்ள திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற நிலப் பகுதியையும் பார்வையிட்டனர். நாயாறுப்பகுதியில் வாடி அமைத்து அனுமதி பெறாது தென்பகுதி மீனவர்கள் மேற்கொள்ளும் தொழில் நடவடிக்கையையும் அவதானித்தனர். (ம-8,ரி3)

## வாள்வெட்டுக்களில்...

தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொடிகாமத்தில் மந்துவில் கிழக்குப் பகுதியில் வாள்வெட்டு இடம்பெற்றுள்ளது. வீதியருகே நின்றிருந்த இளைஞர்கள் மீது மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த நடராசா கீர்த்திகன் (வயது- 21) என்ற இளைஞன் நெஞ்சு மற்றும் காலில் வெட்டுக் காயங்களுக்கு இலக்கானார். அவர் உடனடியாக சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு சேர்க்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் மாற்றப்பட்டார்.

அதேவேளை தெல்லிப்பழைப் பகுதியிலும் வாள்வெட்டுச் சம்பவம் நடந்துள்ளது. அதில் 19வயதுடைய மாணவர் காயமடைந்தார். வீட்டுக்கு வெளியே நின்றிருந்தவர் மீது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த மாணவர் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம21,26)

## மன்னார்...

கிய தேசியக் கட்சி கைப்பற்றியது.

மன்னார் நகர சபையின் முதல் அமர்வு நேற்று மன்னார் நகர சபை சபா மண்டபத்தில் உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் பதவிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சனை முன்மொழிந்தது. சிறிலங்கா பொதுஜன பெரமுன செல்வராசா செல்வகுமரனை முன்மொழிந்தது.

பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்புக்கு அமைய தவிசாளர் தெரிவுக்கான வாக்கெடுப்பு இரகசிய வாக்கெடுப்பாக நடத்தப்பட்டது.

ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் 8 வாக்குகளைப் பெற்று தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். செல்வராசா செல்வகுமரன் 7 வாக்குகுளைப் பெற்றார். 16 உறுப்பினர்களில் 15 பேர் வாக்களித்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் வாக்களிக்காது நடுநிலை வகித்தார்.

உப தவிசாளர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சூசை செபஸ்ரியன் ஜான்சனை முன்மொழிந்தது. ஐக்கிய தேசியக் கட்சி நிலாமுதீன் நகுசீனை முன்மொழிந்தது.

இரகசிய வாக்கெடுப்பில் சூசை செபஸ்ரியன் ஜான்சன் 8 வாக்குகளையும், நிலாமுதீன் நகுசீன் 5 வாக்குகளையும் பெற்றனர். சூசை செபஸ்ரியன் ஜான்சன் உப தவிசாளராகத் தெரிவானார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும், மாகாண சபை உறுப்பினர் பிரிமூஸ் சிராய்வா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கம் ஆகியோர் சபை அமர்வுகளைப் பார்வையிட்டனர்.

மன்னார் பிரதேச சபையின் முதலாவது அமர்வு நேற்று மன்னார் பிரதேச சபையில் உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிசாளர் பதவிககு கொன்சஸ் குலாஸையும், ஐக்கிய தேசியக் கட்சி எஸ்.எச்.முஜாஹிரையும் முன்மொழிந்தன.

பெரும்பான்மையான உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்புக்கு விருப்பம் தெரிவித்ததை அடுத்து தவிசாளர் தெரிவுக்குப் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

எஸ்.எச்.முஜாஹிர் 11 வாக்குகளையும், கொன்சஸ் குலாஸ் 10 வாக்குகளையும் பெற்றனர். எஸ்.எச்.முஜாஹிர் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் இவருக்கு ஆதரவாக வாக்களித்தார். அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த எஸ்.எச்.முஜாஹிர் ஐக்கிய தேசியக் கட்சி ஊடாகத் தேர்தலில் போட்டியிட்டிருந்தார்.

உப தவிசாளர் பதவிக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.இஸ்ஸதீனையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம்.தர்சீனையும் முன்மொழிந்தன.

பகிரங்க வாக்கெடுப்பில் எம்.இஸ்தீன் 11 வாக்குகளையும், எம்.தர்சீன் 9 வாக்குகுளையும் பெற்றனர். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஜே.இன்சாப் நடுநிலைமை வகித்தார்.

அமைச்சர் ரிசரத் ப்தியுதீன், பிரதி அமைச்சர் அமீர் அலி, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும், மாகாண சபை உறுப்பினர் பிரிமூஸ் சிராய்வா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வினோநோகராதலிங்கம், ஹுனைஸ் பாருக், முத்தலீப் பாரூக், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் ஆகியோர் சபை அமர்வுகளைப் பார்வையிட்டனர். (ம-56)

## தெல்லிப்பழை...

குண்டுகள் நேற்று மீட்கப்பட்டன.

நேற்றுக் காலை கிணறைச் சுத்தம் செய்ய முற்பட்டபோது கைக்குண்டுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அது தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாரும், கண்ணிவெடியகற்றும் அ[illegible] சார்பற்ற நிறுவனம் ஒன்றும் இணைந்து கிணற்றிலிருந்து 40 கைக்குண்டுகளை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

## தேவை

அழகுக்கலை நிலையத்திற்கு அழகுக்கலைஞர்கள் வேலைக்கு தேவை. புதிய வகுப்புக்களும் ஆரம்பம். (CS 15588)(11.07)

தொடர்புகளுக்கு : 077 313 1973

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை. *Technical Officer (with 2 yrs experience) *Technical Assistant (with 1 yr experience)

- 077 958 3944 shaganaconstruction@hotmail.com

## காணி விற்பனைக்கு

பழம் றோட், ஆசீர்வாதம் வீதி, 4ஆவது ஒழுங்கை, ஆனைக்கோட்டையில் 21 பரப்பு வயல்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு - 077 662 1906, 0777 344 208

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல எலக்ரோனிக் கடை ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை. (ஆண்கள் மட்டும்)

தொடர்பு - 077 160 7757, 077 691 3299



பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு

## கேள்வி அறிவித்தல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு 2018/ 19 ஆம் ஆண்டுக்கு தேவையான வழங்கல்/ சேவைகள்

1. முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கு 2018/ 19 ஆம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.
   - அ. உலர் உணவு
   - ஆ. சமைத்த உணவு வழங்கல்
   - இ. அழுக்குத் துணிகள் சலவை செய்தல்
   - ஈ. மருத்துவ உபகரணம்

2018 முதல் 2019 வரையான ஒருவருட காலப்பகுதிக்கு வழங்கல்கள். சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 11.04.2018 தொடக்கம் 01.05.2018 ஆம் திகதி வரை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரையும் முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு / தொகுதிக்குக் குறிப்பிட்ட ஒரு வழங்கல்/ சேவைக்கான ஒரு ஆவணத் தொகுதி மட்டும் வழங்கப்படும்.

2. அரசாங்க ஒப்பந்தத்தை செய்ய முடியாதவாறு தடைசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
3. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ்க்குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள் சேவைகள் என்பவற்றுக்கான மீளளிக்கப்படாத வைப்புத்தொகை முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்தியசுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்துக் கேள்வி ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 02.05.2018 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு தலைவர். கேள்விச்சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. முல்லைத்தீவு எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலகப் பெட்டியிலோ இடமுடியும். கேள்விகள் யாவும் 02.05.2018 முற்பகல் 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

A. சமைத்த உணவு வழங்கல்

| வைத்தியசாலை | உணவு வகை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பிணை பணம் (ரூபா) |
|---|---|---|---|
| ஆதாரவைத்தியசாலை,மாங்குளம் | சமைத்த உணவு | 500.00 | 25,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,ஒட்டுசுட்டான் | சமைத்த உணவு | 500.00 | 25,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,முல்லைத்தீவு | சமைத்த உணவு | 500.00 | 25,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,சம்பத்நுவர | சமைத்த உணவு | 500.00 | 25,000.00 |

B. அழுக்குத் துணி சலவை செய்தல்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பிணை பணம் (ரூபா) |
|---|---|---|
| ஆதாரவைத்தியசாலை,மல்லாவி | 300.00 | 2,000.00 |
| ஆதாரவைத்தியசாலை,மாங்குளம் | 300.00 | 2,000.00 |
| ஆதாரவைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | 300.00 | 2,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,நட்டான்கண்டல். | 300.00 | 2,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,ஒட்டுசுட்டான் | 300.00 | 2,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,முல்லைத்தீவு | 300.00 | 2,000.00 |
| பிரதேசவைத்தியசாலை,சம்பத்நுவர | 300.00 | 2,000.00 |
| பிரதேசவைத்தியசாலை, அளம்பில் | 300.00 | 2,000.00 |

C. உலர் உணவு வழங்கல்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பிணை பணம் (ரூபா) |
|---|---|---|
| ஆதார வைத்தியசாலைமல்லாவி | 1000.00 | 50,000.00 |
| ஆதார வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | 1000.00 | 50,000.00 |

D) மருத்துவ உபகரணம்

| Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|
| PSDG/MEP/2018/01 | Multipara Monitor | 04 | 9,000.00 |
| | Sucker | 01 | |
| | Drug Trolly | 02 | |
| PSDG / MEP / 2018 /02 | Hematology Analyzer (3Part) | 01 | 30,000.00 |
| | Microscope | 01 | |
| | Auto Clave | 01 | |
| | Centrifuge | 01 | |

5. மருத்துவ உபகரணப் பொருள்கள் விநியோகம் தொடர்பில் விலைக்கேள்விதாரர் வியாபாரப் பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
6. ஏற்கனவே சேவையை வழங்கிவரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்குப் புதியவர்களாகக் கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.
7. கேள்வி தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
8. மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (தொ.இல. 021 229 0111. Fax : 021 2290104) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.


**வைத்தியகலாநிதி த.பூங்கோதை,**
**தலைவர், பிராந்திய பெறுகைகள்குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு.** (CS/15519)(11.17)



ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ!

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 27 . 11 . 1995



உதிர்வு 14 . 03 . 2018

## அமரர் சச்சிதானந்தன் சாரங்கன்

[உதயன் சவுண்ட் ஒலி, ஒளி அமைப்பாளர்]

கடந்த (14.03.2018) புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புச் செல்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.04.2018) புதன்கிழமை காலை 8.00 மணி அளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 13.04.2018 வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோவிலடி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 838 3045



## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 05 . 1956



மறைவு 09 . 04 . 2018

## சின்னையா தருமலிங்கம்

(Happy Tex, உரிமையாளர்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிட மாகவும் கொண்ட தருமு என அழைக்கப்படும் சின்னையா தருமலிங்கம் (Happy Tex, உரிமையாளர்)(09.04.2018) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா பறுவதம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் யோகம்மா தம்பதியரின் அன்புமருமகனும் விஜிதாவின் அன்புக்கணவரும் வைத்திய கலாநிதி சுரேந்தர், கலாநிதி சுஜித்தர், மீரா, ஆரணி ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, கனகரத்தினம் மற்றும் செல்வரட்ணம், நகுலேஸ்வரி, சோதிராசா ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 863, நாவலர் வீதி, அரியாலை என்னும் முகவரியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று 12.04.2018 வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.

செவ்வாய்க்கிழமை
கொத ஜய
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் : 659 வர்ணம் : மஞ்சள்
திகதி : 2018.04.10
வெற்றி இலக்கங்கள்: 26 42 55 57
ஆங்கில எழுத்து: B
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 13,669,132/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் ▶ 791
சீட்டிழுப்பு திகதி ▶ 2018.04.09 திங்கட்கிழமை
E 06 61 62 71
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 60,797,956/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
பச்சை நிற டிக்கட்டுகள் 2018.04.12ம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

The Thinnai **மாணவர்களுக்கான** GET

## இலவச ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி

**த திண்ணை ஹோட்டல் ஞானம் எடியுகேஷன் டிரஸ்டின்** அனுசரணையுடன் முற்றிலும் இலவசமான, 40,000/= பெறுமதியுள்ள 3 மாத ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி நெறி-யொன்றை ஆரம்பிக்க உள்ளது. கீழ்காணும் தகைமை யுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- வயதெல்லை – 18 - 30 • G.C.E. O/L
- ஆங்கில அறிவு
- விண்ணப்பப்படிவங்களை த திண்ணை ஹோட்டலில் பெற்றுக்கொள்ளமுடியும்
- விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முடிவுத்திகதி **15/04/2018**

**அனுப்பவேண்டிய முகவரி : த திண்ணை 86, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்.**

**தொலைபேசி : இல: 021- 2030 400**

**மின்னஞ்சல் : hr@thethinnai.com**

Courses: Front office, Food & Beverage, House-keeping & Cookery plus English & Sinhala Language Courses

* பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்பட்டு தகுதியுடையோர் தகுந்த ஊதியத்துடன் தொழில் ரீதியாக உள்வாங்கப்படுவார்கள்.

## மரணஅறிவித்தல்



## திருமதி சிவநாயகி பொன்னையா

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் வேப்பங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவநாயகி பொன்னையா 08.04.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஆசைப்பிள்ளை பொன்னையா (சமாதான நீதிவான் முன்னைநாள் கல்விப்பணிப்பாளர் வவுனியா) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்ற லம்போதரன் மற்றும் சோமாஸ்கந்தன், கிரிதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2018) புதன்கிழமை வேப்பங்குளத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.38/1,**
**6 ஆம் ஒழுங்கை,**
**வேப்பங்குளம்,**
**வவுனியா.**

**தகவல்:**
**ஆ.பொன்னையா**
**(கணவர்)**
**சமாதான நீதிவான், முன்னைநாள் கல்விப்பணிப்பாளர் - வவுனியா**

(CS 15590) (14)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே நடவடிக்கை எடுத்துள்ளார் என்று தெரியவருகின்றது.

புதிய அமைச்சர்கள் மூவருக்கு எதிராக மோசடிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

'பிக்கப்' வாகனம் பயன்படுத்தாமல் அதற்குரிய கொடுப்பனவை பெற்றுக் கொண்டமை, தனிப்பட்ட ஆளணியில் நியமிக்கப் பட்டவர்களுடன் கூட்டு வங்கிக் கணக்கு வைத்திருந்து அவர்களின் சம்பளப் பணத்தைப் பெற்றுக் கொண்டமை, தனிப்பட்ட ஆளணியில் பெயர் குறிப்பிட்டு பணியாற்றாதவர்களுக்கு சம்பளம் வழங்கியமை உள்ளிட்ட மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு, வடக்கு மாகாண தலைமைச் செயலரைக் கோரும் கடிதத்தை ஆளுநர் இன்று அனுப்பவுள்ளார் என்று நம்பிக்கையாகத் தெரியவருகின்றது. (ந-5)

## கேக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ்ப்பாணம், ஐந்து சந்திப் பகுதியில் கேக் நிலையம் என்ற போர்வையில் இயங்கிய போதைப் (மாவா) பாக்கு விற்பனை நிலையம் நேற்று முற்றுகையிடப் பட்டது.

சந்தேகநபர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டனர். அதன் உரிமையாளர் புத்தளத்தைச் சேர்ந்தவர் என்றும், கைது செய்யப்பட்டவர்களில் 3 பேர் போதைப் பாக்குக் கொள்வனவு செய்ய வந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விற்பனை நிலையத்தில் இருந்து 50 பாக்குப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்தே இந்த விற்பனை நிலையம் இயங்கி வந்தது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த விற்பனை நிலையம் நீண்டகாலமாக இயங்கி வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. விற்பனை நிலையம் நடத்தியவர்கள் பலமுறை கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்று பிரதேசத் தைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

இந்தநிலையில் வடக்கு மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ரொசான் பெர்னான்டோவின் அறிவுறுத்தலுக்கு அமைய காங்கேசன்துறை தரம் 2 பொலிஸ் அத்தியட்சகர் டி.கே.பிரியந்த தலைமையிலான குழு இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டது. இந்தச் சிறப்புப் பொலிஸ் குழு போதைப் பொருள் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் சிறப்பு நடவடிக்கைகளுக்காக இயங்குகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர் விசாரணைகள் நடைபெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தார். (ந-26,114)

## ராணுவத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் மேற்பார்வையில் யாழ்ப்பாணப் பாதுகாப்பு படை கட்டளை தலைமையகத்தின் சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வில் இந்தப் போட்டியும் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பாதுகாப்பு படை கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி, தெல்லிப்பழைப் பிரதேச செயளாளர் எஸ் சிவ ஸ்ரீ, யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபர், பலாலி விமானப்படை தளபதி குருப் கப்டன் ஜயவீர மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-21)

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 223
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.04.10
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 56,914,950/-
வெற்றி இலக்கங்கள்: 21 26 70 74
ஆங்கில எழுத்து: H
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி: 10.04.2018 | வெற்றி வாரம்: 2279 | வர்ணம்: நீலம்
கடகம்
வெற்றி இலக்கங்கள்: 07 34 51 59
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 5,089,192/=
2018.04.11 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

## எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையம் - யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் யாழ்ப்பாணத்துடன் இணைந்த எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையத்தில் NVQ தரத்திலான கீழ்க்குறிப்பிடப்படும் கற்கைநெறிகள் முழுநேர வகுப்புக்களாக முற்றிலும் இலவசமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1. தகவல் தொடர்பாடலும் தொழில் நுட்பமும் NVQ – III (Computer Applicant Assistant)
2. ஆங்கிலக்கற்கை நெறி NVQ – IV (English)

**பயிற்சி நெறிகளுக்கான தகைமைகள்**

➢ *க.பொ.த சா / தரத்தில் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் சாதாரண சித்தியைக் கொண்டிருத்தல்.*

மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டுள்ள 17 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விருப்பம் உடையவர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு:

தொ.பே: 021-2211342/ 0777859308/ 0777600328/ 0775818638

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**பொன்னையா அழகரத்தினம்**
பிறப்பு 04.02.1947 இறப்பு 23.03.2017

**அழகரத்தினம் புஸ்பவதி**
பிறப்பு 16.02.1949 இறப்பு 01.04.2017

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
பாவப்பட்ட உலகமதில் பாவமாய் நான் வாழ
பாதியிலே என்னைவிட்டு இருவரும் இணைந்து சென்றதென்ன?
பாசமில்லா சகோதரரும் பச்சோந்தி உறவுகளும்
மனதில் கவலையென்றால் ஓடி வந்து
உன்னிடமே சொல்லிப் புலம்பிடுமே
கண்கெட்ட கடவுள் அவன் கொடியநோயை உனக்குத் தந்து
அழைத்துவிட்டான். அவன் உன்னை தன்னிடத்தில்
இடையில் வந்த உறவுகள் இன்னலைத்தந்துவிட
நடுவில் நின்மதியிழந்து நான் வாடுவதைப் பார்த்தாயே
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

என் உயிரில் கலந்த அம்மா, அப்பா
உங்களை இழந்து வாடும் - மகன் (சதீசன்)

## தேவை

மில்வேலையில்
அனுபவம் உள்ளவர்கள் தேவை.
**தொடர்பு - 077 772 2215**

## பெண் வேலையாள்கள் தேவை

*தையல் நிலையத்துக்குப் பெண் வேலையாள்கள் தேவை.*


தொடர்பு:- திருமதி தி.முராளினி
128, ஜெயந்திநகர், கிளிநொச்சி.
Email: gobinujan4@gmail.com
077 472 5344, 077 946 3804
(CS/15554)(11.17)

## தரம் 5 வகுப்பு

புலமைப் பரிசில் மாணவர்களுக்கு வீடுகளுக்கு வந்து பிரத்தியேகமாக ஆசிரியரால் கற்பிக்கப்படும். யாழ்.நகர், திருநெல்வேலி, உரும்பிராய், கோண்டாவில் ஆகிய இடங்களில் வசிப்பவர்கள் மட்டும்தொடர்புகொள்ளவும்.

**தொடர்பு - 077 248 7080**

# ES Printers




**அனைத்து அச்சக தேவைகளும்**

பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்



சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு ( Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

(10)

நவீன சந்தை முதலாம் மாடி
சாவகச்சேரி. 021 492 7432

**357, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

கரடிப் போக்குச் சந்தி, ஏ-9 வீதி,
கிளிநொச்சி. 021 492 7454

esprintersjaffna@gmail.com www.esprinters.com 021 492 7471 / 021 492 7472

## 6 ஆம் மாத நினைவஞ்சலி

அமரர்
**இரத்தினசபாபதி இராஜபாலன்**
(வெள்ளை)



மண்ணில்
15.10.1971

விண்ணில்
11.10.2017


இமைகள் மூடித்திறப்பதற்குள்
மாதங்கள் 6 கடந்து சென்றுவிட்டதே
ஆறாத துயர் மட்டும் இன்னும் ஓய்ந்ததில்லை
மாறாத பந்தமும் நீங்காத நினைவுகளும்.....
நாம் வாழும் நாள்களில் உம் நினைவுகள் என்றென்றும்
எம்முடன் வாழும்...... வாழும்.......

ஜனனி இல்லம்,
இல.45/10, அம்மன் வீதி,
கந்தர் மடம்.

பெற்றோர், சகோதர,
சகோதரிகள்,
மகள் - கபிலஷா

(CS 15565) (14.17)

## ஓராண்டு நீங்காத நினைவலைகளில்...



மலர்வு
10.08.1930

உதிர்வு
23.03.2017

**கணபதிப்பிள்ளை வினாசித்தம்பி**
(வியாபாரி, சமூக சேவையாளர்)



மலர்வு
23.08.1938

உதிர்வு
11.04.2017

**திருமதி வினாசித்தம்பி நாகபூஷணி**
(முன்னாள் மருத்துவமாதி - மூளாய் வைத்தியசாலை,
முன்னாள் மாதர்சங்கத் தலைவி - ஞானிமடம்)

அரிச்சந்திரன் சந்திரமதியாய் இல்லறத்தில் வாழ்ந்து அறுமுகனைப்போல் அறுவரைப் பெற்றெடுத்து
அறிவு ஆற்றல்தனைக் கொடுத்து இன்று ! எம்மை அகிலம் போற்றும் உத்தமர்களாக வாழவைத்து
அவனியில் இணைபிரியாது இறையடி சேர்ந்த அன்புத் தெய்வங்களே. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஜெயபுரம் வடக்கு, பல்லவராயன்கட்டு,பூநகரி.

(ACH/3621)(11.17)

## அறிவித்தல்
## மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்

**வடக்கு மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - 1(அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2017(III)**

மேற்படி போட்டிப் பரீட்சைக்காக 06.07.2017 ஆம் திகதிய தினக்குரல், உதயன் மற்றும் வலம்புரி ஆகிய பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டு வடக்கு மாகாண இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்ட பரீட்சை விளம்பரம் சார்பாக குறித்த பரீட்சை விளம்பரத்தில் தமிழ், வரலாறு, குடியியல், தகவல் தொழில்நுட்பம், விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும், வழிகாட்டலும் ஆலோசனையும் மற்றும் இரண்டாம் மொழி (சிங்களம்) ஆகிய பாடங்களுக்கு நிலவிய 349 பட்டதாரி ஆசிரியர் பதவி வெற்றிடங்களினை நிரப்புதவற்கு ஏதுவாக எம்மால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது.

எனினும் இவற்றில் வழிகாட்டலும் ஆலோசனையும் என்னும் பாடத்திற்கு நிலவிய 47 பட்டதாரி ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்குரிய போட்டிப் பரீட்சையினை நடத்தாது மிகுதிப் பாடங்களுக்குக் காணப்படும் 302 பட்டதாரி ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்குரிய போட்டிப் பரீட்சையினை நடத்துமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அவர்களினால் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிக்கு அமைவாக கோரப்பட்டுள்ளது.

எனவே அதற்கமைவாக வழிகாட்டலும் ஆலாசனையும் என்னும் பாடத்துக்கு மட்டும் விண்ணப்பித்தவர்களுக்கு போட்டிப் பரீட்சை நடாத்தப்படமாட்டாது. எனினும் ஏனைய பாடங்களுடன் சேர்த்து வழிகாட்டலும் ஆலாசனையும் என்னும் பாடத்துக்கு விண்ணப்பித்துத் தகைமையடைந்தவர்களுக்கு குறித்த அப்பாடத்தினை (வழிகாட்டலும் ஆலோசனையும்) தவிர்த்து விண்ணப்பித்த ஏனைய பாடங்களுக்கான போட்டிப் பரீட்சை நடைபெறும் என்பதனையும் விண்ணப்பதாரிகள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சி.ஏ.மோகன்ராஸ்,**
**செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்.**
**11.04.2018**

(IN 6441)(14.17)

## மரண அறிவித்தல்
## திருமதி கமலாம்பிகை சின்னராசா



நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு G.P.S. விளையாட்டரங்க வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை சின்னராசா 09.04.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை சின்னராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கண்மணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குணசிங்கம், பூபாலசிங்கம், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும், ஸ்ரீஸ்கந்தராஜா (ஸ்ரீ - முத்திரைச்சந்தி), ஸ்ரீஸ்கந்தரூபி (ஜேர்மனி), ஸ்ரீரஞ்சினி (கனடா), யசோதரா (கனடா), காஞ்சனா(கொழும்பு), குமுதினி (ஜேர்மனி), வினோதினி (பிரான்ஸ்), சிவராஜா (சுவிஸ்), மைதினி (கனடா), கஜனி (பிரான்ஸ்), ஸ்ரீசங்கர் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சத்தியா, ஆனந்தசெல்வம் (ஜேர்மனி), நகுலேந்திரன் (கனடா), நவரட்ணம் (கனடா), சூரியகாந்தன் (கொழும்பு), திசோ (ஜேர்மனி), தயாளன் (பிரான்ஸ்), பாநிதி (சுவிஸ்), சுதர்ஸன் (கனடா), பாலா (பிரான்ஸ்), ஜெரமி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷர்மிலி, ஷன்யா, மௌலிகா, ஜெலிஷா, ஜெனுஷா, மேனன், ஷஜன், காலஞ்சென்ற சேயோன், கிருஷ்ணபிரியா, பிரசன்னா, மிலேனி, கௌதம், கௌஷான், கௌலினா, வினோத், அனோஜன், அஸ்வினி, ஆகாஷ், ஆர்த்திக், சங்கவி, சபின், கிருத்திகா, கிஷோத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஸ்வத்தின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2018) வியாழக்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**விளையாட்டரங்க வீதி,**
**கல்வியங்காடு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/15592)(11.17)

## நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

### பெறுகைகளுக்கான அழைப்பு

**அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் - கைதடி, மற்றும் சான்றுபெற்ற பாடசாலையும் தடுப்புகாவல் இல்லமும் - அச்சுவேலி என்பவற்றிற்கான. புதிய உலர் உணவுப் பொருள்கள் விநியோகமும் தொற்று நீக்கிப் பொருள்கள் விநியோகமும் - 2018/2019**

1. வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த புதிய உலர் உணவுப் பொருள்கள், சமைத்த உணவு மற்றும் தொற்று நீக்கிப் பொருள்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வரும் நிறுவனங்களுக்குக் கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | நிறுவனங்கள் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 01. | NP/30/02/FB-05/Food.Sup/2018/2019-01 | சான்றுபெற்ற பாடசாலையும் தடுப்பு காவல் இல்லமும் அச்சுவேலி | 50,000 |
| 02. | NP/30/02/FB-05/Food.Sup/2018/2019-02 | அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் ,கைதடி | 50,000 |

2. விலைக் கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கான வியாபார பதிவுடைய ஒரு நபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பிப்பவருக்கு ஆகக் குறைந்தது ஒருவருடம் அரசாங்க நிறுவனத்திற்கு இடையீடின்றி உலர் உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்.

4. பொருத்தமான உத்தரவாதமுறி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக பெறப் பட்டு பெறுகைகளுடனும் வெவ்வேறாக இணைக்கப்படல் வேண்டும். தனித் தனியாக உத்தரவாதமுறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

5. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர் இத்திணைக்களத்தில் கிடைக்கும் "Application for Bid Documents" என்ற படிவத்தினை ஒவ்வொரு நிறுவனத் திற்கும் தனித்தனியாக பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ஒவ்வொன்றுக்கும் ரூபா.1,000/= னை காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 16.04.2018 தொடக்கம் 01.05.2018 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் 25.04.2018 முற்பகல் 10.00 மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக் கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம்.

6. விலைக் கேள்விகள் 04.05.2018 ஆம் திகதி 14.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்களத்தில் ஆணையாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் பிற்பகல் 14.30 மணியளவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

7. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ் காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல. 021 222 8321)

8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகள் நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தி.விஸ்வரூபன்**
**தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,**
**நன்னடத்தை பாதுகவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் வ.மா,**
**மீனாட்சி அம்மன் வீதி,**
**பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி :- 021-205-7102 தொலைநகல் 021-205-7103**

(IN 6448) (14.17)



# நல்லூர் பிரதேச செயலக அணி கூடைப் பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 11
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவால் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில், பெண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலக் அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி மோதியது. நான்கு கால்பகுதிகளாக நடைபெற்ற ஆட்டத்தில் ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய நல்லூர் பிரதேச செயலக அணி 18:11, 29:19, 39:35, 61:44 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.
(ம-23-422)



## வென்றது றோயல்

யாழ்ப்பாணம், ஏப். 11
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்ட தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணி வெற்றிபெற்றது.
யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில், ஊரெழு றோயல் அணியை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் றோயல் வெற்றிபெற்றது.
(ம-23)

## ஹாட்லி தோல்வி

யாழ்ப்பாணம், ஏப். 11
பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி அணிக்கும், மாத்தறை ராகுல கல்லூரி அணிக்கும் இடையே நடைபெற்ற நட்புறவு துடுப்பாட்டத் தொடரில் மாத்தறை ராகுல கல்லூரி அணி 5 இலக்குகளால் வெற்றிபெற்றது. பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ப்ருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி 38.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டிலக்ஸன் 31 ஓட்டங்களைப் பெற்றார்.
90 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ராகுல கல்லூரி அணி 13.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.
(ம-23)

## றேஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்றது



யாழ்ப்பாணம், ஏப். 11
குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.
கொலின்ஸின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து ஸ்மார்ட் போய்ஸ் அணி மோதியது.
ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸ் அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார் நிரோஜன்.
14ஆவது, 19ஆவது நிமிடங்களில் மாதுஜன் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது றேஞ்சர்ஸ் அணி.
இரண்டாவது பாதியாட்டத்திலும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியின் ஆதிக்கம் தொடர்ந்தது. ஆட்டத்தின் 29ஆவது, 34ஆவது நிமிடங்களில் சுஜீவன் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. ஆட்ட நாயகனாக கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியின் சுயாஸ்கரன் தெரிவு செய்யப்பட்டார். (ம-422)

# ஆண்கள் கூடைப்பந்தாட்டத்திலும் நல்லூரிடம் கிண்ணம்



யாழ்ப்பாணம், ஏப். 11
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று முன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. இதில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்ப்பாண பிரதேச செயலக அணி மோதியது.
முதலாவது கால்பகுதியின் ஆட்ட நேர முடிவில் ஆதிக்கம் செலுத்திய நல்லூர் பிரதேச செயலக அணி 20:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது. எனினும் அந்த சுற்றின் முடிவில் 27:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது நல்லூர் பிரதேச செயலகம். மூன்றாவது சுற்றின் முடிவில் 49:31 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும், நான்காவது சுற்றின் முடிவில் 69:44 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும் முன்னிலை பெற்று கிண்ணம் வென்றது நல்லூர் பிரதேச செயலக அணி.
(ம-422,23)

## காயத்தால் விலகினார் கம்மின்ஸ்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் மும்பை அணியில் இடம்பிடித்திருந்த சகலதுறை வீரர் கம்மின்ஸ் காயம் காரணமாக விலகினார். தென்னாபிரிக்கா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் அண்மையில் நடைபெற்ற டெஸ்ட் தொடரின்போது கம்மின்ஸின் முதுகில் காயம் ஏற்பட்டது. காயம் மேலும் வீரியமடைந்து விடக்கூடாது என்பதற்காகவே ஐ.பி.எல். தொடரில் இருந்து அவர் விலகினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)



## டோனிக்கு சென்னை நிர்வாகம் கட்டுப்பாடு

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவரான டோனி, பாதுகாப்பு ஏற்பாடுகள் உறுதிப்படுத்தப்படாத பட்சத்தில் எங்கும் பயணம் செல்லக்கூடாது என்று அன்புக் கட்டளை பிறப்பித்துள்ளது சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் நிர்வாகம்.
வழக்கமாக ஐ.பி.எல். தொடர்கள் நடைபெறும்போது, டோனி தனது மோட்டார் சைக்கிளில் சென்னை வீதிகளில் வலம்வருவது வழக்கம். எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் அவர் பயணித்த ஒளிப்படங்கள் ஊடகங்களால் வெளியிடப்பட்டு அவ்வப்போது பரபரப்பாகும். இவ்வாறிருக்க இந்த வருடம் அவ்வாறான செயற்பாடுகள் எதையும் டோனி செய்யக்கூடாது என்று கட்டளையிட்டுள்ளது சென்னை அணியின் நிர்வாகம். காவிரி மேலாண்மைவாரியம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையால் தமிழகத்தில் பதற்றமான சூழ்நிலை தற்போது தோற்றம் பெற்றுள்ளதை அடுத்தே டோனிக்கு இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம)



# சென். பற்றிக்ஸ் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ்ப்பாண கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் 20 வயது ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் 16ஆவது நிமிடத்தில் சென். பற்றிக்ஸின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் கிறிஸ்தீபன். 21ஆவது நிமிடத்தில் யாழ்ப்பாணம் மத்தியின் கோலைப் பதிவுசெய்தார் பெலின். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்ற நிலையில் முதல் பாதி முடிவுக்கு வந்தது.
இரண்டாவது பாதியின் 12ஆவது நிமிடத்தில் சென். பற்றிக்ஸ் அணியின் இரண்டாவது கோலைப் பதிவு செய்தார் அபிசன். 24ஆவது நிமிடத்தில் சென். பற்றிக்ஸின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார் கெயின்ஸ்.



முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி. (ம-23-422)

## மெஸ்ஸி ஹற்றிக் பார்சா. வென்றது

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.
பார்சிலோனாவை எதிர்த்து லெகான்ஸ் மோதியது. ஆட்டத்தின் 27ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் மெஸ்ஸி. அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் அவர் பார்சிலோனாவின் இரண்டாவது கோலைப் பதிவு செய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது பார்சிலோனா அணி.
68ஆவது நிமிடத்தில் லெகான்ஸின் சார்பாக கோலொன்று பதிவானது. 87ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் சார்பாக மெஸ்ஸி மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வெற்றிபெற்றது. (ம)






## சென்னை சுப்பர் கிங்ஸில் டேவிட் வில்லேக்கு இடம்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார் இங்கிலாந்து வீரர் டேவிட் வில்லே.
கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை, சென்னை அணிகள் மோதின. சென்னை அணியின் வீரர் கேதர் யாதவ் காயத்தால் விலகினார். இதனால் அவரின் இடத்துக்கு பிறிதொரு வீரரை ஒப்பந்தம் செய்யக்கூடிய வாய்ப்பு சென்னைக்கு இருந்தது. அந்த இடத்துக்கு இங்கிலாந்து வீரர் வில்லே நியமிக்கப்பட்டார். (ம)

# 18 வயதுப்பிரிவிலும் பற்றிக்ஸ் சம்பியன்



யாழ்ப்பாணம், ஏப். 11
யாழ்ப்பாணம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் 18 வயதுப் பிரிவிலும் கிண்ணம் வென்றது யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி.
யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளாலும் கோலெதுவும் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:3 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.
(ம-23-422)

# சென்னை அணிக்கு மற்றொரு ‘திக்திக்’ வெற்றி

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் சென்னை - சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா நிர்ணயித்த 203 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் எட்டிப் பிடித்தது சென்னை.

**கொல்கத்தாவின் இன்னிங்ஸ்**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. கொல்கத்தா அணியின் ஆரம்ப வீரர்களாக லின் மற்றும் நரைன். பவுண்டரியுடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார் லின். சிக்சருடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார் நரைன். சாகர் வீசிய முதலாவது பந்துப் பரிமாற்றத்தில் 18 ஓட்டங்கள் வாரி வழங்கப்பட்டன. அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் ஹர்பஜனை பந்துவீச அழைத்தார் டோனி. நரைன் வெளியேற்றப்பட்டார். நரைன் வேகப்பந்து வீச்சுக்கு அடித்தாடும் திறமை படைத்தவராதலால் டோனியின் வியூகம் கச்சிதமாக அமைந்தது. 22 ஓட்டங்களுடன் லின் ஆட்டமிழந்தார். உத்தப்பா 29 ஓட்டங்களையும், ரணா 16 ஓட்டங்களையும் சேர்த்தனர். ஒரு கட்டத்தில் 89 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது கொல்கத்தா. அணித் தலைவர் டினேஸ் கார்த்திக் பொறுப்புணர்ந்து நிதானமாக விளையாடினார். மறுமுனையில் ரசல் அவ்வப்போது அதிரடி காட்டிக் கொண்டிருந்தார். 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் டினேஸ் கார்த்திக். அவர் ஆட்டமிழந்த பின்னர் அதிரடியை ஆரம்பித்தார் ரசல். குறுகிய நேரத்துக்குள் சென்னையின் பந்துவீச்சு வரிசை ரசலால் புரட்டிப் போடப்பட்டது. 26 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் ரசல்.





முடிவில் 6 இலக்குகளை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றிருந்தது கொல்கத்தா. ரசல் 36 பந்துகளில் 88 ஓட்டங்களுடன் களத்தில் ஆட்டமிழக்காதிருந்தார்.

**சென்னையின் இன்னிங்ஸ்**

பதிலுக்குக் களமிறங்கிய சென்னை அணிக்கு ஆரம்ப வீரர்களாக வற்சன் மற்றும் ராயிடு. இருவரும் அதிரடியாக விளையாடி வெற்றிக்கான அத்திபாரத்தை பலமாகவே அமைத்துக் கொடுத்தனர். 200க்கும் அதிக மான சராசரியில் இருவரதும் இன்னிங்ஸ் சென்றுகொண்டிருந்தது. 3.4 பந்துப் பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களைத் தொட்டது சென்னை சுப்பர் கிங்ஸ். அணி 75 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வற்சன். அடுத்த சில நிமிடங்களில் ராயிடுவின் இன்னிங்ஸ் 39 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. ரெய்னா, டோனி இருவரும் ஏமாற்றினர். ரெய்னா வெறும் 14 ஓட்டங்களை மட்டுமே பெற்றார். டோனி, தான் சேர்த்த 25 ஓட்டங்களுக்காக 28 பந்துகளை எதிர்கொண்டார். சென்னை சுப்பர் கிங்ஸ் கடைசிக் கட்டத்தில் ‘தேவையற்ற’ அழுத்தத்துக்குத் தள்ளப்பட டோனியின் மந்தமான சராசரியும் முக்கிய காரணம். கடைசிப் பந்துப்பரிமாற்றத்தில் 17 ஓட்டங்கள் தேவை என்ற நிலை. முதலாவது பந்தை முறையற்ற பந்தாக வீசினார் வினய் குமார். அதற்கு சிக்சரை விளாசினார் பிராவோ. அடுத்த பந்து ‘பிரீ ஹிட்’. அதில் இரண்டு ஓட்டங்கள் சென்னைக்குக் கிடைத்தது. ஆக, இறுதிப் பந்துப்பரிமாற்றத்தின் முதலாவது பந்தில் 9 ஓட்டங்கள் சென்னைக்கு. இதுவே ஆட்டத்தின் திருப்புமுனை. சிக்சருடன் ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் ஜடேயா. (ம)


வடமாகாண
பரீட்சைகளுக்கான
வகுப்புக்கள்
சாரதி
தெரிவு
வியாழன்
9.00 → 1.00
முகாமைத்துவ
உதவியாளர்
வியாழன்
9.00 → 1.30
யாழ்ப்பாணக்
கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். நகர்
021 222 3382



Hiace வான் வாடகைக்கு
நல்ல நிலை Hiace
வாகனம் மாதாந்த
வாடகைக்கு உண்டு.
077 026 1966






31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்

மலர்வு
04 . 04 . 1957



உதிர்வு
15 . 03 . 2018

அமரர் திருமதி அருந்திராதேவி ( சித்திரா)
சிவசுப்பிரமணியம்

கடந்த 15.03.2018 இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு அமரர் திருமதி அருந்திராதேவி (சித்திரா) சிவசுப்பிரமணியம் அவர்களின் மரணச்செய்தி கேட்டு வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் இருந்து முகநூல், தொலைபேசி, குறுந்தகவல்கள், மின்னஞ்சல், துண்டுப் பிரசுரம், பதாகை வாயிலாகவும், மலர்வளையம், மலர்மாலையிட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வழங்கியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். மேலும் இறுதி அஞ்சலியில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இன்று (11.04.2018) புதன்கிழமை காலை 8 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் 13.04.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு பிரார்த்திப்ப தோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
குறிப்பு:- தயவுசெய்து இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
077 968 3964, 021 205 8980

கணவர் - பே. சிவசுப்பிரமணியமும்
(பிரசித்த நொத்தாரிசும், சமாதான நீதிவானும் - அகில இலங்கை)
பிள்ளைகளும்.


# சேப்பாக்கம் மைதானத்தில் செருப்பு வீசி ஆர்ப்பாட்டம்

## வீரர்கள் கடும் அதிருப்தி



ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தின்போது மைதானத்துக்குள் செருப்பு வீச்சு மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவம் சமூக வலைத்தளங்களிலும் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும் புதுடெல்லி இந்த விடயத்தில் அசமந்தப் போக்கையே கடைப்பிடித்து வருகிறது. புதுடெல்லியைக் கண்டித்து தமிழகமெங்கும் தொடர்ந்து போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. ஐ.பி.எல். தொடரை சென்னையில் நடத்தக்கூடாது என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியிருந்தனர். இந்தப் பின்னணியில் சேப்பாக்கம் மைதானத்துக்கு முன்னதாக நேற்றைய ஆட்டம் ஆரம்பிக்கும் முன்னரில் இருந்து நடைபெற்று முடியும் வரை ஆங்காங்கு போராட்டங்கள் நடத்தப்பட்டன. மைதானத்துக்குள் தண்ணீர் போத்தல்கள், கொடிகள், பதாகைகள் உள்ளிட்ட பல பொருள்களைக் கொண்டுசெல்லத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து செருப்புகளைக் கழற்றி மைதானத்துக்குள் வீசியெறிந்து சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் நாம் தமிழர் கட்சியினர் என்று சொல்லப்படுகிறது.

(ம)

பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.